தேவியின்
கண்மணி
06-10-2021
ரூ.20

சுஜாதா நடராஜன்



# மறப்பதில்லை நெஞ்சம்!


நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தபடியே
அன்றைய செய்திகளை தெரிந்துகொள்ள
epaper.malaimurasu.co
என்ற
இணையத்திலும் படிக்கலாம்
தேவியின் கண்மணி இனி
www.magzter.com/p/kanmani
என்ற
இணையத்திலும் படிக்கலாம்
பெண்மணி இனி
www.magzter.com/p/penmani
என்ற
இணையத்திலும் படிக்கலாம்



இந்தியில் கங்கனாவுக்கு டஃப் கொடுக்கும் அளவுக்கு ஹீரோயின் சப்ஜெக்ட் படங்களில் லீடு ரோலில் அசத்தி வருகிறார் டாப்ஸி. ஸ்போர்ட்ஸ் ஜானர் படமான ராஷ்மி ராக்கெட், லூப் லபேட்டா, அனுராக் காஷ்யப்பின் சூப்பர் நேச்சுரல் சயின்ஸ் பிக்ஷன் திரில்லர் மற்றும் கிரிக்கெட் வீராங்கனை மிதாலி ராஜின் பயோபிக் என டாப்ஸியின் கைவசம் எக்கச்சக்க படங்கள் இருக்கிறது. அவருடன் அழகான சிட்சாட்.

# ப்ளான் பண்ணி வேலை செய்யணும்!

-டாப்சி

**❊ ஒரே நேரத்தில் பல விதமான கதைகளில் நடிக்குறீங்களே?**

ஒவ்வொரு படத்திற்கும் உடல் அளவிலும், மன ரீதியாகவும் தயாராக வேண்டியிருக்கு, அதுக்கு வித்தியாசமான நடிப்பும், கடுமையான உழைப்பும் தேவைப்படுது. என் நேரத்தை விரட்டிப் பிடிக்க நான் முயற்சி செஞ்சிட்டிருக்கேன். முடிஞ்ச வரை இந்த வருஷத்திற்குள் கமிட் ஆன படங்களை முடிக்க ட்ரை பண்றேன். முடியாம போச்சுன்னா அடுத்த வருஷத்தில் கால்ஷீட் அட்ஜெஸ்ட்மெண்ட் பண்ண வேண்டியிருக்கும்.

இதுக்கு மேல வொர்க் பிரஷர் தாங்க முடியாதுங்குற அளவுக்கு நானே என்னை இக்கட்டான சூழலில் தள்ளிட்ட மாதிரி ஒரு பீல். நான் பைத்தியம் ஆகுறதுக்குள்ள ஒழுங்கா பிளான் பண்ணி வொர்க் பண்ண கத்துக்கணும். அதே சமயம், என் உழைப்புக்கு தகுந்த பலனும் கிடைச்சிருக்கு. டாப்ஸி மாதிரி படங்களை தேர்வு செஞ்சு நடிக்கணும்னு ரசிகர்கள் சொல்றது சந்தோஷம்.

**❊ லாக்டவுனை எப்படி சமாளிச்சீங்க?**

ரொம்ப சவாலான, மன அழுத்தமான தருணம் அது. என்னுடைய ஸ்போர்ட்ஸ் படங்களுக்காக கடுமையா வொர்க் அவுட் பண்ணியிருந்தேன். ஆனா திடீர்'னு லாக்டவுன் வந்ததால ஷூட்டிங் தள்ளிப் போச்சு. என்னுடைய உடற்கட்டை மெயின்டெயின் பண்றது ரொம்ப கஷ்டமா இருந்தது. 3 மாசம் கஷ்டப்பட்டு வொர்க்அவுட் பண்ணதெல்லாம்



வீணா போயிடுமோன்னு வருத்தமா இருந்தது.

அதே போல, லாக்டவுன் லிப்ட் பண்ண பிறகு ஒரு நேரத்தில் பல படங்கள் நடிக்க வேண்டிய கட்டாயம் உருவாகிடுச்சு. மூச்சு விடக் கூட நேரம் இல்லாத அளவுக்கு 5 படங்களில் நடிச்சிட்டிருக்கேன்.

❄ **புரொடியூசரா புது அவதாரம் எடுத்திருக்கீங்களே?**

ஆமா, அவுட்சைடர் பிலிம்ஸ்னு ஒரு புரொடக்ஷன் ஹவுஸ் ஆரம்பிச்சிருக்கேன். பாலிவுட்க்கு நானும் ஒரு அவுட்சைடர் தான். என்னைப் போலவே என்னோட பேனரை மக்கள் விரும்பி ஏத்துக்கணும்னு நான் ஆசைப்படுறேன்.

அவுட்சைடர்ங்கிற வார்த்தையில் ஒரு பாசிட்டிவிட்டி இருக்குன்னு நம்புறேன். பணம் சம்பாதிக்க தயாரிப்பாளர் ஆகணும்'னு நான் நினைக்கல, நல்ல கதையம்சம் உள்ள படங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கணும், ஒரு நடிகையா செய்ய முடியாததை, தயாரிப்பாளரா செய்யனும், அதுதான் என்னோட நோக்கம்.

❄ **இடையில் கொஞ்ச நாள் தென்னக சினிமாவில் காண முடியவில்லையே?**


அனபெல் சேதுபதி

2017-ம் வருஷம் தான் அந்த முடிவு எடுத்தேன். தமிழ் மட்டுமல்ல, தெலுங்கு படங்களுக்கும் நோ சொல்ல வேண்டிய கட்டாயம் இருந்தது. பெரிய ஹீரோக்கள் படங்களில் டூயட் பாடுறதை வச்சு மார்கெட்டில் எனக்கான ஸ்கோப் தேடுற நிலையை மாத்தணும்னு நினைச்சேன். அப்போ அந்த முடிவு நான் எடுத்த பெரிய ரிஸ்க்னு கூட சொல்லலாம்.

செட் பிராபர்டி மாதிரி நடிச்சிட்டுப் போறதுல எனக்கு விருப்பம் இல்ல. நான் அப்போ எடுத்த ரிஸ்க்குக்கு பலன் கிடைச்சது. பாலிவுட் போகும் போது பெரிய நடிகை ஆகணும்னோ, கோடி கோடியா சம்பாதிக்கணும்னோ நான் நினைக்கல. ஆனா செய்யுற வேலையை விரும்பி



செய்யணும், என்ஜாய் பண்ணி வொர்க் பண்ணனும்'னு நினைச்சேன்.


**❄ உங்களுக்கு கிடைக்கும் வெற்றியை பற்றி?**

என்னோட சந்தோஷம் தான் என் படங்களில் எதிரொலிக்குது. மனசையும், மூளையையும் ஒரு விஷயத்தில் ஆழமா செலுத்தினா அதுக்கான ரிசல்ட் வேற லெவல்ல இருக்கும். அப்படித்தான் என்னோட இந்த சக்சஸ் பயணம் ஆரம்பமாச்சு.

**❄ விஜய் சேதுபதி கூட வொர்க் பண்ண அனுபவத்தை சொல்லுங்க?**

பாலிவுட் ஹீரோவுக்கும், விஜய் சேதுபதிக்கும் என்ன வித்தியாசம்னு நீங்க கேட்க முடியாது. பாலிவுட் ஹீரோக்களே பல பேர் பாலிவுட் ஹீரோ போல இருக்க மாட்டாங்க (சிரிக்கிறார்).

தென்னிந்திய படங்களில் ஹீரோயினை ரொம்ப ஈஸியா மாத்திடுவாங்க, கால்ஷீட் பிரச்சனை வந்தாலோ, சம்பளம் அதிகமா கேட்டாலோ படத்தில் இருந்து தூக்கிடுவாங்க, அப்படி இருக்கும் போது விஜய் சேதுபதி வித்தியாசமா தெரிஞ்சார். அவரை மீட் பண்றதுக்கு முன்னாடியே இம்ப்ரஸ் ஆயிட்டேன். செட்ல ரொம்ப நல்லா நடிச்சாரு, சும்மா வந்தோம், நடிச்சோம்,



போனோம்னு இல்லாம, படத்தில் தன்னோட பங்களிப்பு எல்லா விதமாவும் இருக்கணும்னு நினைக்குற மனுஷன்.

**❄ அடுத்து உங்களோட இலக்கு என்ன?**

பாலிவுட்க்கு போகும்போது ஒரு அஞ்சு வருஷம் தாக்குப்பிடிச்சா பெரிய விஷயம்னு நினைச்சேன். அதுவும், கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டியிருக்கும்னு தான் தோணுச்சு. ஆனா, 5 வருஷங்களில் நான் எத்தனை படங்களில் நடிப்பேன்னு நினைச்சேனோ, அத்தனையும் ஒரே வருடத்தில் நடிச்சிருக்கேன். என்னோட படங்கள் வொர்க் அவுட் ஆகுற வரைக்கும் இந்த சினிமா பயணம் தொடரும். எனக்கான நேரம் வரும் போது சந்தோஷமா வெளியேறிடுவேன். வலுக்கட்டாயமா என் முகத்தை ரசிகர்களுக்கு காட்டி கஷ்டப்படுத்த மாட்டேன். நான் எவ்ளோ காலம் நடிக்கணும்ங்கிறது ரசிகர்கள் கையில் தான் இருக்கு.

**❄ மணிரத்னம் படத்தில் நடிக்குற கனவு என்னாச்சு?**

நான் என்னை பெரிய ஸ்டாரா பீல் பண்ற நாள் வரும் போது, எனக்கு பிடிச்ச இயக்குனர் மணிரத்னம் கிட்ட பேசி எனக்காக ஒரு கதை பண்ண சொல்வேன்னு 5 வருஷங்களுக்கு முன்னாடி சொல்லியிருந்தேன்.

ஒரு சீக்ரெட் சொல்லட்டா, நான் மணி சார் கிட்ட பேசிட்டேன். அவர் கூட வொர்க் பண்ண விரும்புறதா சொன்னேன். அவரும் ரொம்ப சந்தோஷப்பட்டார். ஒரு படத்துக்கான டிஸ்கஷன் நடந்தது, ஆனாலும் அதை அப்போ பண்ண முடியல. இருந்தாலும் எங்க ரெண்டு பேருக்கும் ஓகேன்னு சொல்ற கதை அமையும் போது, எதிர்காலத்தில் நிச்சயம் வொர்க் பண்ணலாம்னு சொல்லியிருக்கார். (வாழ்த்து சொல்லி விடை பெற்றோம்)

**–தவா**

# வலையில் வசீகரித்தது

**நெல்லை அண்ணாச்சி@drkvm**
35 லட்சத்துக்கு 'நீட்' வினாத்தாள் விற்பனை,ஆசிரியர் மூலம் விடையை பெற்று எழுதினர், அது வடக்கு...தாலியை கழற்றி பிறகே exam, இது தமிழ்நாடு...# ' அயோக்கியன் வாழ்வான்...!!!



**நாகராஜசோழன் MA.MLA.@prabhu65290**
செஸ் வரியை கைவிட்டால், நாங்கள் ஜிஎஸ்டிக்குள் வருகிறோம் - நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் # ஆக மொத்தத்தில் பெட்ரோல் டீசல் விலை குறையவே குறையாது... ரொம்ப சங்கடமா இருக்கு நண்பர்களே...

**புகழ் @mekalapugazh**
'நாம் வடக்கே போனால் எளிதாகச் சமாளிக்கலாம்..'என்ற நல்ல எண்ணமெல்லாம் அவர்களுக்கில்லை... 'தமிழ்நாட்டுக்கு வந்தால் அவர்களால் எளிதாக வாழலாம்..'என்ற தன்னல எண்ணம் மட்டுமே..இந்தி ஆதரவாளர்களின் உண்மைநிலை..

**A.P.Perumal@pachaiperumal23**
மனைவிக்கும் அம்மாவுக்கும் மனஸ்தாபம் என்றால் வீட்டுக்கு வரும்போது கடையில் சாப்பிட்டுவிட்டு வருபவர் புத்திசாலி.

**செங்காந்தள்@kumarfaculty**
'உன்கிட்ட மட்டும்தான் சொல்லுகிறேன்.வேறு யாருகிட்டவும் சொல்லிடாதே' என்பதே உலகின் முதல் ஸ்பீடு போஸ்ட்...!!!





இதயவன் @itz_idhayavan
ட்விட்டர், லெட்டர் பேட் கட்சிக்கெல்லாம் பதில் சொல்லி நேரத்தை வீணாக்க விரும்பவில்லை ~ அண்ணாமலை #நோட்டாகிட்ட சண்ட செய்யவே நேரம் சரியா இருக்குனு சொல்றாராம்?!

ரஹீம் கஸ்ஸாலி@RahimGazzali
என் வீட்டில் பறிமுதல் செய்த ரோல்ஸ் ராய்ஸ் ஆரம்பர கார் அல்ல - மாஜி அமைச்சர் கே.சி.வீரமணி # ஆமா.. அம்பாஸிடர் தவிர்த்து ஆடி, ரோல்ஸ் ராய்ஸ், பென்ஸ், ஃபெராரி உட்பட வேற எந்த காரும் சொகுசு கார் அல்ல..!


ரமேஷ் ஏழுமலை@ramesh_twetz
அவனவனுக்கு ஆயிரம் பிரச்சனை என்பதில் 999 பிரச்சனை பணம் சம்மந்தபட்டதா தான் இருக்கும்...!!!

Mannar & company™@Raja Anvar_Offic
அன்று: [பெண்களுக்கு]உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு, இன்று: [ஆண்களுக்கு]உண்டி சுருங்குதல் T.சர்ட்க்கு அழகு!

ஆனந்த் @anand17m
மற்றவர்கள் மனசுல நினைக்கிறது எல்லாம் நமக்கு கேட்க ஆரம்பிச்சா இந்த உலகில் வாழவே முடியாது.. ஏனென்றால் மனிதர்கள் அவ்வளவு நல்லவர்கள்...

balebalu@balebalu
பெற்றோரின் திருமண ஆல்பத்தை பார்க்கும் இந்த கால குழந்தை 'நான் ஏன் அதில் இல்லை' என்ற கேள்விக்கு பதிலா 'ஏன் அதுல யாரும் மாஸ்க் போடவில்லை' என்று கேட்கிறது

தர்மஅடி தர்மலிங்கம்@Vkarthik_puthur
மீண்டும் மோடி பிரதமராக வந்தால்தான் நாடு முன்னேறும்: குஷ்பு.#ஏன் இதுவரைக்கும் நாடு முன்னேறினது பத்தலைங்களா..??



நாகராஜசோழன்.MA.MLA.@prabhu65290yellow
மோடி அரசின் 7 ஆண்டு சாதனை மலர் வெளியீடு.-செய்தி #பெட்ரோல், டீசல், கேஸ் விலை ஏற்றம் பண்ணியதெல்லம் சாதனைனு போட்டிருப்பாங்களோ!



amudu@amuduarattai
ஊரக உள்ளாட்சி தேர்தலில் பதவிகளை ஏலம் விடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். -மாநில தேர்தல் ஆணையம்.# ஓட்டுக்கு பணம் கொடுப்பவர்களை மீது நடவடிக்கை எடுத்தது போலவாங்க ஆபீஸர்.

மெத்த வீட்டான்@HAJAMY-DEENNKS
மிடில் கிளாஸ் மக்களுக்கு கஷ்டங்கள் எல்லாம் விஜய் சேதுபதி படம் மாதிரிஅடுத்தடுத்து வந்துட்டே இருக்கும் !

கயல் விழி.@PandipDevar
அரசு அலுவலகத்தில் இருக்க வேண்டிய வாசகம்...அரசு பேருந்தில் இருக்கிறது - கைகளை நீட்டாதீர்

balebalu@balebalu
உணவு டெலிவரி நிறுவங்களுக்கு GST - செய்தி #அடுத்து சாம்பார் பாக்கெட் க்கு வரி, அதுல கட்டுற நூலுக்கு வரி ன்னு ஆரம்பிச்சுடுவாங்களோ ?

காளையன்..@Giri47436512
புள்ள நல்லது பண்ணா 'தாய போல புள்ள நூல போல சேல'ங்கறது.. தப்பு பண்ணிட்டா 'அப்பனுக்கு புள்ள தப்பாம பொறந்துருக்கு'என்னங்கடா இது.

இதயவன் @itz_idhayavan
நற்பண்பு, நன்னடத்தை, தகுதி, திறமை ஆகிய நான்கு தரங்களின் அடிப்படையிலேயே மக்கள் பிரதிநிதிகளை தோந்தெடுக்க வேண்டும் ~ வெங்கய்யா நாயுடு#எது... ஜி யை திரும்ப டீ போட போக சொல்றீங்களா?!

காளையன்..@Giri47436512
பற்ற வைக்கும்போது 'உடனிருப்பார்கள்..' வெடிக்கும் போது ஓடியிரு ப்பார்கள்..'உறவுகள்'!!...



insta @ amalapaul
போட்டோ சூட் செக்கிங் அமலாபால்



மயக்குநன்@LAKSHMANAN_KL
பூஜை அறையை எட்டிப்பார்க்கும் அதிகாரம் தமிழக அரசுக்கு கிடையாது!- அண்ணாமலை.
#புனிதமான இடத்துல இவனுங்க பண்ணின அசிங்கத்தை எட்டி வேற பார்க்கணுமா..?!

Mannar & company™ @RajaAnvar_Offic
வாழ்க்கைப் பயணம் 'வலிகள்' நிறைஞ்சது மட்டுமல்ல, 'வழிகள்' நிறைஞ்சதும்கூட!



மயக்குநன்@LAKSHMANAN_KL
பாலியல் குற்றச்சாட்டுக்கு ஆளான சரண்ஜித் சிங் சன்னியை பஞ்சாப் முதல்வராக தேர்வு செய்துள்ளார் ராகுல்!- பாஜக மூத்த தலைவர் அமித் மாள்வியா குற்றச்சாட்டு.
#அது... பாஜக தலைவர்களின் அடிப்படைத்தகுதியா மாறி ரொம்ப நாளாச்சுங்களே..?!

கோழியின் கிறுக்கல்!.@Kozhiyaar
'கொரோனா மூன்றாம் அலை வருமா?' என்ற கேள்வியில் உயிர் பயத்தை விட, பண பயமே அதிகமாக தெரிகின்றது!!

அகரன்™@i_akaran
துரோகம் பண்ணாம விசுவாசமா இருக்கத பூட்டுகிட்ட தான் கத்துக்கிட்டனும்.! -பூட்டு உடைஞ்சு போகக் கூட தயாரா இருக்கும் ஆனால் சாவிய மாத்திக்காது.!




தொகுப்பு: ஊர்க்காத்தான்

# அரசியல்லெ... இது சாதாரணமப்பா



கர்நாடகாவில் சர்ச்சைக்கிடமான பாலியல் வீடியோ வைரல் ஆகி வருகிறது. இதில் ஒரு நபரும் ஒரு பெண்ணும் சில நிமிடங்கள் மிகவும் அந்தரங்கமாகப் பேசுவதைப் போன்ற பதிவு இடம் பெற்றுள்ளது. வீடியோவில் சம்பந்தப்பட்ட நபர் முன்னாள் மத்திய மந்திரி சதானந்த கவுடா தான் என்று கூறப்பட்டதை அடுத்து அவர் மறுப்பு தெரிவித்துள்ளார். அந்த வீடியோ மார்பிங் செய்யப்பட்டுள்ளது. அதில் இடம் பெற்றுள்ளது நான் இல்லை என்று சதானந்த கவுடா மறுத்துள்ளார். இருப்பினும் சதானந்த கவுடா விவகாரம் கர்நாடகாவை தொடர்ந்து கலக்கி வருகிறது.

---

போதை லவ் ஜிகாத் குறித்து கேரளாவில் உள்ள பாலா பகுதியைச் சேர்ந்த கத்தோலிக்க பேராயர் ஜோசப் கள்ளரங்காட்டு குற்றம்சாட்டினார். இதற்கு முஸ்லிம் அமைப்புகள் கண்டனமும் மறுப்பும் தெரிவித்தன. இந்நிலையில் போதை லவ் ஜிகாத் விவகாரம் குறித்து விவாதித்து நல்ல தீர்வை எட்ட வேண்டிய சூழ்நிலை வலுத்துள்ளது. எனவே உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்த வேண்டும் என காங்கிரசும் பா.ஜ.க.வும் வற்புறுத்தியுள்ளன.

---

தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களில் இருந்து ராஜ்யசபைக்கு போட்டியின்றி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டனர். ஆனால் மகாராஷ்டிராவில் போட்டி உக்கிரமடைந்துள்ளது. காங்கிரஸ் சார்பில் ரஜினி பாட்டிலும் பா.ஜ.க. சார்பில் சஞ்சய் உபாத்யாயவும் நேரடியாக மோதுகின்றனர். இதில் ரஜினி பாட்டில் வெற்றி பெற பிரகாசமான வாய்ப்புள்ளது என்று கூறப்படுகிறது.



ரஜினிபாட்டில்

–விறலேந்தல்




பிள்ளையைப் போல பாசம் காட்டி வளர்த்த மாடுகள் காணாமல் போனதால் பரிதவிக்கும் கிராமத்து தம்பதியை வைத்து நடக்கும் அரசியல் கூத்து தான் ஒன்லைன்.

பஸ் வசதி, மருத்துவமனை, பள்ளிக்கூடம் என அடிப்படை வசதிகள் எதுவுமில்லாத பூச்சேரி கிராமத்து பிரஜையான குன்னிமுத்து தன் மாடுகளைக் காணோம் என போலீஸ் ஸ்டேஷனுக்கு புகார் கொடுக்கப் போகிறான், இதெல்லாம் ஒரு கேஸுன்னு வந்துட்டியா என விரட்டியடிக்கும் போலீஸ் காணாமல் போன எம்.எல்.ஏ. வீட்டு நாயை தேடுவதில் தீவிரம் காட்டுகிறது.

கல்யாணமாகி நாலைந்து ஆண்டுகளான போதிலும் குன்னிமுத்து, வீராயி இருவரும் தங்களுக்கு குழந்தைகள் இல்லாத குறையை தீர்த்து வைத்த மாடுகளை சொந்த பிள்ளைகளைப் போல வளர்க்கிறார்கள். அதிலும் லோன் வாங்கப் போன இடத்தில் மாடுகளின் காதில் துளையிட வந்ததைப் பொறுக்காமல் காசை வீசி யெறிந்து விட்டு வரும் அளவுக்கு குன்னிமுத்துவுக்கு அந்த மாடுகள் என்றால் உயிர்.

மழையில்லாத ஊரில் விவசாயத்திற்கு வழியில்லாத மக்கள், கிடைத்த வேலையை செய்து பிழைக்கிறார்கள். ஆளுங்கட்சி அமைச்சர் கலந்து கொண்ட கூட்டத்தில், இலவச மாடுகள் தருவதாக ஏமாற்றி வாடகைக்கு மாடுகளை கூட்டி வந்து மீடியா முன்பு டிராமா செய்கிறார்கள். நண்பன் மண்ணுதின்னி கேட்டுக் கொண்டதால் தன் மாடுகளை அந்த கூட்டத்திற்கு அழைத்துப் போகிறான் குன்னிமுத்து.

அவன் வயிற்றை நிறைக்க போன நேரத்தில் மாடுகளை மேடையேற்ற முடியாமல் கட்சிக்காரர்கள் அதை அடித்து நகர்த்த, பதறிப் ஓடிப் போன குன்னிமுத்து மேடையில் அமைச்சரை (எதேச்சையாய்) தள்ளி விட்டு மாடுகளை கூட்டிப் போகிறான். அன்றைய இரவே அவ்விரு மாடுகள் காணாமல் போக, ஊர் ஊராக தேடி அலைகிறான்.

எங்கெங்கோ தேடியும்

கிடைக்காமல், வெத்தலையில் மையிட்டு சொன்ன போலி சாமியாரின் ஆருடம் பலிக்காமல், மாட்டுச் சந்தையில் தன் மாடுகளை தேடப் போனவனை திருடன் என நினைத்து அடித்து உதைக்கும் கும்பல் போலீசில் மாட்டி விடுகிறது.

அந்த ஊருக்கு கவர் ஸ்டோரி செய்ய வந்த மீடியா நிருபரான நர்மதா, போலீசிடம் பேசி அவனை காப்பாற்றுகிறார். அமைச்சரின் ஆட்கள் தான் மாடு களை கடத்தியிருக்க வேண்டும் என்று சந்தேகிக்கும் நர்மதா, குன்னிமுத்துவின் கதையை அமைச்சருடன் தொடர்புபடுத்தி ஒரு பிரேக்கிங் நியூஸ் போட, அது பெரிய அளவில் எதிரொலிக்கிறது.

காணாமல் போன மாடு கிடைக்காததால், வேறு புது மாடுகள் வாங்கித் தருவதாக அமைச்சர் சொல்ல, 'உங்க வீட்டு பிள்ளைங்க, காணாமல் போனா அடுத்த தெரு பிள்ளைங்களை உறவுன்னு சொல்லிக்க முடியுமா' என்று நறுக் கேள்வி கேட்கிறாள் வீராயி. இந்த பிரச்சனையில் தீர்வு கிடைக்கும் முன்பே மீடியா ஆளுங்கட்சி ஆதரவு நிலைப்பாடுடன் அடுத்த பிரேக்கிங் நியூஸுக்கு தயாராகி விட, பூச்சேரி வெறிச்சோடுகிறது.



அதன் பிறகே, அந்த கிராமத்தில் பல நலத்திட்ட உதவிகளை செய்ததாகச் சொல்லி அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் கோடிக்கணக்கில் ஊழல் செய்தது நர்மதாவுக்கு தெரிய வருகிறது.

கிராம மக்களின் அறியாமையை போக்கி, அவர்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைக்க சட்ட போராட்டம் நடத்திய நர்மதாவின் முயற்சி ஜெயித்ததா? குன்னிமுத்து - வீராயி தம்பதிக்கு காணாமல் போன மாடுகள் கிடைத்ததா? போன்ற கேள்விகளுக்கு அரசியல் நெடியுடன் விடை சொல்கிறது மீதிக்கதை.

குன்னிமுத்து வேடத்தில் பொருந்தி நடித்திருக்கும் மித்துன் மாணிக்கம் அறிமுக நடிகர் என்பதைத் தாண்டி பல இடங்களில் உணர்வுப்பூர்வமான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். வீராயி வேடத்தில் கிராமத்து

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| மிதுன் | ● | ● | ● | ○ | ○ |
| ரம்யா-வானி | ● | ● | ● | ○ | ○ |
| திரைக்கதை | ● | ● | ● | ○ | ○ |
| கதை | ● | ● | ● | ◐ | ○ |
| இயக்கம் | ● | ● | ● | ○ | ○ |
| ஒளிப்பதிவு | ● | ● | ● | ○ | ○ |
| இசை | ● | ● | ● | ○ | ○ |
| மொத்தத்தில் | ★ | ★ | ★ | ☆ | ☆ |

பெண்ணாக வரும் ரம்யா பாண்டியன் மாடுகளுக்காக உடைந்து உருகும் காட்சிகளில் ஸ்கோர் செய்கிறார்.

நண்பன் மண்ணுதின்னி வேடத்தில் வரும் வடிவேல் முருகன் டைமிங் ஜோக்கில் அசத்தியிருக்கிறார்.

மீடியா நிருபராக வரும் வாணி போஜன், பூச்சேரி கிராம மகளுக்கு விடிவுகாலம் கொடுக்கும் காட்சிகளில் கவனம் பெறுகிறார்.

முதல் பாதியில் குன்னிமுத்துவின் அப்பத்தாவாக லட்சுமி பாட்டி செய்யும் காமெடியில் அத்தனை யதார்த்தம்.

பின்னணி பாடகர் கிரிஷ் இசையமைப்பில் கிராமத்து வாசம் வீசும் பாடல்கள் ஓகே ரகம், பின்னணி இசை இன்னும் சிறப்பாக இருந்திருக்கலாம்.

கிராமத்து வாழ்வியலை படம் பிடித்திருக்கும் சுகுமாரின் ஒளிப்பதிவில் ட்ரோன் ஷாட்டில் விரியும் ஏரியல் வியூ காட்சிகள் கண்களில் நிறைகிறது.

2 மணி நேரத்தில் படத்தை சுருக்கிய சிவ சரவணன் படத்தொகுப்பில் நீட்டி முழக்கும் நாடகத்தனமான மீடியா காட்சிகளுக்கு கத்தரி போட்டிருக்கலாம்.

கிராமத்து பின்னணியில் அரசியல் நையாண்டியை புகுத்தி கதை அமைத்திருக்கிறார் இயக்குனர் அரிசில் மூர்த்தி. அதே சமயம், மாடுகளுக்கும் மனிதர்களுக்குமான உறவை இன்னும் நெருக்கமாக காட்சிப்படுத்தியிருக்கலாம்.

படத்தின் முதல் பாதியில் இருந்த உயிரோட்டம், பிற்பாதியில் மிஸ் ஆகிறது. கிளைமேக்ஸில் மாடுகளைக் தேடிப் போன குன்னிமுத்துவை மாடுகள் காப்பற்றிக் கூட்டி வருவதெல்லாம் பக்கா சினிமாத்தனம்.

யார் ஆட்சிக்கு வந்தாலும் ஏழைகளின் வாழ்க்கை இவ்வளவு தான் என்பதை குறிக்க டைட்டிலை வித்தியாசமாக யோசித்த இயக்குனர், சில லாஜிக் சறுக்கலை சரி கட்டி திரைக்கதையில் கூடுதல் கவனம் செலுத்தியிருந்தால் தமிழ் சினிமாவில் தவிர்க்க முடியாத படமாக இருந்திருக்கும்.




# மக்களை சுரண்டும்... டோல்கேட் பிஸினஸ்!



வரி, வட்டி, திரை, கிஸ்தி ... என வசனம் பேச இப்போது ஆளில்லை, ஆனால், பேசவேண்டிய தேவை இருக்கிறது. வரி, வட்டி மட்டுமல்ல, அரசுக்கு கட்டணங்கள் செலுத்தியும் மக்கள் களைத்துப்போயிருக்கிறார்கள். அதிலும் சுங்கச் சாவடி கட்டணம் இருக்கிறதே, அதற்கு பயந்து வாகனங்களையே பலர் ஓரங்கட்டிவிட்டனர்.

இந்த லட்சணத்தில் சுங்க சாவடிகளை அதிகரித்தும், கட்டணத்தை உயர்த்தியும் அவ்வப்போது ஒன்றிய அரசு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கும் நிலையில்... 16 டோல்கேட் இருக்க வேண்டிய தமிழகத்தில் 48 டோல்கேட் கண்டறியப்பட்டுள்ளதாகவும், பரனூர், நெமிலி, சென்ன சமுத்திரம், சூரப்பட்டு உள்ளிட்ட 5 சுங்கச்சாவடிகளை அகற்ற விரைவில் ஒன்றிய அமைச்சரை சந்திக்க இருப்பதாகவும் அமைச்சர் எ.வ.வேலு சட்டமன்றத்தில் தகவல் தெரிவித்திருக்கிறார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், அவர் அநாவசியம் என்று சொன்ன சாவடிகளில் அண்மையில் கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் ஒன்று செங்கல்பட்டு அருகேயுள்ள பரனூர் சுங்கச்சாவடி.

இந்த சாவடியிலும், திண்டிவனத்திற்கு முன்பாக ஆத்தூரில் உள்ள சுங்கச்சாவடியிலும் 2005ஆம் ஆண்டு ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த சாலை அமைக்க ரூ.536 கோடி மட்டுமே செலவானதாக




தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

சுங்கச்சாலை அமைக்கப்பட்டது முதல் 2018ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் தேதி வரையிலான 13 ஆண்டுகள் மற்றும் ஆறு மாத காலத்தில் பரனூர், ஆத்தூர் சுங்கச்சாவடிகளில் ரூ.1098 கோடி சுங்கக்கட்டணமாக வசூல் செய்யப்பட்டுள்ளது. அதன்பின் இப்போது வரை எப்படியும் கூடுதலாக ரூ.சுமார் 450 கோடி வசூலிக்கப்பட்டிருக்கும் என்கிறார்கள். சாலை அமைக்க செலவிடப்பட்டதை விட மூன்று மடங்கிற்கும் மேலாக கட்டணம் வசூலிக்கப்பட்டு விட்ட நிலையிலும் இன்னும் வசூல் வேட்டையை தொடர்ந்து வாகனதாரர்களை வதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதுகுறித்து கேள்வி கேட்டால், டோல்கேட் நிர்வாகத்துக்கு பதிலாக



பரனூர் சுங்கச்சாவடி.



தாக்குதலுக்கு உள்ளான பின்.

அரசின் நெடுஞ்சாலை ஆணையமே வலிய வந்து விளக்கம் தருகிறது. ''நெடுஞ்சாலை அமைக்க ரூ.536 கோடி மட்டும் தான் செலவிடப்பட்டது என்றாலும், அதற்கான பணிகள் தொடங்கப்பட்ட நாள் முதல் முடிவடைந்த நாள் வரை பணவீக்கம் (?) கணக்கிடப்பட்டு திட்டச் செலவில் சேர்க்கப்பட்டது. அதனால் திட்டச் செலவு ரூ.770.18 கோடியாக அதிகரித்து விட்டது. அதுமட்டுமின்றி, சுங்கக்கட்டணமாக வசூலிக்கப்பட்ட தொகையில் 4% பராமரிப்புக்காக ஒதுக்கப் பட்டதுடன், இயக்கச் செலவுகள் என்ற பெயரில் 12% கழிக்கப்பட்டது. இத்தகைய கழிவுகளுக்குப் பிறகு சுங்கக்கட்டணமாக ரூ.416.04 கோடி மட்டும் தான் வசூலிக்கப்பட்டிருக்கிறது'' என்று, இப்போதல்ல, 2019ல் விளக்கம் அளித்தது.

பரனூர், ஆத்தூர் ஆகிய இரு சுங்கச்சாவடிகளிலும் ஒரு நாளைக்கு சராசரியாக சுமார் ரூ. 11 லட்சம் மட்டுமே வசூலாகியிருப்பதாக இவர்கள் கணக்கு காட்டினாலும், தினமும் பரனூர் சுங்கச்சாவடியில் மட்டும் தினம் 20 லட்ச ரூபாய் வரை வசூலாகியிருக்கும் என்கின்றனர் அந்தப்பகுதி மக்கள்.

எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பது போல், அந்த உண்மையை டோல் நிர்வாகமே ஒத்து உளறியிருக்கிறது. கடந்த 2020 ஜனவரி 26ஆம் தேதி நள்ளிரவு அரசு பேருந்து ஓட்டுநருக்கும், சுங்கச்சாவடி ஊழியர்களுக்கும் கட்டணம் செலுத்துவது தொடர்பான தகராறில், பேருந்தில் இருந்த பயணிகள் சுங்கச்சாவடியை

**ஃபாஸ்டேக் அறிமுகத்தின்போது ஜம்பமாக சில விதிமுறைகளை அறிவித்தார்கள். சாவடியில் 3 நிமிடங்களுக்கு மேல் காத்திருக்க தேவையில்லை. 100 மீட்டருக்கு மேல் காத்திருக்கும் வாகனங்களின் வரிசை இருந்தால், கட்டணம் செலுத்தாமல் வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படும் என்று கதையடித்தார்கள்.**

**ஆனாலும், மணிக்கணக்கில் நிறுத்தி வைத்து வசூலித்துவிட்டு தான் வாகனங்களை அனுப்புகிறார்கள். டோல்கேட்களில் கட்டணம் செலுத்த வாகனங்கள் வரிசையில் நிற்கும்போது விரயமாகும் பெட்ரோல், டீசல் செலவு, டோல்கேட் கட்டணத்துக்கு இணையாக இருக்கிறது.**

அடித்து நொறுக்கினர். அப்போது அன்றைய வசூலான ரூ.18 லட்சத்தை பயணிகள் திருடிவிட்டதாக டோல்கேட் நிர்வாகம் போலீஸ் புகாரில் தெரிவித்திருந்தது.

கொரோனா சலுகை முடிந்து சுங்கச்சாவடிகள் திறந்த நிலையில், செங்கல்பட்டு அருகே உள்ள பரனூர் சுங்க சாவடியில் கட்டணம் வசூல் செய்யக்கூடாது என்று அம்மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார். இந்நிலையில்தான் அங்கு கடந்த ஆகஸ்ட் 31 நள்ளிரவு முதல் கட்டண உயர்வு அமல்படுத்தப்பட்டுள்ளது.

சட்டப்படி ஒன்றிய அரசுக்கு டோல்கேட் அமைக்க உரிமையே இல்லை, மாநில அரசுக்குத்தான் உண்டு என்றும் பலர் சட்ட ரீதியாக வாதிடுகின்றனர். ஆனாலும், நீதிமன்றம் கூட அதற்கு செவி சாய்க்கவில்லை.

இந்தியாவில் மார்ச் 2020 நிலவரப்படி 29,666 கி.மீ நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலையில் 566 சுங்கச்சாவடிகள் செயல்படுகின்றன. தமிழகத்தில் 5,400 கி.மீ நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் (தற்போது இதை 6,741.5 ஆக உயர்த்தியுள்ளதாக நெடுஞ்சாலை அமைச்சகம் தெரிவித்துள்ளது) 48 சுங்கச்சாவடிகள் இயங்குகின்றன. (சாலை நீளம்

**தேசிய நெடுஞ்சாலைகள் விரைவான, விபத்தற்ற பயணத்துக்காகவே அமைக்கப்பட்டன. அவற்றில் ஆங்காங்கே டோல்கேட் அமைத்து நிறுத்தி வசூலிப்பதன் மூலம் அதன் நோக்கமே வீணாகிறது. சாலை அமைத்து மக்கள் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்வதுதானே ஒரு அரசாங்கத்தின் பணியல்லவா? அந்தக் காலத்தில் அசோகர், அக்பர், ராணி மங்கம்மாள் போன்றோர் சாலை அமைத்து போக்குவரத்து வசதி செய்ததாக வரலாறு இருக்கிறது. ஆனால், சாவடி அமைத்து ராவடி வசூலில் ஈடுபடவில்லை.**

குறைவாக இருந்தபோது 54 சாவடிகள் இருந்தன).

கடந்த 2018 - 19ல் தமிழ்நாட்டில் உள்ள 54 கட்டண சாவடிகளில் 2,549.12 கோடி வசூலிக்கப்பட்டதாக நிதின் கட்கரி நாடாளுமன்றத்தில் எழுத்துப்பூர்வமாக பதிலளித்துள்ளார். அதாவது, மாதந்தோறும் சராசரியாக 212.42 கோடி, தினப்படி ரூ.6.98 கோடி வசூலாவதாக அவர் கூறினார்.

மத்திய அமைச்சகத்தின் தரவுகளின்படி, அந்த ஆண்டில், ஒன்றியத்தின் சுங்கச்சாவடிகளில் சேகரிக்கப்பட்ட மொத்த வருவாயில் 11% தமிழ்நாட்டின் பங்கு. இந்தியா முழுவதும் அந்த ஓராண்டில் 31,570 கட்டண சாவடிகளில் 24,396.19 கோடி. மாதாந்தர வசூல் 2033 கோடி, தினப்படி வசூல் 66.84 கோடி.

ஒன்றியத்தில் ராஜஸ்தான், உத்தர பிரதேசத்துக்கு அடுத்தபடியாக குஜராத்தும் தமிழ்நாடும் அதிக டோல் கட்டணம் வழங்கும் மாநிலமாக இருக்கிறது. 2018 - 19ல் உத்தர பிரதேச மாநில 55 டோல்களிலிருந்து வருவாய் ரூ.1,525 கோடி. குஜராத்தின் 36 டோல் வருவாய் ரூ.1059 கோடி, தமிழ்நாட்டின் 52 டோல் வருவாய் ரூ.1,036 கோடி.

இந்த சுங்கச்சாவடிகளில் ஆண்டுதோறும் கட்டணங்களை உயர்த்திக்கொள்வதற்கு தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது. அவ்வாறு அனுகூலம் செய்தாலும், சாலைகளை பராமரிக்காமலும்,

அடிப்படை வசதி செய்யாமலும் கட்டண வசூல் ஒன்றே குறிக்கோளாய் டோல்கேட்டுகள் இயங்குகின்றன.

'நல்ல சாலை வேண்டும் என்றால் டோல்கேட் கட்டணம் செலுத்தியே ஆகவேண்டும்' என மத்திய அமைச்சர் நிதின் கட்கரி செ ால்லியுள்ளார். அப்படியென்றால், தற்போது நம் ஒன்றியத்தில் 2 கோடிக்கு மேல் வாகனங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்த வாகனங்களுக்காக வசூலிக்கப்படும் சாலைவரி, எரிபொருள் போடுவதன் மூலம் பிடித்தம் செய்யும் சாலைவரி, பல்லாயிரம் கோடி அரசுக்கு செல்கிறது. அவற்றையெல்லாம் அரசு என்ன செய்கிறது என்று பொருளாதார நிபுணர்களே குழம்புகின்றனர்.

**டோ**ல்கேட் அமைத்து கொள்ளையடிப்பதில் ரிலையன்ஸ் உள்ளிட்ட தமியார் நிறுவனங்களே முன்னணியில் இருக்கின்றன. இந்தியா


எ.வ.வேலு


நிதின்கட்காரி

முழுவதும் 70% டோல்கேட் மையங்கள் கார்ப்பரேட்டுகளுக்கு சொந்தமாகிவிட்டன. எல் அண்ட் ஜி, ரிலையன்ஸ், பி.வி.ஆர் நிறுவனங்கள் இந்திய நெடுஞ்சாலைகள் அனைத்தையும் ஒப்பந்தத்தின் மூலம் கட்டுப்படுத்துகின்றன.

2019 - 2020ல் தனியார் நிறுவனத்தார் சுமார் 12,598 கிமீ தூரத்துக்கு சுங்க சாவடிகள் அமைத்ததில், ரூ 16,293 கோடி வரை ஆண்டுக்கு வசூலித்துள்ளனர். அதாவது, சராசரியாக, ஆண்டுக்கு ஒரு கிமீக்கு ரூ.1.29 கோடி வசூலித்துள்ளனர். அதைவிட அதிகமான தூரத்தில், அதாவது 16,387 கி.மீட்டரில் சாவடிகள் அமைத்த நெடுஞ்சாலை ஆணையத்தார் ஆண்டுக்கு ரூ.7,979 கோடியே வசூலித்துள்ளனர். அதாவது ஆண்டுக்கு, ஒரு கி.மீக்கு 49 லட்சமே வசூலித்துள்ளனர். ஆக, தனியார் நிறுவனத்தார் டோல்கேட் வசூலில் கொடிக ட்டி பறக்கின்றனர்.

கிருஷ்ணகிரி - தொப்பூர்

நாற்கர சாலைக்கு ரூ. 160 கோடி செலவிடப்பட்ட தாகவும், இந்தச் சாலையில் சுங்கவரி மூலம் தனியார் நிறுவனத்துக்குச் சராசரியாக மாதத்துக்கு ரூ. 3 கோடி அளவுக்கு வசூலாவதாகவும், இத்தனியார் சுங்கத்துக்கு 25 ஆண்டுகால ஒப்பந்தம் அளிக்கப்பட்டுள்ளது. இதை கணக்கிட்டால் டோல் வசூலின் கொள்ளை லாபம் தெரியும் என்று தமிழக லாரி உரிமையாளர்கள் பட்டியலிட்டுள்ளனர்.

இந்தியாவில் 5 ஆண்டு களுக்கு முன் அமைக்கப்பட்ட அனைத்து நெடுஞ்ச ாலைகளிலும் முதலீடு எடுக்கப்பட்டு விட்டது. ஆனால், வருவாயைக் குறைத்துக் காட்டி, தொடர்ந்து முழுமையான சுங்கக் கட்டணத்தை தனியார் நிறுவனங்கள் வசூலித்து வருகின்றன. இந்த மோசடிக்கு மத்திய அரசும் உடந்தையாக உள்ளது.

> **தமிழ்நாட்டில் பெரும்பாலான டோல்கேட்கள் 2003, 204, 2009ஆம் ஆண்டு களில் திறக்கப்பட்டவை. ச ாலைகள் அமைப்பதற்கான முதலீட்டை வட்டியுடன் எடுத்த பின்பும் அவற்றில் முழுமையான சுங்கக்கட்டணம் வசூலிக்கப்படுகிறது.சாலை அமைக்கப்பட்டதற்கான செலவை வசூல் செய்த பின், சுங்கச் சாவடிகளின் கட் டணத்தை குறைக்க வேண்டும் என்பது, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் விதி. ஆனால், சாலை விரிவாக்கம் என்ற பெயரில், கட்டண உயர்வு மட்டுமே அமலாகி வருகிறது.**

புதிதாக சாலை அமைத்து சுங்கம் வசூலிக்க ஒப்பந்தம் பெற்ற நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் காலாவதியான பின்னர், அந்த சாலை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் நேரடி கட்டுப்பாட்டிற்கு வந்துவிடும். அப்போது சாலையை பராமரிக்க புதிதாக ஒப்பந்தம் எடுக்கும் நிறுவனங்கள் 40 சதவீதம் கட்டணம் மட்டுமே வாகன ஓட்டிகளிடம் வசூலிக்க வேண்டும் என்பது விதி. அதனையும் பெரும்பாலான ஒப்பந்ததாரர்கள் பின்பற்றுவதில்லை.

இப்படி அடாவடி வசூல் செய்தாலும், உலக வங்கியில் வாங்கிய

கடனுக்கு இன்னும் வட்டி கட்ட முடியாமல் நெடுஞ்ச ாலை ஆணையம் தவிக்கிறது. 2019 கணக்குப்படி இந்திய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு இருந்த கடன் 1.88 லட்சம் கோடி ரூபாய். இதற்கான வட்டி மட்டும் ஆண்டுக்கு ரூ. 14,000 கோடி. அந்தக்கடனிலிருந்தும் அரசு மீளாது, அரசின் இந்தக் கட்டண வசூலில் இருந்தும் மக்கள் மீள மாட்டார்கள் என்பதே யதார்த்தமாக இருக்கிறது. இப்படி வசூலால் மக்கள் வாடிக்கொண்டிருக்க, 'சுங்க வசூலுக்கு ஜிபிஎஸ் பயன்படுத்துவதன் மூலம், அடுத்த ஐந்து ஆண்டுகளில் வருமானம் ரூ 1.34 லட்சம் கோடியாக இருக்கும்' என்று அமைச்சர் நிதின் கட்கரி குதூகலமாக சொல்லிக்கொண்டிருக்கிறார்.

பெட்ரோல் விலை உயர்வால் அல்ல, டோல்கேட் கட்டண உயர்வால் விலைவாசி அதிகரிக்கும் விந்தை இப்போது நிகழ்கிறது. ஆனாலும், டோல் வசூலை விட அரசே தயாராக இல்லை. அதற்கு பொன் முட்டையிடும் வாத்தாக நெடுஞ்சாலைகள் இருக்கின்றன. 'அடுத்த 5 ஆண்டுகளில், தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் வருடாந்திர சுங்கச்சாவடி வருவாய் ரூ.40 ஆயிரம் கோடியில் இருந்து ரூ.1 லட்சத்து 40 ஆயிரம் கோடியாக உயரும்' என்கிறார் நிதின் கட்கரி.

ஆக..மத்திய அரசு டோல்கேட் கட்டணத்தை சாலை பராமரிப்பு, சீரமைப்புக்கான வரவாக பார்க்காமல், ஒட்டுமொத்த பட்ஜெட் டுக்கும் ஏற்ற வருவாயாக பார்க்கத்தொடங்கிவிட்டது. அதனால், காலாவதியாகி, கட்டண வசூலால் கந்து வட்டி அளவுக்கு சம்பாதித்த சாவடிகளை கூட அது மூடத் தயாராக இல்லை.

அதாவது, சாலை பராமரிப்புக்கு என்றில்லாமல், அரசின் கூடுதல் வருமானத்துக்காகவே டோல்கேட் வசூலை ஒரு வியாபாரம் போல் தொடர்கிறார்கள். எனவே, இனியும் இந்த கந்துவட்டி வசூலுக்காக கொந்தளிக்காமல், ஆண்டுதோறும் நம் மூலம் அரசுக்கு இவ்வளவு தொகை கிடைக்கிறது என்று டாஸ்மாக் குடிமக்கள் போல் நாமும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்... அவ்வளவே.

**–நெல்லைபரிதி**



இப்போதெல்லாம் நடிகை ஸ்ருதி ஹாசன் அடிக்கடி மனநலம் குறித்து தான் அதிகம் பேசுகிறார். குறிப்பாக கொரானா தொற்று காலத்தில் அதிகமாகவே பேசினார். மனநல பிரச்சினை என்றால் விழிப்புடன் இருப்பது முக்கியம் என்கிறார். மாறாக 'நான் நன்றாக இருக்கிறேன்' என்ற மனப்பான்மையுடன் பிரச்சினையை மூடி மறைக்க வேண்டாம் என்றும் எச்சரிக்கிறார்.

# மன ஆரோக்கியம்... எளிமையானது!

- ஸ்ருதி ஹாசன்

**மனநலம் பற்றிய பேச்சு உங்களிடம் அதிகமாக இருக்கிறதே ஏன்?**


மன ஆரோக்கியம் மிகவும் எளிமையானது. அதே நேரத்தில் மிகவும் சிக்கலானது. உங்களுக்கு வயிற்றுவலி இருந்தால், ஓமம் அல்லது தயிர் சாப்பிடலாம். முதல் நாளில் காரமான உணவுப் பொருட்களைத் தவிர்க்கலாம். நான் எப்போதும் இதைத்தான் கூறுவேன்.

2-வது நாளும் வயிற்று வலி தீரவில்லை என்றால் 3-வது நாள் டாக்டரை தேடிச் செல்வீர்கள். அப்போது குடும்பத்தில் இருப்பவர்கள் நாங்கள் இருக்கும் போது நீ ஏன் மருத்துவர் உதவியை நாட வேண்டும் என்று சொல்லமாட்டார்கள். காரணம் சிகிச்சைக்குப் பின்னரே வயிற்றுவலி குணமாகும் என்பது அவர்களுக்கு தெரியும். அதைப்போன்றது தான் மனநலமும். அதற்கு சிகிச்சை அவசியம் தேவைப்படும்.

**மனநலம் குறித்து இவ்வளவு விரிவாக பேசுகிறீர்களே... எப்படி?**

மன ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை, நம்மிடம் இருக்கக்கூடிய மோசமான அணுகுமுறை 'நான் நலமாக





இருக்கிறேன்' என்பது தான். பலர் தங்களுக்குத் தேவையான உதவி பற்றி கூட தெரியாது. நான் ஒரு உளவியல் மாணவி. ஆனால் படிப்பை நான்பாதியில் நிறுத்தி விட் டேன் என்றாலும் உளவியல் படிப்பை தொடர்கிறேன். எனக்கு மன நல சிகிச்சை அளிக்கும் டாக்டர்கள் நண்பர்களாக உள்ளனர்.

நான் இளமையாக இருந்தபோது சிகிச்சையில் இருந்தேன். 'சிறிது நேரம் தேவை' என்று சொல்லக் கூட எனக்கு சிறிது நேரம் தேவைப்பட்டது. ஒரு நடிகையாக நான் உதவி பெற வேண்டியதன் அவசியத்தை ஒப்புக்கொண்டபோது எனது வாழ்க்கை மாறியது.

மனநலம் என்பது எளிதான விஷயம் அல்ல. இதைப் பற்றி பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது. யாராவது இதைப் படிக்கிறார்கள் என்றால் அதனால் நிச்சயம் மாற்றம் ஏற்படும்.

**✦ கொரோனா காலத்தில் எப்படி இருந்தீர்கள்?**

கொரோனா தாக்கியபோது, எல்லோரும் அதைப் பற்றி பேசத் தொடங்கினர். ஏனெனில் அது விவாதிக்கப்பட வேண்டியதாக இருந்தது. மக்களுக்கு பொருளாதார

இழப்பு ஏற்பட்டது. அன்பு மற்றும் கட்டுப்பாட்டை இழப்பது போன்ற உணர்வை உணர்ந்தனர். இப்போது ஒரு நல்ல மாற்றத்தை பார்க்கிறேன். குறிப்பாக இந்தியாவில், மக்கள் இதைப் பற்றி அதிகம் பேசுகிறார்கள். மனநல விழிப்புணர்வு முன்னணியில் வந்துவிட்டது என்று நான் உண்மையாக நம்புகிறேன்.

மக்கள் மனநலம் பற்றி புரிந்துகொள்ள பல வழிகள் உள்ளன. தொலைதூரத்தின் காரணமாக ஆன்லைனில் நீங்கள் உதவி பெற முடியும். ஜூம் அழைப்புகள் அல்லது ஸ்கைப் அழைப்புகள் மூலம் தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது மக்களுக்குத் தெரியும் என்பதால் இதை சொல்கிறேன். நான் இப்போதும் நீண்ட தூரம் உள்ள டாக்டரிடம் தான் சிகிச்சை பெறுகிறேன். ஏனென்றால் எனது டாக்டர் லண்டனில் இருக்கிறார்.

**-திருமகன்**



# அரசியல்ல... இது சாதாரணமப்பா

மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அமைச்சரவை பதவியேற்று சுமார் 5 மாதங்கள் ஆகிவிட்ட நிலையில் சலசலப்பு உச்சம் பெற்று வருகிறது. எனவே இன்னும் சில வாரங்களில் சில அமைச்சர்கள் விலக்கப்படவும் புதியவர்கள் அமைச்சரவையில் சேர்க்கப்படவும் வாய்ப்புள்ளது என்று கூறப்படுகிறது. குறைந்தபட்சம் அமைச்சர்களின் இலாகாக்களாவது மாற்றப்படும் என்று சொல்லப்படுகிறது.



---

இந்தியாவில் உள்ள 25 உயர் நீதிமன்றங்களில் 1098 நீதிபதி பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. ஆனால் சுமார் 40 சதவீத பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்நிலையில் உயர் நீதிமன்றங்களின் கொலிஜியம் பரிந்துரைத்த 100 பெயர்களில் 68 பெயர்களை இறுதி செய்து, மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்ற கொலிஜியம் பரிந்துரைத்தது. ஆனால் இது குறித்து எந்த முடிவையும் எடுக்காமல் மத்திய அரசு இழுத்தடித்து வருகிறது.

---



சமீபத்தில் மத்திய பிரதேச முன்னாள் முதல்-மந்திரியும், பாஜக மூத்த தலைவருமான உமா பாரதி அதிகாரவர்க்கம் என்பது ஒன்றுமில்லை. நமது செருப்பை எடுத்து கொடுப்பதற்காகவே அதிகாரிகள் இங்கு பணி செய்து வருகின்றனர். அவர்களுக்கு நிர்வாகத் திறமை இல்லை. இதனை இந்திய மக்களாகிய நாம்தான் அனுமதித்து உள்ளோம் என்று கூறினார். இது உடனே வைரல் ஆனது. இதனையடுத்து அரசுத்துறை அதிகாரிகள், ஊழியர்கள் பலரும் தங்களது எதிர்ப்பை சமூக ஊடக பக்கங்களில் பதிவு செய்தனர். இதையடுத்து, உமா பாரதி மன்னிப்பு கோரினார்.

–விறலேந்தல்



ஆப்கன் தலிபான்


5

மினி தொடர்

# பாலின பாரபட்சம்!







கி.மு. 256-ம் ஆண்டு முதல் கி.மு. 100-ம் ஆண்டு வரை ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட மத்திய ஆசியா மற்றும் இந்திய துணை கண்டத்தை கிரேக்க-பாக்திரியா பேரரசு ஆட்சி செய்தது. இதன் பிறகு கி.பி. 30 முதல் கி.பி. 375-ம் ஆண்டு வரை மத்திய ஆசியா மற்றும் இந்தியாவின் பெரும் பகுதியை குஷான பேரரசு ஆட்சி செய்தது.



குஷான பேரரசில் தலைசிறந்த அரசராக கனிஷ்கர் விளங்கினார். அந்த ஆட்சி காலத்தில் பவுத்த, இந்து மதங்கள் பின்பற்றப்பட்டன.

கடந்த 1978-ம் ஆண்டில் கிரேக்க, ரஷ்ய வம்சாவளியை சேர்ந்த அகழ்வு

**தலிபான்களின் ஆட்சியில் பெண்களுக்கு இடமில்லை என்பது சர்வதேச அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. தலிபான் அமைச்சரவை அண்மையில் விரிவாக்கப்பட்டது. இதில் துணை அமைச்சர்களாக பலர் நியமிக்கப்பட்டார்கள். எனினும் எந்த பெண்ணுக்கும் அமைச்சரவையில் இடமளிக்கப்படவில்லை. அமைச்சரவையில் பெண்ணை சேர்ப்பது குறித்து இதுவரை எந்த முடியும் எடுக்கப்படவில்லை. எதிர்காலத்தில் இது குறித்து தீர்க்கமாக ஆலோசித்து முடிவு எடுக்கப்படும் என்று தலிபான் செய்தி தொடர்பாளர் சபி ஹுல்லா முஜாகித் தெரிவித்துள்ளார்.**



சபி ஹுல்லா முஜாகித்

ஆராய்ச்சியாளர் விக்டர் சரியானிடி தலைமையில் ஆப்கானிஸ்தானின் டில்யாமலைப் பகுதியில் அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டது. அப்போது 6 கல்லறைகளில் இருந்து 20,000-க்கும்மேற்பட்ட பொன் நகைகள், தங்கத்திலான பொருட்கள், சுவர்ண நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவை கிரேக்க- பாக்திரியா மற்றும் குஷான பேரரசுகளின் ஆட்சி காலத்தை சேர்ந்தவை என்பது தெரியவந்தது. இந்த தங்கப் புதையல் தொகுப்பு, 'பாக்திரியா தங்கம்' என்றழைக்கப்படுகிறது. இது பல ஆயிரம் கோடி மதிப்புடையதாகும்.

அமெரிக்கப் படைகளின் ஆதரவுடன் ஆப்கானிஸ்தானில் ஆட்சி நடைபெற்றபோது, 'பாக்திரியா தங்கம்'

காபூலில்உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டு இருந்தது.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேறிய நிலையில் கடந்த ஆகஸ்ட் 15-ம் தேதி அந்த நாடு முழுவதும் தலிபான்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

இந்நிலையில், இந்த தங்கப்புதையல் தொகுப்பு மாயமாகிவிட்டது. இது இப்போது எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. தங்கப்புதையல் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது.

**ச**ரி தற்கால ஆப்கான் அரசியலுக்கு வருவோம்.

பெண்கள் இல்லாமல் அலுவலகங்கள் இயங்க முடியும். பள்ளிக்கூடங்கள் செயல்பட முடியும். கல்லூரிகள் இயங்க முடியும். தொழிற்சாலைகளில் பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். ஆனால் பெண்கள் இல்லாமல் குடும்பம் இயங்க முடியுமா? துரதிர்ஷ்டவசமாக, இதை தலிபான்கள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

**மு**ற்காலத்தில் ஆப்கானிஸ்தானில் பெண்கள் பொது வாழ்க்கையில் பங்கெடுத்துக் கொண்டதில்லை என்பது உண்மையின் பிரதிபலிப்பு அல்ல. தலிபான்களின் ஆதிக்கம் உச்சம் பெறுவதற்கு முன் , ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கு சட்டப்பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது. அவர்கள் படிப்படியாக எல்லாத் துறைகளிலும் முன்னேறி வந்தனர்.



**கனிஷ்கர்**

1920-களில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. 1960களில் ஆப்கானிஸ்தான் அரசியல் அமைப்பு பெண்களுக்கு சம உரிமையை வழங்கியது. சமத்துவமும் ஜனநாயகமும் கொண்ட பாதையில் ஆப்கானிஸ்தான் பயணிக்க தொடங்கியது. ரஷ்யாவின் ஆதிக்கத்தின் கீழ் ஆப்கானிஸ்தான் இருந்த போது முற்போக்கு திட்டங்கள் அமலாக்கப்பட்டன. பெண்களின் நிலை மேம்பாடு அடைந்து வந்தது.

1970-களின் பிற்பகுதியில்

ஆப்கானிஸ்தான் சட்டமன்றத்தில் 15 சதவிகிதம் பெண்கள் இருந்தார்கள். 1990 களின் முற்பகுதியில் அரசு ஊழியர்களில் ஏறத்தாழ சம அளவிற்கு பெண்கள் இருந்தன. காபூல் நகர மருத்துவர்களில் 40 சதவீதத்தினர் பெண்கள். பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கு எந்த வகையிலும் மாணவிகள் சளைப்பில்லை என்பது நிலைநாட்டப்பட்டு இருந்தது.

1996-ல் காபூல் பல்கலைக்கழகத்தை தலிபான்கள் மூடிய போது அங்கு சுமார் 4,000 மாணவிகள் இருந்தனர்.

**தி**ருமணம், விவாகரத்து, சொத்துரிமைகள், போன்றவை தொடர்பாக பெண்களின் உரிமைகளை வரையறுக்கும் குறிப்பிட்ட ஏற்பாடுகளை இஸ்லாம் கொண்டுள்ளது. சில வேறுபாடுகள் உள்ளன என்பதையும் உதரித்தள்ள முடியாது. எனினும் பொதுவாக உலக முஸ்லிம்கள் நம்பும் இஸ்லாத்தின் பதிப்பை தலிபான்கள் ஏற்கவில்லை.

பெண்களின் எல்லா



விக்டர் சரியானிடி

உரிமைகளையும் தலிபான்கள் பறித்துவிட்டனர். இது எந்த அளவிற்கு மோசமான நிலையை எட்டியது என்றால்... பொது இடங்களில் பெண்களுக்கான கழிப்பிடங்களுக்கு கூட தடை விதிக்கப்பட்டது. சீர் உடையில் இருந்த பள்ளி மாணவிகள் மீது அமிலத்தாக்குதல் நடத்தப்பட்டன.

பெண்கள் அலங்காரம் செய்யக் கூடாது. சத்தமாக பேசக்கூடாது, சிரிக்கவும் கூடாது. வெள்ளைக் காலணி அணிந்ததர்காக 7 வயது சிறுமியின் கால் அடித்து நொறுக்கப்பட்டது, அகிலம் முழுவதும் வைரல் ஆனதை மறக்க முடியாது.

பெண்கள் விளையாட்டு நிகழ்ச்சிகளிலோ, பொழுது போக்கு விழாக்களிலோ பங்கேற்க முடியாது.

கடந்த தலிபான்களின் ஆட்சியில் காபூலில் உள்ள காஜி ஸ்டேடியம், வெள்ளிக்கிழமை தோறும் ஜும்மா தொழுகைக்கு பிறகு பொது மரணத் தண்டனை

அரங்கேற்றப்படும் களமாகவே செயல்பட்டது. சுய பாலின உறவாளார்கள் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டார்கள், சிரசேதம் செய்யப்பட்டார்கள்.

நீதிமன்றங்கள், வங்கிகள், அலுவலகங்கள், பல்கலைக்கழகங்கள் உள்ளிட்டவற்றில் இடம் பெற்றிருந்த பெண்களுக்கு பணித் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கால் நூற்றாண்டு காலமாக ஓரளவுக்கு முன்னேற்றப்பாதையில் படிப்படியாக முன்னேறி வந்த ஆப்கானிஸ்தான் பெண்கள் முழு சுதந்திரம் எதிர்காலத்தில் நிச்சயமாக கிடைக்கும் என்று நம்பி இருந்தார்கள்.

ஆனால் இப்போதைய நிகழ்வுகள் அவர்களது நம்பிக்கையை நிர்மூலப்படுத்தி விட்டன.

**கொரோனாவால் தள்ளிவைக்கப்பட்ட ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது கட்ட ஆட்டங்கள் ஐக்கிய அரபு அமீரகத்தில் செப்டம்பர் மாதம் 29-ம் தேதி தொடங்கி நடந்து வருகிறது.**

**ஐ.பி.எல் போட்டியை ஆப்கானிஸ்தானில் உள்ள தேசிய டெலிவிஷனில் ஒளிபரப்பு செய்ய அந்த நாட்டில் புதிதாக ஆட்சியைக் கைப்பற்றி இருக்கும் தலிபான்கள் திடீரென தடை விதித்தனர்.**

**ஐ.பி.எல். போட்டி நடைபெறும் ஸ்டேடியத்தில் இளம் மங்கையர் கவர்ச்சி நடனம் ஆடுவார்கள். இவை எல்லாம் மத உணர்வுக்கு எதிரானது என்பதால் இந்த தடை விதிக்கப்பட்டு இருக்கிறது, என்று ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரிய முன்னாள் ஊடக மேலாளரும், பத்திரிகையாளருமான இப்ராகிம் 'ட்விட்டர்' மூலம் தெரிவித்துள்ளார். இதேபோல் அங்குள்ள தனியார் மீடியாக்களுக்கும் ஐ.பி.எல். போட்டியை ஒளிபரப்பு செய்யக்கூடாது என்று தலிபான்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

**ஆப்கானிஸ்தானை சேர்ந்த வீரர்களான ரஷித் கான், முகமது நபி, முஜிப் ரகுமான் ஆகியோர் ஐ.பி.எல். போட்டியில் விளையாடி வருகிறார்கள். இந்த நிலையில் ஐ.பி.எல். போட்டி ஒளிபரப்புக்கு தடை விதிக்கப்பட்டு இருப்பதால் அந்த நாட்டு ரசிகர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளனர்.**



## மறப்பதில்லை

# நெஞ்சம்!

"நான் என்ன
சொல்றேன்னு
உனக்குப் புரியுதா
இல்லையா ?
திரும்பத் திரும்பச்
சொன்னதையே செ
ால்லிக்கிட்டு இருக்க.
உனக்கும் எனக்கும்
செட்டாகாது. இந்த
வயசுலயே காதல்
அது இதுன்னு
சொல்லிக்கிட்டு
சுத்திக்கிட்டு இருக்க
, இது உனக்கு
நல்லது இல்ல.
முதலில் ஒழுங்கா
படி. உன்னை நம்பற
அம்மா அப்பாவுக்கு
உண்மையா இரு.
உனக்கு அடுத்து
இரண்டு தங்கச்சி
ங்க இருக்காங்க
அவங்களோட
எதிர்காலத்துக்கு
உதவு. அதை எல்லாம்
செய்யாம சும்மா
லவ் லவ்னு என்
பின்னாடி சுத்தாதே.
இந்த வயசுல
வரதுக்குப் பேரு
காதல் இல்லை
வெறும் ஈர்ப்பு.

–சுஜாதா நடராஜன்

அதைப் பெருசா நினைச்சு உன் வாழ்க்கையை வீணாக்கிக்காதே. இதுதான் நான் உனக்குத் தர கடைசி அட்வைஸ். இதுக்கு மேல என் பின்னாடி சுத்தினா , உன் அப்பாகிட்ட சொல்லிடுவேன். போ'' என்ற வார்த்தைகள் மீண்டும் மீண்டும் என் செவிகளில் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

'வருடம் பல கடந்துவிட்டது. என் மனம் அவன் மீதான காதலில் இருந்து மாறவில்லை. ஆனால் அதைக் கூற அவன் அருகே இல்லை. மீண்டும் அவனைக் காணும் நாளுக்காகக் காத்திருக்கிறேன். அவனுக்கு மணமாகி இருந்தால் ? என்ற கேள்வி எழும் போதெல்லாம் மனம் கனக்கிறது. அவனைச் சந்திக்க நேர்கையில் எப்படியான சூழ்நிலை அமைந்தாலும் பாதகமில்லை. அவனை ஒரு முறையேனும் சந்தித்துவிட வேண்டும் என்றே நினைக்கிறேன். என் நினைவோடு நிறைந்துவிட்ட அவனை. சந்திக்க ஒரு வாய்ப்புத் தருவாயா காலமே ?'

அபிராமி.. தன் நாட்குறிப்பில் எழுதி முடிக்க ; அவள் கைப்பேசி சிணுங்கியது. நாட்குறிப்பை மூடி வைத்தவள் கைப்பேசி யை எடுத்துப் பார்த்தாள். அலுவலகத்தில் இருந்து அழைப்பு வந்திருந்தது. சிறிய சலிப்புடன் அதை அட்டன் செய்து காதில் வைத்தாள்.

அவளுக்குப் பணி இடமாற்றம் வந்திருப்பதாகத் தெரிவிக்க மகிழ்ச்சியில் துள்ளி குதித்தாள் அபிராமி. அழைத்தவருக்கு நன்றி சொல்லிவிட்டு அழைப்பை துண்டித்தாள்.

'ஆஹா இப்பதான் கேட்டேன்' உடனே கிடைச்சிருச்சு... சிவாவை பார்க்க முடிஞ்சா இன்னும் நல்லா இருக்கும், பார்ப்போம்' என நினைத்தவள் அறை விட்டு வெளியே வந்தாள்.

தன் தாய் தந்தையிடம் பணியிட மாற்றத்தை பற்றிக் கூறினாள். அடுத்த வாரம் அங்கே செல்ல வேண்டும் என்றாள்.

''அடுத்த வாரமே சேரணுமா... எப்படிம்மா ? எங்க தங்குவே ?'' என்று அபியின் தாய் சுதா கேட்க...

''அம்மா.. அந்த ஊரு என்ன நமக்குப் புதுசா. என் பழைய பிரண்ட்ஸ் எல்லாம் இருக்காங்க. நான் சீக்கிரம் வீடு பார்த்திடுவேன். நீங்க கவலைப்படாதீங்க.'' என்றாள்.

''சரி டா பார்த்து பாத்திரமா இரு. நாங்க ஒரு இரண்டு மாசம் கழிச்சு அங்க வந்திடறோம். '' என்றார் அபியின் தந்தை பாலன்.

''சரிப்பா நீங்க பார்த்து பொறுமையா வாங்க நான் நல்ல வீடா பார்த்திட்டு சொல்றேன்.''

''அபி அந்த வரனுக்கு என்ன பதில் சொல்றது ? அவங்களுக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்காம். உன்னை மிஸ் பண்ண அந்தப் பையன் விரும்பலையாம். அவங்க அப்பாவே நேரடியா போன் பண்ணி கேட்டுட்டாரு நான் பதில் சொல்ல முடியாம தவிச்சி போயிட்டேன். ஏதாவது ஒரு பதில் சொல்லும்மா '' என்று பாலன் கேட்க'

''அப்பா ஒரு இரண்டு மாசம் டைம் வேணும். கொஞ்சம் யோசிக்கணும் அவங்களுக்கு ஓகேக்கறதுக்காக நாம உடனே சம்மதிக்க முடியாது இல்லையா ? இப்ப தான் டிரான்ஸ்பர் கிடைச்சிருக்கு நான் கொஞ்சம் செட்டில் ஆகிக்கறேன் அதுக்கு அப்புறம் தான் கல்யாணத்தைப் பத்தி யோசிக்கவே முடியும். ''

''ஏண்டி அதுவரை மாப்பிள்ளை வீட்டுக்காரங்க காத்திருப்பாங்களா ?''

''ஏன் காத்திருந்தா என்ன ? ''

''பதிலுக்குப் பதில் பேசாதே அபி. நல்ல பையன் பேசி முடிச்சிடலாம். சொன்னா கேளு. '' என்று சுதா புலம்ப

''அம்மா. புரிஞ்சிக்கோ நான் யாரையும் காத்திருக்கச் சொல்லல. அவங்களுக்கு அவசரம்னா வேற பொண்ணு பார்த்து கட்டிக்கட்டும் எனக்கு வேற மாப்பிள்ளை கிடைக்காமலா போயிடுவாங்க. நீங்க கவலைப்படாம இருங்க. '' என்ற அபிராமி வேறு எந்த வாதமும் செய்யாமல் தன்னறைக்குச் சென்றுவிட்டாள்.

''என்னங்க இவ இப்படி பிடிகொடுக்காமயே பேசறா அந்தப் பையன் நல்ல பையன். குடும்பமும் நல்ல குடும்பம். இவளை நல்லபடியா பார்த்துப்பாங்க. ஆனா இவ இதை எல்லாம் புரிஞ்சிக்காம இப்படிப் பேசிட்டு போறாளே நீங்களும் கண்டிக்க மாட்டேங்கறீங்க '' என்று சுதா பாலனிடம் குறைப்பட்டாள்.

''அவ என்ன சின்னப்பொண்ணா சுதா. படிச்சிருக்கா, வேலைக்குப் போறா , நல்லது கெட்டது புரிஞ்சி நடந்துக்கறா,

பொறுப்பான பொண்ணை எப்படித் திட்ட முடியும். கொஞ்ச நாள் சுதந்திரமா இருக்க நினைக்கறா போல. அதுதான் வேற ஊருக்கு மாற்றல் வாங்கிட்டு போறா. தனியா விட்டுப்பார்ப்போம் நம்ம பொண்ணு எப்பவும் தப்பு செய்ய மாட்டா. நாம அவ மேல வெச்சிருக்கற நம்பிக்கை தான் அவளோட பலம். அதை நாமளே கெடுக்க வேண்டாம். ''

''அது சரிங்க இப்போ மாப்பிள்ளை வீட்டுல என்ன சொல்றது. ''

''அபி சொன்னதையே சொல்வோம்.

''என்னமோ பண்ணுங்க அவளோட சேர்ந்துக்கிட்டு நீங்களும் இப்படிப் பேசறது தான் எனக்குப் பிடிக்கல. நமக்கு இன்னும் இரண்டு பொண்ணுங்க இருக்காங்க. இவளை கட்டிக் கொடுத்தா தான் அடுத்தடுத்து பண்ண முடியும். '' என்றுவிட்டுச் சமையலறை நோக்கி சென்றார் சுதா.

பாலன் யோசனையாகப் பால்கனி சென்றார். ''அபி மனசில் என்ன இருக்குன்னே புரிய மாட்டேங்குது. எதுக்குக் கல்யாணத்தைத் தள்ளி போட்டுக்கிட்டே இருக்கான்னு தெரியல. ஒருவேளை அவ மனசில் யாராவது இருப்பாங்களா ? நம்மகிட்ட சொன்னா ஒத்துக்க மாட்டோம்னு மறைக்கறாளோ '' என்று நினைத்தவர் அவளிடம் இது குறித்து எப்படிப் பேசுவது என்று சிந்திக்கத் தொடங்கினார்.

நாட்கள் நகர அபி மாற்றலான ஊருக்கு உற்சாகத்துடன் கிளம்பினாள். பாலன் அவளைப் பேருந்து நிலையம் வரை சென்று விட்டு வந்தார். அபி பேருந்தில் ஏறி அமர்ந்ததும் அவர் விடைபெற்று கிளம்பினார். அபி தன் வாழ்க்கை பயணத்தைத் தொடங்கினாள். அவள் எதிர்பார்த்துச் செல்லும் வாழ்க்கை அவளுக்குக் கிடைக்குமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

## 2

**அ**பிராமி கட்டிட பொறியியல் படித்துள்ளாள். இதுவரை மதுரையில் பணியாற்றிக் கொண்டிருந்தவள் தற்போது கோவைக்கு மாற்றல் வாங்கிக்கொண்டு வருகிறாள். அவள் வருங்காலத்தைத் தேடி.

அபியின் பதின் பருவம் வரை பாலன் கோவையில் பணியாற்றிக்

கொண்டு இருந்தார். அதன்பின் மாற்றல் வாங்கிக்கொண்டு சொந்த ஊருக்கே சென்று விட்டார். அந்தப் பருவத்தில் தான் அபியின் மனதில் காதல் மெட்டு அரும்பியது.

அந்தக் காதலை அவள் அவனிடம் கூற அவனோ இவளை சிறு பெண் எனக் கூறி மறுத்துவிட்டான். அந்த நேரத்தில் பாலனும் சொந்த ஊருக்கு மாற்றல் வாங்கிவிட... அவள் காதல் மொட்டு பாதி மலர்ந்த நிலையில் நின்றுவிட்டது. அவனை மறக்கவும் முடியாமல் நினைக்கவும் முடியாமல்... தவித்துக்கொண்டு இருந்தாள். அவள் தவிப்புத் தெரியாமல் வீட்டில் வரன் பார்க்க ஆரம்பித்தனர்.

அதிலிருந்து தப்பிக்கப் பணி இட மாற்றம் வாங்க நினைத்தாள். மாற்றல் வாங்குவது என்றான பின் , கோவைக்குச் சென்று அவனைத் தேடலாம் என்று தோன்றியது. சட்டென உதித்த யோசனையில் மேலிடத்தில் விண்ணப்பிக்க ; இதோ மாற்றலும் கிடைத்துவிட்டது. இனி அவனைத் தேடி கண்டுபிடிப்பது ஒன்று தான் பாக்கி.

''சிவா நான் வரேன், உன்னைத் தேடி வரேன். '' என்று சொல்லிக்கொண்டவள் இமை மூடி அவன் முகம் கண்டாள். மெல்லிய புன்னகையுடன் கோவை நோக்கி பயணப்பட்டாள். விடியலில் கோவை பேருந்து நிலையத்தில் கால் பதித்தாள்.

அவளை அழைத்துச் செல்ல கோவைக்கிளையில் பணி புரியும் சக ஊழியர் வினோத் வந்திருந்தார். இவள் பேருந்தில் இருந்து இறங்கவும் , அவர் இவளை நெருங்கவும் சரியாக இருந்தது.

''நீங்க தானே அபிராமி ? '' என்ற கேள்வியோடு தன்னை நெருங்கியவனைப் புன்னகையுடன் பார்த்து 'ஆம்' எனத் தலையசைத்தாள்.

''வாங்க.. '' என்றவன் முன்னே நடக்க அபி அவனைப் பின் தொடர்ந்தாள்.

''மேடம்... நீங்க தங்கறதுக்கு ஹாஸ்டல்ல அலுவலகத்தில் நம்மோட வேலை பார்க்கற ஒரு பொண்ணோட ரூமை ஏற்பாடு பண்ணியிருக்கேன். இப்போதைக்கு நீங்க அங்க தங்கிக்கலாம். ஒரு வாரத்தில் ஒரு நல்ல வீடா பார்த்து தரேன். '' என்றான் அவன்.

''வினோத் அண்ணா நீங்க என்னைப் பெயர் சொல்லியே

கூப்பிடுங்க. ''

''கூப்பிடலாம் ஆனா நீங்க தப்பா எடுத்துக்கலாம். அதான் ''

''அதெல்லாம் நான் தப்பா எடுத்துக்க மாட்டேன். நீங்க அபின்னே கூப்பிடுங்க. ''

''ரொம்ப சந்தோஷம் அபி என்னை அண்ணான்னு கூப்பிட்டதுக்கும் , மரியாதையா நடத்துறதுக்கும். சரி காபி டீ ஏதாவது சாப்பிடறீங்களா ? ''

''அண்ணா ''

ஆதவன் மெல்ல மேலெழுந்து வந்தது. அதன் கதிர்கள் புவிகளைத் தொட புவி மகள் உடல் சிலிர்த்து எழுந்தாள். காலை நேர பரபரப்பு அந்த மாநகரத்தை மெல்ல மெல்ல ஆட்கொள்ளத் தொடங்கியது.

தேநீரை அருந்தியபடியே ''உங்களைப் பத்தி சொல்லுங்கண்ணா..'' எனக் கேட்டாள் அபிராமி.

''என்னைப் பத்தியா ? '' என்ற வினோத் யோசனையுடன் அமர்ந்திருந்தான்.

''சொல்ல விருப்பமில்லன்னா வேண்டாம். ''

''அப்படி எதுவும் சொல்லிக்கற மாதிரி இல்லம்மா '' என்றான் வினோத்.

''ஏன் அண்ணா அப்படிச் சொல்றீங்க ? ''

''எனக்கு யாரும் இல்லம்மா ''

''அப்படின்னா ? ''

''அப்படின்னா வளர்ந்தது ஆசிரமத்தில் இப்ப தனியா ரூம் எடுத்து தங்கி இருக்கேன்.

''நீ அண்ணான்னு கூப்பிட்டதும் ஏதோ ஒரு புது உறவு கிடைச்சிட்ட உணர்வை தருது. நன்றிம்மா அண்ணான்னு கூப்பிடறதுக்கு''.

''நீங்க எங்க தங்கி இருக்கீங்க அண்ணா ? ''

''நானும் பக்கத்தில் தான் இருக்கேன் அபி. ஒரு இரண்டு தெரு தள்ளி. இந்த ஏரியாவில் இருந்து நம்ம அலுவலகம் பக்கம். அதனால அதிகமான ஊழியர்கள் இந்த ஏரியாவில் தான் இருக்காங்க. ''

''சரிண்ணா ரொம்பத் தேங்க்ஸ். போன்ல தான் பேசினோம். எனக்காக நீங்க மெனக்கெட்டு இத்தனை தூரம் உதவி செய்றீங்க. ''

''யார் புதுசா வந்தாலும் உதவி செய்வேன் அபி. ஆனா யாரும் இத்தனை தன்மையா நடந்துக்கிட்டது இல்ல. பார்த்ததுமே பழக யோசிப்பாங்க இல்ல. என்னோட உருவம் அப்படி ''

''அப்படி எல்லாம் ஒண்ணுமில்ல. நீங்க பார்க்க நல்லா தான் இருக்கீங்க. உங்களைப் பார்க்கும் போது நம்ம வீட்டு ஆளுங்க அப்படிங்கற எண்ணம் தான் வருது. உங்களை நீங்களே குறைவா மதிப்பிடாதீங்க அண்ணா. ''

''உண்மை தான். மத்தவங்க இப்படி நினைப்பாங்களோ அப்படி நினைப்பாங்களோன்னு நினைச்சு நானே என்னைக் குறைவா மதிப்பிட்டுக்கறேன். சுய பச்சாதாபம் எனக்கு அதிகமா இருக்கு. ''

''ம் கூடிய சீக்கிரம் அதை மாத்திடறேன் பாருங்க. '' என்றாள் அபி மென்னகையுடன்.

''உன்னை மாதிரி ஒரு தங்கச்சி கிடைச்சது எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. கடைசிவரை என்னோட தங்கச்சியா இருப்ப தானே. ''

''கண்டிப்பா நீங்க அடிச்சி துரத்தினாலும் போக மாட்டேன். நான் கொஞ்சம் அடமென்ட். '' என்றாள்.

அதற்குள் அவள் தங்க வேண்டிய இடம் வந்துவிட இருவரும் ஆட்டோவை விட்டு இறங்கினர். அபிராமியை ஸ்வேதாவிடம் ஒப்படைத்து விட்டு

''ஓகே.. நான் கிளம்பறேன். ரூம்மேட் ஸ்வேதாகிட்ட கொஞ்சம் பேசுங்க... நாம ஆபீஸில் பார்க்கலாம். '' என்றுவிட்டு நகர்ந்தான் வினோத்.

''பரவாயில்லையே இந்தச் சிடுமூஞ்சி கூட உங்ககிட்ட சிரிச்சி பேசிட்டு போகுதே.. '' என்றாள் ஸ்வேதா.

''நாம எப்படிப் பேசறோமோ அதுக்கான பிரதிபலிப்பு திரும்ப வரும்''. என்றாள் அபி மென்னகையுடன்.

ஒரு மணிநேரத்தில் அந்த அறையில் தங்கியிருந்த நால்வரும் ஆளுக்கு ஒரு திசையாகப் பறந்தனர். ஸ்வேதாவும் அபிராமியும் அவர்களின் அலுவலகம் நோக்கி ஸ்கூட்டியில் கிளம்பினர். ஸ்வேதா அந்த ஏரியாவை பற்றி விளக்கியபடியே வண்டியை செலுத்தினாள். சற்று நேரத்தில் அலுவலகத்தை வந்தடைந்தனர்.

3

ஒருவாரம் வேகமாகக் கடந்தது. அபிராமி அலுவலகத்திலும் , தங்கியிருந்த அறையில் உள்ளவர்களிடமும் நன்றாகப் பழகிவிட்டாள். வேறு அறையோ அல்லது தனி வீடோ தற்போதைக்கு வேண்டாம் என்று நினைத்தவள் ஸ்வேதாவின் அறையிலேயே தொடர்ந்து தங்குவதற்கு முடிவெடுத்து அவளிடம் அதுபற்றிப் பேசினாள்.

''ஸ்வேதா நானும் உங்களோடவே தங்கிக்கவா ? ''

''ஓ தாராளமா. எங்களுக்கும் பங்கீட்டுக்கு இன்னொரு ஆள் இருந்தா நல்லா இருக்கும். ''

''மத்தவங்க ஒத்துப்பாங்களா ஸ்வேதா. ''

''ம்.. கண்டிப்பா மாலினியும் ஈஸ்வரியும் ஸ்டுடண்ட். வீட்டுல தர காசுல தான் இங்க எல்லாத்தையும் மேனேஜ் பண்ணனும். அதே மாதிரி அக்ஷயாவுக்கும் ஏகப்பட்ட கமிட்மெண்ட் இருக்கு. நல்ல ஆள் கிடைச்சா ரூம்மெட்டா சேர்த்துக்கலாம்னு தான் இருந்தோம். உன்னை அவங்களுக்கும் பிடிச்சிருக்கு. நீயும் எங்களை மாதிரி தான் இருக்க. அதனால பிரச்சனை இல்லை. இன்னைக்கு நைட் அவங்களோட கலந்துபேசிடுவோம். ''

''ம் சரி. '' என்ற அபி சற்று இடைவெளி எடுத்து ''நான் சைட்டுக்கு கிளம்பறேன். வினோத் அண்ணா வெய்ட் பண்றாங்க. சாயந்திரம் பார்க்கலாம். '' என்றுவிட்டு நகர்ந்தாள்.

''ம் அந்தச் சிடுமூஞ்சி இவகிட்ட மட்டும் சிரிச்சி சிரிச்சு பேசுது. நம்மைக் கண்டா முறைக்குது. எல்லாம்... '' என மனதில் நினைத்தவள் மௌனமாக அடுத்த பணியைப் பார்க்க ஆரம்பித்தாள்.

அலுவலகம் விட்டு வெளியே வந்த அபிராமி வினோத்துடன் கட்டிட கட்டுமான பணி நடக்கும் இடம் நோக்கி பயணப்பட்டாள். ''அண்ணா எனக்கு ஒரு முகவரிக்கு போகணும். எனக்குத் தெரிஞ்சவங்க அங்க இருக்காங்களான்னு பார்க்கணும். சைட் விசிட் முடிச்சிட்டு அங்க போகலாமா ? '' என்று தயக்கத்துடன் கேட்டாள் அபி.

''தாராளமா போகலாம் அபி. இதைக் கேட்க ஏன் தயங்கற ? '' என்றவன் சற்றே யோசித்து ''ஆமாம் உனக்கு இங்க சொந்தக்காரங்க

இருக்காங்களா என்ன ? '' எனக் கேட்டான்.

''சொந்தக்காரங்க எல்லாம் இல்லண்ணா. அப்பா கொஞ்ச வருஷம் இந்த ஊரில் தான் வேலை பார்த்தாரு அப்போ நாங்க குடியிருந்த ஏரியாவில் இருக்கும் பக்கத்து வீட்டுக்காரங்களைப் பார்க்கணும்னு நினைக்கறேன். அதான். ''

மதியம் போல இருவரும் கிளம்பி அபி இருந்ததாகக் கூறிய ஏரியாவை அடைந்தனர். ஒருவழியாக அடையாளம் கண்டு கொண்டு சிவா இருந்த வீட்டின் கதவை தட்டினாள்.

கதவை திறந்தார் ஒரு நடுத்தர வயது பெண்மணி. ''யாரும்மா ? என்ன வேணும் ? ''

''அது சிவான்னு இங்க யாரும் இருக்காங்களா ? '' என்றாள் அபி தடுமாற்றத்துடன்.

''சிவாவா ? அப்படி யாரும் இல்லையே . ''

''... '' அவரின் பதில் அவளை மௌனமாக்கியது. அடுத்து என்ன பேசுவது என்று தெரியாமல் அவள் தடுமாற அவள் தடுமாற்றத்தை கண்ட அந்தப் பெண்மணி...

''என்னம்மா ? '' என்று வினவினார்.

''அது , இவங்க சின்ன வயசில் இந்த ஏரியாவில் இருந்திருக்காங்க அக்கா. அப்ப இந்த வீட்டில் குடியிருந்தவங்க பழக்கமாம். இப்ப அவங்களைப் பார்க்கலான்னு வந்தாங்க ; அவங்க இல்லன்னதும் கொஞ்சம் அப்சட் ஆகிட்டாங்க. வேற ஒண்ணுமில்ல. '' என்று வினோத் சமாளித்தான்.

''ஓ.. அப்படியா ? நாங்க வந்து இரண்டு வருஷம் தான் ஆகுது. அதுக்கு முன்னாடி இருந்தவங்களுக்கு ஒருவேளை தெரிஞ்சிருக்கலாம். எங்களுக்குத் தெரியாது. '' என்றார் அந்தப் பெண்மணி.

''பரவாயில்ல அக்கா.. ரொம்ப நன்றி. நாங்க வரோம். '' என்று அவரிடம் விடைபெற்ற வினோத் ''அபி வா.. '' என்றபடியே அவள் தோள் பற்றி அழைத்துச் சென்றான்.

''அபி என்னாச்சு ? திடீர்னு ஏன் அமைதியா இருந்திட்ட ? முகம் வேற வாடிப்போச்சு ? '' என்று கேட்க

''ஒண்ணுமில்ல அண்ணா இது அவங்களோட சொந்த வீடு.

அவங்க இங்க தான் எப்பவும் இருப்பாங்கன்னு நினைச்சிட்டேன். இப்ப அவங்க இங்க இல்லன்னதும் ; ஏதோ மாதிரி ஆகிடுச்சு. அதான் கொஞ்சம் அப்சட் ஆகிட்டேன்.''

''அப்படியா ? '' என்ற வினோத் அவள் முகம் வாடி இருப்பதை விரும்பாமல் ''நீ தப்பா எதுவும் யோசிக்காதே அபி. வேலைக்காக வேற ஊருக்குப் போயிருக்கலாம். இல்லை இந்த வீட்டை விட வேற பெரிய வீடு வாங்கிட்டுப் போயிருக்கலாம். அவங்க உனக்கு அத்தனை முக்கியமானவங்களா இருந்தா நானே அவங்களைத் தேடி கண்டுப்பிடிச்சி தரேன். அதுக்காக நீ இப்படி முகத்தை வெச்சிக்கறது எனக்குச் சங்கடமா இருக்கு. ''

''அண்ணா ரொம்பத் தேங்க்ஸ். ஆனா அவங்க அத்தனை முக்கியமானவங்க இல்லை. அதுக்காக நீங்க சிரமப்பட வேண்டாம். விடுங்க அப்புறம் பார்த்துக்கலாம். '' என்றாள் அபி.

''அப்ப கொஞ்சம் சிரிக்கறது ''

''ம்'' என்றவள் வராத புன்சிரிப்பை வரவைத்து உதட்டில் ஒட்டிக்கொண்டு சிரிக்க அவள் நாடகம் புரிந்து வினோத்தும் அதை ஏற்பது போலப் பாவனை செய்தான்.

★★★★

**அ**லுவலகம் சென்றவர்கள் தம் தம் பணியில் கவனத்தைச் செலுத்த மாலை மங்கி அவர்களை இல்லத்திற்குச் செல்லும் படி பணித்தது.

ஸ்வேதாவும் அபியும் கிளம்ப ஆயத்தமாகினர். ஸ்வேதாவின் மேஜையை நெருங்கினான் வினோத். ஸ்வேதாவிடம் நாளையப் பணிக்கான சில தகவல்களைக் கேட்டான். ''ஸ்வேதா அந்த டிசைனிங் வொர்க் நாளைக்குள்ள முடிஞ்சிடுமா ? ''

அவனின் திடீர் வருகையும், கேள்வியும் ஸ்வேதாவை ச ற்றே திணறலுக்கு ஆட்படுத்தினாலும் ; அதைத் தன்னுள் மறைத்துக்கொண்டு ''ஆங் , முடிச்சிடும் சார் '' என்றாள்.

''ஒகே நாளைக்கு அந்த டிசைனை சப்மிட் பண்ணிடுங்க. நான் செக் பண்ணிட்டு மேலிடத்துக்கு அனுப்பி அப்ரூவல் வாங்கணும். அடுத்த மாசத்தில் இருந்து இந்த ப்ராஜெக்ட் ஆரம்பமாகிடும். ஸோ கொஞ்சம் வேகமா பாருங்க. ''

''நாளைக்கு நீ நேரா சைட்டுக்கு போயிடு. அங்க இருக்கற சின்னச் சின்னத் திருத்தப்பணிகளைக் கவனி. நான் மதியமா வந்திடறேன். நாளைக்கு ரூபன் வந்திடுவாரு. நம்மோட ப்ராஜெக்ட் ஹெட். அவரு ஒருமுறை சரி பார்த்திட்டு ; மிச்சம் இருக்கற வேலைகளைச் சொல்லிடுவாரு. ''

''ம் சரி அண்ணா. ''

''நாளைக்கு ரூபன் வந்திடுவாரா ? '' என்று ஸ்வேதா ஆர்வமாகக் கேட்க ''ம்.. '' என்றான் அவள் முகம் பாராமல்.

''அப்பாடா இனிமே இந்தச் சிடுமூஞ்சி கிட்ட ரிப்போர்ட் பண்ண வேண்டாம். '' என்றாள் ஸ்வேதா.

அதைக் கேட்டு இருவரும் திடுக்கிடலுடன் அவளைப் பார்க்க ''ஐய்யையோ மைண்டு வாய்ஸ்ன்னு நினைச்சுச் சத்தமா பேசிட்டேனா'' என்றாள் ஸ்வேதா.

அதைக் கேட்டு சிரித்த அபி ''இப்பவும் அப்படிதான் பேசறீங்க ஸ்வேதா '' என்றிட.

தன் உதட்டை கடித்தவள் வினோத் முகம் பார்த்து ''ஸாரி அது.. சும்மா.. விளையாட்டுக்கு தான் அப்படிச் சொன்னேன்.'' என்றாள்.

''இட்ஸ் ஓகே நீங்க சொல்றதும் உண்மை தானே. நான் சிடுமூஞ்சி தான். '' என்றுவிட்டு அபியை பார்த்தான்.

''சரிம்மா நீங்க கிளம்புங்க. நாளைக்குப் பார்ப்போம். ''

வினோத் அவளுக்குச் சைகையால் விடை கொடுத்துவிட்டு தன் இரு சக்கர வாகனத்தைக் கிளம்பினான்.

''கோவிச்சிக்கிட்டாரு போல '' என்றாள் ஸ்வேதா மெல்லிய குரலில்.

''என்ன ? என்ன சொன்னீங்க ஸ்வேத் '' என்று அபி வினவ

''அது.. ஒண்ணுமில்ல.. கிளம்பலாம். '' என்றவள் தன் வண்டியை கிளம்பினாள்.

★★★★

இருவரும் தங்கள் குடியிருப்பு பகுதியை அடைந்தனர். மற்றவர்களும் அபி அங்கேயே தங்கிக் கொள்ளச் சம்மதம் தெரிவிக்க

மகிழ்வுடன் அவர்களுக்கு நன்றி கூறினாள்.

''எதுக்கு நன்றி எல்லாம் சொல்ற அபி, நீ என்ன சும்மாவா தங்கப்போற எல்லாமே பங்கீடு தானே. '' என்றாள் அக்ஷயா.

''ஆமாம் அக்கா இருந்தாலும் நீங்க எல்லாம் ஒரே ஊரு. ரொம்ப நாள் பழகினவங்க. நானோ புதுசு... என்னையும் உங்களில் ஒருத்தியா ஏத்துக்கிட்டது எனக்குச் சந்தோஷமா இருக்கு. அதுக்குத் தான் தேங்க்ஸ் சொன்னேன். ''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல அபி... பொழைப்பு தேடி வந்த ஊருல கூட இருக்கறவங்க தான் துணை. அப்படியான துணை நல்லவங்களா அமையறதும் அமைச்சிக்கறதும் தான் முக்கியம். அதுவும் பொண்ணுங்க ரொம்பவே ஜாக்கிரதையா தேர்ந்தெடுக்கணும். அவ்வளவுதான். ''

''அக்கா உங்க வயசுக்கும் வார்த்தைகளுக்கும் அதிக இடைவெளி இருக்கு. '' என்றாள் வியப்பாக.

''வயசை விட அனுபவத்திற்கு ஆற்றல் அதிகம் அபி. நான் அந்த மாதிரி நிறைய அனுபவங்களை அனுபவிச்சிருக்கேன். சரி அதைவிடு. நான் டியூட்டிக்கு கிளம்பறேன். சப்பாத்தி போட்டு வெச்சிருக்கேன் சாப்பிட்டு நேரமா தூக்குங்க.'' என்ற அக்ஷயா அறையுள்ளே நுழைந்து கொண்டாள்.

அடுத்த அரைமணியில் குளித்துத் தயாராகிப் பணிக்கு கிளம்பிச் சென்றுவிட்டாள்.

''அக்ஷயா அக்கா வாழ்க்கையில் நிறைய வேதனைகளை அனுபவிச்சிருக்காங்களா ஸ்வேத். ''

''அவளோட அனுபவங்களை அவகிட்டயே கேட்டு தெரிஞ்சுக்கோ அபி நான் சொல்றது அவளுக்குப் பிடிக்காது. '' என்றாள் ஸ்வேதா புன்னகையுடன்.

''ம் புரியுது. '' என்ற அபி இரவு உணவை உண்டுவிட்டு அங்கே இருந்த பால்கனிக்கு சென்றாள். இரவின் இருளில் வெண்ணிலவின் வட்ட முகம் தந்த பிரகாசத்தில் இருள் சற்றே அகன்று வெள்ளி நிற ஒளி வானமெங்கும் பரவி இருந்தது.

4

அந்த நிலவின் ஒளியில் அவன் முகம் தெரிய சற்றே தன் நினைவுகளைப் பின் நோக்கி செலுத்தினாள் அபிராமி.

அன்று முதல் முறையாகத் தாவணி கட்டி பள்ளிக்கு செல்ல கிளம்பி வீட்டு வாசலுக்கு வந்தாள் அபிராமி.

அப்போது ''என்ன அபி இன்னிக்குத் தாவணி எல்லாம் கட்டியிருக்க ? என்ன ஸ்பெஷல் ? '' என்று கேட்டபடியே அவளை நெருங்கினான் சிவா.

அவன் கேசம் காற்றில் கலைந்திருக்க அதை ஒரு கையால் கோதியபடியே அவன் நடந்து வர அந்த அழகில் மயங்கிய தன் விழிகளை இமைக்க முடியாமல் அவனையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

''ஏய் உன்னைத் தான். '' என்று அவளின் தோள்களைப் பற்றி உலுக்கினான் சிவா. அவன் தீண்டல் உடல் எங்கும் மாற்றத்தை ஏற்படுத்த முதல் முறை நாணம் அவளை ஆட்கொண்டது. அவள் மெல்ல தலை குனிந்து அந்த நாணத்தை அசைபோட ''என்னடி ஆச்சு ? '' என்றபடியே அவள் தலை நிமிர்த்தினான் சிவா.

அவன் விழி பார்க்க முடியாமல் அவள் விழிகள் தடுமாறி அங்குமிங்கும் அலை பாய்ந்தது. ''அதைக் கவனித்தவன் ''அபி யாராவது ஏதாவது சொன்னாங்களா ? ஏன் இப்படி இருக்க. '' என்று அச்சம் கலந்த குரலில் வினவினான்.

அவனின் அச்சம் அவளை அசைக்க தன் உணர்வுகளைக் கஷ்டப்பட்டுக் கட்டுப்படுத்தி ''அதெல்லாம் ஒண்ணுமில்ல சிவா பார்ஸ்ட் டைம் ஸ்கூலுக்குத் தாவணி கட்டிக்கிட்டு போறேன் அதான் ஒரு மாதிரியா இருக்கு. ''

''உன்னை யாரு இதெல்லாம் கட்டிக்கிட்டுப் போகச் சொன்னது. எப்பவும் போலப் போக வேண்டியது தானே. ''

''இன்னிக்குக் கல்சரல்ஸ் இருக்கு சிவா அதான். ''

''சரி வா நானே ஸ்கூலில் டிராப் பண்றேன். ''

''இல்ல வேண்டாம். ''

''ஏன் வேண்டாம். பாவாடை தாவணியைக் கட்டிக்கிட்டு நிக்கவே தடுமாறரே ; எப்படிப் பஸ் பிடிச்சி போவ ? அதுவும் அரையடி இருக்கற உனக்குப் பஸ் கம்பி கூட எட்டாது. ஒழுங்க வா எனக்கு டைமாகுது. ''

''நான் ஒண்ணும் அரையடி இல்ல ஐஞ்சடி இருக்கேன். நீ பனைமரத்தில் பாதி இருக்கறதால உனக்கு யாரை பார்த்தாலும் அரையடி மாதிரி தான் தெரியும். காலங்காத்தால கடுப்பேத்தாதே சிவா. எனக்கு இன்னிக்கு ஸ்டேஜ் பர்பாமன்ஸ் வேற இருக்கு. ''

''குள்ளச்சி ரொம்ப அலட்டிக்காதே. ஏதோ போனா போகட்டும்னு டிராப் பண்றேன்னு சொன்னா சீன் போடறே ''

''யாரு சீன் போடறா ? நீதான் ,அங்கிள் கிட்ட அடம்பிடிச்சி பைக் வாங்கிட்டு சீன் போடறே. நேத்துவரை நீயும் பஸ்சில் குரங்கு மாதிரி தொங்கிட்டு தான் போன இப்ப வந்து பெரிய வள்ளல் மாதிரி எங்களை டிராப் பண்றீங்களா. ''

''ஏய் வாயாடி உன் வாயாடி தனத்தை என்கிட்ட காட்டாதே ''

''அப்படிதான் காட்டுவேன் என்னடா பண்ணுவே. ''

''ஆங் இப்படி மண்டையில் கொட்டுவேன். '' என்றபடியே அவன் கையோங்க ''ஆன்ட்டி அங்கிள் '' என்று கத்தியபடியே சிவாவின் இல்லத்திற்குள் நுழைந்தாள்.

''ஏய் நில்லு டி.. '' என்றபடியே அவனும் அவளைப் பின்தொடர இவளின் குரல் கேட்டு வந்த மரகத்தின் மேல் மோதி நின்றாள் அபி. அவளைத் தொடர்ந்து வந்த சிவாவும் அவள் மேல் மோதி நிற்க. மீண்டும் மின்சாரம் பாய்ந்து சிலையானாள் பாவையவள்.

''ஏன் டா.. காலங்காத்தால அவளோட வம்பளக்க போயிட்டியா ? உன் அப்பா பார்த்தா தோலை உரிச்சிடுவாரு. '' என்று சிவாவை மிரட்டினாள் அவன் அன்னை மரகதம்.

''ஆமாம் அளக்கறாங்க வம்பு. குள்ளக்கத்திரிக்கா டிரஸை பாரு சோளக்காட்டுப் பொம்மையாட்டம். ''

''பாருங்க ஆன்ட்டி '' என்றவள் சிணுங்க மரகதம் சிவாவின் தோளில் இரண்டு தட்டு தட்டி ''சின்னப் புள்ளைய எப்பவும் கிண்டல் அடிச்சிக்கிட்டு. போடா போய்க் கிளம்பற வழியைப் பாரு. '' என்றார்.

''அம்மா நான் வண்டியில கூட்டிக்கிட்டு போறேன்னு கூப்பிட்டா ரொம்பப் பண்றாம்மா. '' என்று புகார் கூறினான்.

''ஏன் கண்ணு அப்படியா ? '' என்று மரகதம் கேட்க.

''ஆமாம் ஆன்ட்டி இவனை நம்பி எப்படி உட்கார முடியும். இவனே புதுசு என்னை வெச்சி பிராக்டீஸ் பண்ண நினைக்கறான். நான் ரிஸ்க் எடுக்க மாட்டேன்ப்பா ''

''ஓஹோ அப்படியா ? அடியே நீயே கெஞ்சினாலும் இனி உன்னை என் வண்டியில் ஏத்த மாட்டேன். ''

''ஆங் நாங்க எதுக்குக் கெஞ்சணும். எங்களுக்கு வேற வேலை இல்ல பாரு. இவரு வந்து நம்மை வண்டியில கூட்டிக்கிட்டு போவாருன்னு காத்திருக்க நாங்க என்ன லூசா ? '' என்றவள் பழிப்பு காட்டினாள்.

''அப்படியா ? ''

''அப்படிதான். எங்க அப்பா இருக்காரு. சுந்தர் மாமா இருக்காரு அதுவும் இல்லன்னா மதன் இருக்கான். அவங்களோட போனாலும் போவேனே தவிர உன்னை நம்பி வரமாட்டேன். ''

''சரிதான் போடி குள்ளச்சி '' என்றவன் அவளை ஒரு முறை முறைத்துவிட்டு தன் அன்னையைப் பார்த்து ''அம்மா நான் காலேஜ் கிளம்பறேன். '' என்று சொல்லிவிட்டு வெளியேறினான்.

''சாரி சிவா உன்னோட வர பயமா இல்ல வெட்கமா இருக்கு.'' என்று தனக்குள் கூறிக்கொண்டாள் அபிராமி.

★★★

''அபி தூங்கல.. '' என்ற குரல் கேட்டு நினைவு கலைந்தாள் அபிராமி.

ஸ்வேதா நின்றிருந்தாள். ''ம் தூங்கணும். '' என்றவள் ''ஆமாம் உங்களுக்கு ஏன் வினோத் அண்ணாவை பிடிக்க மாட்டேங்குது. '' என்று வினவினாள்.

''அப்படி எல்லாம் ஒண்ணுமில்ல அபி. அவருதான் எப்பவும் சிடுசிடுனே பேசுவாரு. ''

''ஓ.. அப்ப அவங்க சிரிச்சி பேசினா நீங்களும் பேசுவீங்களா ? ''

''ஓ தாராளமா. இப்ப உன்கிட்ட பேசல.. ''

''என்கிட்ட பேசறது இருக்கட்டும் அவருகிட்ட என்ன

பேசுவீங்க ? '' என்று கேட்டுவிட்டு அவளை ஆழமாகப் பார்த்தாள் அபி.

''என்ன பேசுவேன்னா என்ன அர்த்தம். ஆபீஸ் விசயங்களைத் தான் பேசுவேன். '' என்றாள் ஸ்வேதா அவள் முகம் பாராமல்.

''அப்ப சரி '' என்ற அபி மெல்லிய சிரிப்பை உதிர்த்து விட்டு ''குட்நைட்...'' என்றாள்.

''ம்.. குட்நைட்.. '' என்ற ஸ்வேதாவும் உறங்க சென்றாள்.

## 5

மறுநாள் காலை ஸ்வேதாவோடு எப்போதும் போல அலுவலகம் கிளம்பியவள் வழியில் கட்டுமான பணியிடத்தில் இறங்கிக்கொண்டாள். இவ்விடத்தில் செய்ய வேண்டிய திருத்தப் பணிகளைச் செவ்வனே செய்து கொண்டு இருந்தாள்.

மதியம் போல அங்கே வருவதாகக் கூறி இருந்த வினோத் மணி மூன்றாகியும் வராமல் போகவே அவனுக்கு அழைத்தாள்.

''ஹலோ. அண்ணா வரேன்னு சொல்லி இருந்தீங்க ? ''

''அபி.. அதுக்குள்ள ஒரு வேலை. கொஞ்சம் ஹாஸ்பிட்டல் வரை வந்திருக்கேன். ''

''ஹாஸ்பிட்டலா ? என்னாச்சு அண்ணா ? ''

''ஏய் பதறாதே அபி. எனக்கு ஒண்ணுமில்ல. ரூபன் ஹாஸ்பிட்டல் வரை போகணும்னு சொன்னாரு. அதுக்காகத் தான் வந்தேன். இங்க தான் நம்ம சைட்டுக்குப் பக்கத்தில் இருக்கற ஹாஸ்பிட்டலில் தான் இருக்கேன். கொஞ்ச நேரத்தில் வந்திடறேன். ''

''ஓ.. அப்படியா ? சரிண்ணா நீங்க உங்க வேலையைப் பாருங்க நான் ஸ்வேதாவை வர சொல்லிக்கறேன். ''

''இல்ல அபி நீ அங்கையே இரு. ரூபனோட நான் அங்க தான் வரப்போறேன். கொஞ்ச நேரம்.. வந்திடுவோம். ''

''சரி அண்ணா வெய்ட் பண்றேன் '' என்றவள் அழைப்பை துண்டித்தாள்.

அரைமணியில் வினோத்தின் வண்டி சத்தம் கேட்டு மேல்

அடுக்கில் இருந்து எட்டிப்பார்த்தாள். கீழே வினோத்துடன் ஒரு ஆடவனும் ஒரு கர்ப்பிணி பெண்மணியும் வந்திருப்பதைக் கண்டாள்.

''யாரு அவங்க ? '' என யோசித்தவள் ''ஓ... ரூபன் சாரும் அவங்க வெய்ப்பும் போல. '' எனத் தனக்குத் தானே கூறிக் கொண்டு கீழே சென்றாள்.

அங்கே அவள் கண்ட காட்சி. வினோத் ரூபனின் மனைவி அமர நாற்காலி ஒன்றை எடுத்துப்போட ரூபன் அவளிடம்... ''ஐஞ்சு நிமிஷம் ஒரு விசிட் முடிச்சிட்டுக் கிளம்பிடலாம். '' என்று கூறிக் கொண்டு இருந்தான். அவன் முதுகு புறமே அபிக்குத் தெரிந்தது. அவர்களைச் சற்றே நெருங்கி.. ''வினோத் அண்ணா.. '' என்று அழைக்க வினோத்தும் திரும்பினான்.

''அபி நீயே வந்திட்டியா ? '' என்றவன்.. ''இவரு தான் நம்ம ஹெட் ரூபன். '' என்று அறிமுகப்படுத்த அபிராமி திரும்பி அவனைப் பார்த்து புன்னகையாய் தன் வணக்கத்தைத் தெரிவிக்க அவள் கண்கள் அதிர்ச்சியில் நிலை குத்தி அப்படியே நின்றுவிட்டது.

''அபி.. '' என்றான் ரூபன் வியப்புடன்.

''ரூபன் இவங்க தான் அபி... மதுரையில் இருந்து டிரான்ஸ்பரில் வந்திருக்காங்க. '' என்றான் வினோத்.

அவன் வார்த்தையில் தன்னைச் சமாளித்துக் கொண்டு தெளிந்தாள் அபிராமி. ''ஹலோ சார் ஐயம் அபிராமி. '' என்றாள் அவனை அறியாதவள் போல.

அவளுக்கு என்ன மறுமொழி கூறுவது எனத் தெரியாமல் முழித்தான் சிவரூபன். ஆம் அபியின் சிவா தான். அவனருகே இருந்த கர்ப்பிணியை ஏறிட்டு பார்த்த அபியின் மனம் சொல்லிலடங்கா மாற்றங்களுக்கு ஆளானது. அதை உணராத சிவரூபனோ 'ஒருவேளை இவ நம்மை மறந்திட்டாளோ ?' என்று எண்ணிக் கொண்டான்.

இருவரையும் கலைத்த வினோத் ''ரூபன் போகலாமா ?'' என்று கேட்க

''ஆங் போகலாம். '' என்றான் சிவரூபன்.

அபி தன் பார்வையைத் திருப்பிக் கொண்டு முன்னே நடக்க விநோத்தும் சிவரூபனும் அவளைப் பின் தொடர்ந்தனர்.

வரிசையாக ஒவ்வொரு அடுக்காகப் பார்வையிட்டவர்கள் அங்கங்கே செய்ய வேண்டிய திருத்தங்கள் , சேர்க்க வேண்டிய மாற்றங்கள் குறித்து விவாதித்து எழுதிக் கொண்டனர்.

முழுதாக ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆனது. இன்னும் அவர்கள் பார்வையிட வேண்டிய பகுதிகள் முழுமையடையவில்லை. விநோத்தும் ரூபனும் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது கீழே ரூபனுடன் வந்திருந்த பெண் நாற்காலியிலேயே உறங்கிவிட அதைக் கவனித்தாள் அபி.

'கூட வந்தவங்க நினைப்பே இல்லாம இருக்கறதை பாரு' என்று மனதில் அவனைத் திட்டிக் கொண்டவள் விநோத்தை நெருங்கினாள்.

''விநோத் அண்ணா இவங்க வொய்ப் உட்கார்ந்துக்கிட்டே தூக்கறாங்க. பாவம்... இந்த மாதிரி நேரத்தில் இப்படியா அவங்களைக் கவனிச்சிக்கறது ? வீட்டுல விட்டுட்டு வரதில்லை என்னதான் ஹெட்டோ ? நாம வெய்ட் பண்ணலாம் அவங்களை முதலில் விட்டுட்டு வரச்சொல்லுங்க. '' என்று காரமாகக் கூறினாள்.

அவள் வார்த்தைகள் கேட்டு விநோத் துணுக்குற்றான். இதுவரை ரூபனை யாரும் இப்படிப் பேசியதில்லை. என்னதான் ரூபன் சிரித்து அனைவரிடமும் பேசினாலும் கோபம் வந்தால் அவ்வளவுதான். உண்டு இல்லை என்று செய்துவிடுவான்.

''அபி ஏன் இப்படிப் பேசற ? '' என்று அவளை ஜாடையால் அமைதியாக இருக்கும் படி கூற.

''என்ன தப்பா பேசிட்டேன் ? உண்மையைத் தானே சொல்றேன். யாராவது கர்ப்பிணி பொண்ணை இப்படிக் கட்டிட வேலை நடக்கற இடத்துக்குக் கூட்டிக்கிட்டு வருவாங்களா ? யோசிக்க வேண்டாம். எத்தனை டஸ்ட் இருக்கு அவங்களுக்கும் , உள்ள இருக்கற குழந்தைக்கும் பாதுகாப்பு தர வேண்டியது இவரோட முதல் கடமை இல்லையா ? '' என்று பொரிந்தாள் அபிராமி.

விநோத் தவித்தான். அவள் கூறுவது உண்மைதான். ரூபன்

தன்யாவை மருத்துவமனையிலேயே காத்திருக்கும் படி கூறினான். ஆனால் அவள் தான் பிடிவாதமாக உடன் வந்தாள். இங்கே அபி ரூபனை சாடி பேசுவதை அவனால் ஏற்கவும் முடியவில்லை. ஏற்காமல் மௌனம் காக்கவும் முடியவில்லை.

''அபி உண்மை தெரியாம மத்தவங்க மேல தப்புச் சொல்லக்கூடாது''. என்று பொதுவாக இருவருக்கும் சமாளிப்பாகப் பேசி வைத்தான் வினோத்.

''வினோத் நீங்க தன்யாவை வீட்டில் விட்டுட்டு வந்திடுங்க. நான் இங்க இருக்கற வேலையை அபிராமி மேடம் கிட்ட சொல்லிடறேன். '' என்று அழுத்தமாகப் பேசினான் சிவரூபன்.

''ரூபன் நான் எப்படி ? நீங்க போயிட்டு வாங்க. நாங்க வெய்ட் பண்றோம். எங்களுக்குப் பிரச்சனை இல்லை. '' என்றான் வினோத் தயக்கத்துடன்.

''ஏன் வினோத் எனக்காக இந்தச் சின்ன உதவி கூடச் செய்ய மாட்டீங்களா? அல்ரெடி இரண்டு வாரமா டிராவல் பண்ணி இருக்கேன். வந்ததுமே ஆபீஸ் வந்திட்டேன். மதியமே ஹாஸ்பிட்டல் வேற போக வேண்டியதா போச்சு. இப்ப வீட்டுக்கு போயிட்டு திரும்பவும் இங்க வரது எனக்குத் தான் அலைச்சலா இருக்கும். அதான் ஒரு உதவி கேட்டேன். சரிவிடுங்க தன்யா வெய்ட் பண்ணட்டும் இன்னும் ஒரு மணி நேரம் தானே ஒண்ணும் பிரச்சனை இல்லை. '' என்றவன் அடுத்தத் தளம் நோக்கி சென்றான்.

''என்ன அண்ணா இது ? இப்படிப் பேசறாரு ? '' என்றாள் அபி வினோத்திடம்.

''ம் '' என்றவன் ரூபனிடம் ''ரூபன் தன்யாவுக்கு என்னோட வர்றதுல பிரச்சனை இல்லன்னா எனக்கு ஒண்ணும் ஆட்சேபம் இல்ல. '' என்றான்.

''தட்ஸ் குட் வாங்க நானே அனுப்பி வைக்கறேன். '' என்றவன் வினோத்தை நெருங்கி அவன் தோள் மேல் கைபோட்டு கீழே செல்ல திரும்பினான். சட்டென நின்றவன் அபியை பார்த்து ''வெய்ட் பண்ணுங்க மேடம் வந்திடறேன். '' என்றுவிட்டு நடந்தான்.

கீழே சென்றவர்களை மேலே இருந்து பார்த்துக் கொண்டு

நின்றிருந்தாள் அபிராமி. இத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த கண்ணீர் இப்போது கரையை உடைத்துக் கொண்டு வெளியேறியது.

''உனக்குக் கல்யாணம் ஆகிடுச்சா சிவா. என்னை மறந்திட்ட இல்ல. கடைசி வரை என் உண்மையான அன்பு உனக்குப் புரியவே இல்லை. அதான் எனக்கு வருத்தமா இருக்கு. '' எனத் தன்னுள் இருந்தவனிடம் கூறி தன் குமுறலை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள்.

ஃஃஃ

சிவரூபன் ''தன்யா வினோத்தோட வீட்டுக்கு போயிடுங்க. எனக்கு இன்னும் கொஞ்சம் வேலை இருக்கு முடிச்சிட்டு வர நேரமாகும். அதான் சொல்றேன். '' என்றான்.

''நான் ஆட்டோ பிடிச்சு போயிக்கறேன் நீங்க பாருங்க. ''

''இல்ல இல்ல இத்தனை மணிக்கு மேல ஆட்டோவில் தனியா அனுப்ப முடியாது. நீங்க வினோத்தோட போங்க. ''

''வேண்டாம் சிவா '' என்றாள் தன்யா தளர்ந்து போன குரலில்.

''அம்மா கிட்ட நான் சொல்லிக்கிறேன். நீங்க வினோத்தோட கிளம்புங்க. வினோத் பத்திரமாகூட்டிக்கிட்டு போங்க'' என்றுவிட்டு கைப்பேசியை எடுத்து தன் அன்னையின் எண்களைத் தொடர்பு கொண்டான்.

''ஹலோ சிவா சொல்லுப்பா.. '' என்றார் மரகதம்.

''அம்மா தன்யாவை என்கூட வேலை பார்க்கற வினோத்தோட அனுப்பி இருக்கேன். அன்னைக்குக் கூட வந்தாரே. அவரோட தான். நீங்க தன்யாவை எதுவும் சொல்லாதீங்க. '' என்றான் கராரான குரலில்.

''அவளை எதுவும் சொல்ல கூடாதுன்னு தான் முன்னாடியே செ ால்லிட்டியே. இப்ப எதுக்குத் திரும்பவும் ஆரம்பிக்கற ? ''

''அம்மா ''

''என்ன ? ''

''சண்டை போடாதீங்க. எனக்கு வேலை இருக்கு. தன்யாவை எதுவும் சொல்லாதீங்கன்னு சொல்லத்தான் கூப்பிட்டேன். இப்ப வெச்சிடறேன். '' என்று விட்டு அவரின் பதிலை எதிர்பாராமல்

அழைப்பை துண்டித்தான்.

கண்களை மூடி ஒரு நெடிய மூச்சை இழுத்துவிட்டவன் மேலே நோக்க அபி தன் முதுகு புறத்தை காட்டியபடி நின்றிருந்தாள்.

‘இவளுக்கு நிஜமாவே நம்மை அடையாளம் தெரியலையா? இல்ல வேணும்னே தெரியாத மாதிரி நடிக்கிறாளா ?’ எனக் கேட்டபடியே அவள் இருந்த தளம் நோக்கி நடந்தான்.

அவன் வருகையைக் கால் சத்தத்தில் உணர்ந்தவள் தன் கண்ணீரை உள்ளிழுத்து தன் மனதை சமன் செய்து முகத்தைக் கைக்குட்டையால் அழுந்த துடைத்து திடமான பார்வையுடன் அவனை எதிர்க்கொள்ளத் தயாரானாள்.

‘‘போகலாமா ? ’’ என்றவன் குரல் மிக அருகில் கேட்க ‘‘ம்.. ’’ என்று கூறிவிட்டு நடந்தாள்.

ஒவ்வொரு தளமாகக் கடந்தவர்கள் பணி சேதிகளைத் தவிர வேறு சேதிகளைப் பேசிடவில்லை. அவர்கள் பணி முடியவும் மாலை மங்கவும் சரியாக இருந்தது. இருவரும் கட்டிடத்தில் இருந்து கீழே இறங்கி வந்தனர்.

வினோத் இன்னும் வரவில்லை. சிவா தன் இருசக்கர வாகனத்தை நோக்கி எட்டு வைத்தான். அபிராமியோ வினோத்தின் எண்ணிற்கு அழைக்க அது சுவிட்ச் ஆப் என்று வந்தது. ஸ்வேதாவின் எண்ணிற்கு அழைக்க அது தொடர்பு எல்லைக்கு அப்பால் உள்ளதாகக் கூறியது. யோசனையுடன் கைகளைப் பிசைந்தபடியே நின்றிருந்தவளை அணுகினான் சிவரூபன்.

‘‘ஏதாவது பிரச்சனையா ? ’’

அவன் குரல் கேட்டு நிமிர்ந்தவள் ‘‘ஒண்ணுமில்ல.. ’’ என்று கூறிவிட்டு நடக்கத் தொடங்கினாள்.

‘‘அபி வீடு எங்க இருக்குன்னு சொல்லுங்க நானே டிராப் பண்றேன். ’’ என்றபடியே அவள் கை பிடித்து நிறுத்தினான் சிவரூபன்.

அவன் கைகளை உதறி விட்டாள் ‘‘மிஸ்டர் என்ன இதெல்லாம்’’ என்று கத்தினாள்.

‘‘ஏய் அபி.. எதுக்கு இத்தனை டென்ஷன் ஆகறீங்க, டிராப் பண்றேன்னு தானே சொன்னேன். ’’

‘‘உங்க உதவியை எதிர்பார்த்து யாரும் இங்க காத்திருக்கல,

புரியுதா ? ''

''எதுக்குக் கோவப்படறேன்னு எனக்குச் சத்தியமா புரியல அபி. என்னை இன்னுமா அடையாளம் தெரியல. சிவா டி '' என்றான் உரிமையுடன்.

''ஹாய் அபி வேலை முடிஞ்சிதா ? '' என்று கேட்டபடியே அங்கே வந்தாள் ஸ்வேதா.

''ஹப்பா '' என்றிருந்தது அபிக்கு.

''ஆங் முடிச்சிது ஸ்வேதா உங்களுக்குக் கால் பண்ணினேன் ஆனா டவர் கிடைக்கல ''

''ஓ.. இந்த போன் அப்பப்போ இப்படித் தான் பண்ணுது. அடுத்த மாசமாவது போனை மாத்தணும். '' என்ற ஸ்வேதா ''ஹாய் ரூபன்.. என்றிட.

''ஹாய் '' என்றான் அவன்.

''உங்களோட தான் இந்த மேடம் தங்கியிருக்காங்களா ? '' என்று அவன் கேட்க

''ஆமாம் ரூபன். ''

''சரி கிளம்புங்க நாளைக்குப் பார்க்கலாம். '' என்று விட்டு தன் வண்டியை எடுத்தான்.

அபி ஸ்வேதாவின் வண்டியில் ஏறிக் கொள்ள வண்டி கிளம்பியது. சிவா ஒருபுறமும் அபி மறுபுறமாகப் பிரிந்து சென்றனர். பின்புறமாக அமர்ந்திருந்தவள் விழிகள் எதிர்புறமாகச் செல்லும் அவனையே பார்த்துக் கொண்டிருக்க, அதைத் தன் வண்டியில் இருந்த கண்ணாடி வழியே பார்த்துவிட்டான் சிவரூபன்.

'குள்ளச்சி. என்கிட்டையே தெரியாத மாதிரி நடிக்கிறியா? இரு உன்னைச் சுத்தலில் விடறேன்.' என்று புன்னகையுடன் கூறிக்கொண்டான்.

## 6

**அ**றையை அடைந்த அபி குளியலறைக்குள் தன்னைப் புகுத்திக் கொண்டாள். ஏன் அபி அவனைப் பார்த்ததும் சகஜமா பேசி இருக்கலாமே? அவனுக்குக் கல்யாணமாகி இருந்தாலும் இல்லைன்னாலும்

அவனை எதிர்கொண்டு உன்னோட அன்பின் ஆழத்தை புரிய வைக்கணும்னு தானே நினைச்சிருந்த அப்புறம் ஏன் இப்படி நடந்துக்கிட்ட ?' என்று கண்ணாடியில் தெரிந்த தன் பிம்பத்திடம் கேட்டாள்.

'அவனை ஒரு பொண்ணோட பார்த்ததும் மனசுக்கு கஷ்டமாகிடுச்சு. எனக்காகவே காத்திருப்பான்னு நினைக்கல இருந்தாலும்... இருந்தாலும் என்னால அதை ஏத்துக்க முடியல.'' என்று கூறியவள் கண்கள் நீரை கசிய ''எதுக்கு அழற ? அவன் தான் அப்பவே சொன்னானே உனக்காக நான் காத்திருக்க மாட்டேன்னு அதானே நடந்திருக்கு அமைதியா இரு. அழுது உன் பலகீனத்தை வெளிப்படுத்தாதே. அவன் முன்னாடி நீயும் கெத்தா இருக்கணும். அதான் உனக்கு நல்லது. இல்லன்னா அவன் அதையே உன்னை கலாய்க்க ஒரு வாய்ப்பா எடுத்துப்பான். பீ ஸ்டார்ங் அபி. '' என்றவள் வந்த அழுகையை முழுங்கினாள்.

முகத்தைத் தண்ணீரில் அடித்துக் கழுவ. அந்தத் தண்ணீரில் அவள் கண்ணீரும் கரைந்து ஓடியது. முகம் கழுவி வந்தவள் செவிகளுக்குக் கைப்பேசியின் மெல்லிய இசை கேட்க கட்டிலில் கிடந்த கைப்பேசியை நோக்கி சென்றாள். அபியின் தந்தை அழைத்திருக்க அழைப்பை ஏற்றுக் காதில் வைத்தாள்.

''ஹலோ அப்பா ''

''அபிம்மா எப்படி டா இருக்க ?''

''நல்லா இருக்கேன்ப்பா ''

''அங்க எல்லாம் செட்டாகிடுச்சா. வேற வீடு பார்த்திட்டியா ?''

''இல்லப்பா இப்போதைக்கு இந்த ரூமே போதும்ன்னு நினைக்கறேன்.''

''ஏன்ம்மா ? நாங்க அங்க வரவேண்டாமா ? ''

''எதுக்குப்பா தேவையில்லாம அலைஞ்சிக்கிட்டு. தங்கச்சிங்களும் அலையணும். நீங்க அங்கயே இருங்க அதுதான் எங்க மூணு பேருக்கும் வந்து போக வசதியா இருக்கும். இங்க கூட இருக்கறவங்க எல்லாம் நல்லவிதமா தான் பழகறாங்க அதனால பயப்பட எதுவுமில்லப்பா ''

''ம் '' என்றவர் சற்று இடைவெளி எடுக்க'' அப்பா ?

என்னாச்சுப்பா?'' என்றாள்.

''இல்லடா அபி நீ அங்க ரூமில் இருக்கறது எங்களுக்குப் பிரச்சனை இல்லை. அடுத்த வாரம் நானும் அம்மாவும் வரோம் எங்களுக்கும் அங்க எல்லாம் சரியாபட்டுச்சுன்னா நீ அங்கேயே இருக்கலாம். இல்லன்னா வீடு பார்த்திடலாம். ''

இப்போது அபி மௌனமாக ''என்னடா ? கோவமா ? '' என்றார் பாலன்.

''ச்சேச்சே. அதெல்லாம் ஒண்ணுமில்லப்பா உங்க பொண்ணோட பாதுகாப்பு உங்களுக்கு முக்கியம் தானே. நீங்க வந்து பாருங்க அப்புறமா உங்க முடிவை சொல்லுங்க. நான் எதுவும் நினைக்கல. ''

''அப்ப சரி '' என்றவர் சற்றே தயங்கி'' அபி, அந்த வரன் வீட்டில் இருந்து திரும்பவும் கூப்பிட்டிருந்தாங்க டா. நீ சொன்னதை நான் மேலோட்டமா சொன்னேன். பொண்ணு கொஞ்சம் டைம் கேட்கறான்னு அதுக்கு அவங்க... அப்படின்னா இப்ப நிச்சயம் பண்ணிப்போம் ஆறு ஏழு மாசம் கழிச்சி கல்யாணத்தை வெச்சிப்போம்னு சொல்றாங்க. ''

''.... ''

''அபி ''

''ம் ''

''என்னடா சொல்ல ''

''அப்பா எனக்கு.. யோசிக்கணும் திடீர்னு முடிவெடுக்க முடியலப்பா ''

''நீ வேணா அந்தப் பையனோட பேசி பார்க்கறீயா ? ''

''இல்லப்பா அது...''

''தயங்காதே அபி பேசிப்பாரு பேசினா ஒரு தெளிவு கிடைக்கலாம். அதான் சொல்றேன். ''

சற்றே யோசித்தவள் தயங்கத்துடன் சரி என்றிட, அவரும் மகிழ்வுடன் அழைப்பை துண்டித்தார். கைப்பேசியைக் கட்டிலில் போட்டவள் பொத்தென்று மெத்தையில் அமர அவள் சிந்தை முழுதும் குழப்பமே வியாபித்திருந்தது.

சிவா அபி குறித்த யோசனையுடனே வீட்டை அடைந்தான்.

''ஏன்டா கண்டவனோட அவளை அனுப்பி வைக்கற ? '' என்ற கடுங்குரல் அவனைக் கலைக்கத் தலை நிமிர்ந்தான்.

எதிரே மரகதம் கனல் பார்வையோடு நின்றிருந்தார். ''ம்ச்.. இப்ப என்ன ?'' என்றவன் சோபாவில் அமர்ந்தான்.

''ஏற்கனவே இவளால போனதெல்லாம் பத்தாதா ? எவனோ ஒருத்தனோட வந்து இருக்கற மானமும் போகணுமா ?''

''அம்மா அது யாரோ இல்ல. என்னோட ஆபீஸில் வேலை பார்க்கற நண்பன் தான். நான் தானே அனுப்பி வெச்சேன். போன் பண்ணி தெளிவா சொன்னேன் தானே. இப்ப ஏதோ பேசணுங்கறதுக்காக அதை எடுத்து வெச்சி பேசாதே '' என்றான் தன் காலில் இருந்த சாக்ஸை களைந்தபடியே.

''சிவா அவளுக்கு நீ ரொம்ப இடம் கொடுக்கற. இது நல்லதுக்கு இல்ல''

''அம்மா சும்மா தொனதொனங்காம காபி கொண்டு வாங்க. தலை வலிக்குது.''

''ம்ஹூம் எது சொன்னாலும் என் வாயை அடைச்சிடு. '' என்றபடியே சமையலறை உள்ளே சென்றார் மரகதம்.

சோபாவில் இருந்து எழுந்தவன் தன்னறை நோக்கி செல்ல மெல்லிய அழு குரல் கேட்டு நின்றான். கதவை தள்ள அது திறந்துக்கொண்டது. உள்ளே தன்யா மதனின் புகைப்படத்தைக் கட்டிக்கொண்டு அழுதபடியே படுத்திருந்தாள்.

''தன்யா '' என்ற அழைப்புடன் உள்ளே நுழைந்தான். தன்யா சமாளித்து எழுந்து அமர்ந்தாள்.

''வாங்க '' என்றவள் கண்களை அவசரமாகத் துடைத்துக்கொள்ள.'' அழக்கூடாதுன்னு சொல்லியும் அழுதா என்ன அர்த்தம் ? இன்னிக்குக் கூட டாக்டர் அதைத் தானே சொன்னாங்க. ரொம்ப ஸ்டெரெஸ் பண்ணிக்கக் கூடாதுன்னு. ஏன் இப்படிப் பண்றீங்க ? ''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல சிவா.. அவரோட ஞாபகம் வந்துடுச்சு. அதான் அழுகையைக் கன்ட்ரோல் பண்ண முடியல. ஸாரி இனிமேல் அழ மாட்டேன். ''

''எல்லாம் வாய் தான். சொல்ற எதையும் செய்யறது இல்ல. ''

என்றவன் முறைப்பாக அவளைப் பார்க்க அவள் தலை குனிந்து கொண்டாள்.

''காபி கேட்டுட்டு இங்க என்னடா பண்ற ? '' என்ற படியே வந்தார் மரகதம்.

''அம்மா அண்ணியை அழாம பார்த்துக்கோ... அவங்க மனசால ரொம்பவே பாதிக்கப்பட்டிருக்காங்க. இந்த நேரத்தில் நீங்க தானே துணையா இருக்கணும். நீங்களே கோபத்தோட நடந்துக்கறது சரியா சொல்லுங்க. ''

''டேய் அவ சும்மா சும்மா அழுதா அதுக்கு நான் என்ன பண்ண முடியும்.''

''அம்மா ''

''இங்க பாரு சிவா இவளை பத்தி என்கிட்ட பேசாதே. ''

''உங்ககிட்ட பேசாம வேற யார் கிட்ட பேசறது ? ''

''.... ''

''இப்ப அவங்களுக்கு நம்மை விட்டா வேற யாரு இருக்கா ? ''

''... ''

''மாமியாரா இல்லாம ஒரு பொண்ணா இருந்து அவங்களைப் பாருங்க. அப்பதான் அவங்க வேதனை உங்களுக்குப் புரியும். ''

''பேசு டா நல்லா பேசு. நான் மாமியாரா யோசிக்கறேன். அரக்கத்தனமா நடந்துக்கறேன் இப்படி என்ன வேணா செ ால்லிக்கோ. என் வேதனை புரியல உனக்கு. ''

''அம்மா. உன்னைவிட அதிகப் பாதிப்பு அவங்களுக்குத் தான். ''

''சிவா வேணாம் இவளை பத்தி எதுவும் பேசாதே. இவளை என்னால பார்த்துக்க முடியாது. ''

''இப்படிச் சொன்னா என்ன அர்த்தம் ? ''

''என்ன அர்த்தம்னா முடியாதுங்கறது தான். '' என்றவர் முகத்தைத் திருப்பிக்கொண்டு வெளியேறினார்.

''அண்ணி அம்மா பேசறதை மனசில் ஏத்திக்காதீங்க. அவங்களுக்கும் வேதனை இருக்கும் தானே. ஆனா அந்த வேதனையோட கோபமும் சேர்ந்து இருக்கறதால தான் இப்படி நடந்துக்கறாங்க. குழந்தை பிறந்தா எல்லாம் சரியாகிடும். அதுவரை நீங்க தான் தைரியமா இருக்கணும். அழாதீங்க. அழுது

என்ன ஆகப்போகுது. போனவங்க திரும்ப வரவா போறாங்க ? இப்ப உங்க உடல்நிலையும் உங்க வயிற்றில் இருக்கற சிசுவோட ஆரோக்கியமும் தான் முக்கியம். கொஞ்சம் கஷ்டம் தான்... இருந்தாலும் மனசை தேத்திக்கிட்டுத் துக்கத்தில் இருந்து வெளிய வாங்க.'' என்று ஆறுதல் வார்த்தைகளை உதிர்த்துவிட்டு அறையில் இருந்து வெளியேறினான்.

தன்னறைக்குள் நுழைந்தவன் கண்கள் குளமாகி இருக்க அதை மறைக்க முடியாமல் குளியலறை சென்று கதறி அழுதான்.

கீழே மரகதமும் சமையலறையில் கண்ணீருடன் அமர்ந்திருக்க தன்யாவோ தன்னை விட்டு சென்ற கண்ணாளனின் புகைப்படத்தைச் சுவற்றில் மாட்டிவிட்டு. ''அம்மா அப்பா சொந்த பந்தம் எல்லாத்தையும் உனக்காகத் தூக்கிப் போட்டுட்டு வந்தேன். ஆனா நீ என்னை இப்படித் தனியா விட்டுட்டு போயிட்டியே மதன். இது நியாயமா ? '' எனக் கேட்க பதில் சொல்ல அவன் இல்லாமல் போனதை உணர்ந்து.... சோர்வுடன் கட்டிலில் அமர்ந்துவிட்டாள்.

## 7

மறுநாள். அலுவலகம் கிளம்பிய சிவாவை நெருங்கினார் மரகதம்.

''சிவா.. ''

''ம் சொல்லுங்கம்மா ''

''நேத்து டாக்டர் என்ன சொன்னாங்க ? குழந்தை நல்லா இருக்கில்ல ? ''

அவரைத் திரும்பி பார்த்தவன் ''அம்மா அப்பவும் அண்ணி உடம்பு எப்படி இருக்குன்னு கேட்க தோண மாட்டேங்குது இல்ல.''

''உன்னை வந்து கேட்டேன் பாரு.. '' என்றவர் நகர முயல. அவரின் கை பிடித்து நிறுத்தினான் சிவா.

''அம்மா உன் அன்பு எனக்குத் தெரியாதா ? ஆனா அதைக் காட்ட ஏன் யோசிக்கறீங்க ? அண்ணன் இருக்கும் போது கூடப் பரவாயில்லை... இப்ப அவனும் இல்ல. அவனோட உயிரை சுமந்துக்கிட்டு நிக்கறவங்களை ஏன் சங்கடப்படுத்தறீங்க ? பாவம் அம்மா ''

அதைக் கேட்ட மரகதத்தின் கண்கள் கலங்கியது. அதைத் தன் புடவை தலைப்பால் துடைத்தவர்.. ''எனக்கு மட்டும் ஆசையா என்ன ? ஆனா என்னால அவளோட சகஜமா பழக முடியல சிவா. மதன் இருக்கற வரை அவ என்னோட சகஜமா பழக முன் வரவே இல்லை. இப்பவும் என்னை எதிரியா தான் பார்க்கறா ? ஏதாவது சொன்னா புரிஞ்சிக்காம கண்ணைக் கசக்கறா. நான் என்னத்த பண்ண ?'' என்றார்.

''எனக்குப் புரியுதும்மா... இருந்தாலும் கொஞ்சம் கவனமா பார்த்துக்கோங்க. அவங்க உடம்பு ரொம்பவே வீக்கா தான் இருக்கு. அதிக பாரம் தூக்கக் கூடாதுன்னு சொல்லி இருக்காங்க. இரத்த சத்து வேற ரொம்பவே குறைவா இருக்காம். ஏதோ மருத்து போடணும்னு சொன்னாங்க. நேத்து ஒரு ஊசி போட்டாச்சு. இன்னும் மூணு போடணும். இரண்டு நாளைக்கு ஒரு தடவை போகணும். ''

''அப்போ குழந்தை ''

''ம் உங்க கவலை உங்களுக்கு.. '' என்றவன் ''உங்க பேர குழந்தைக்கு எந்தக் குறையும் இல்ல. நல்லா ஆரோக்கியமா இருக்காம். இதுல ஸ்கேன் ரிப்போர்ட் இருக்கு எடுத்து பாருங்க. எனக்கு டைமாகுது நான் கிளம்பறேன். '' என்ற படியே சிவா அறையில் இருந்து வெளியே வர அவன் தந்த ரிப்போர்ட்டில் இருந்த ஸ்கேன் புகைப்படத்தைப் பார்த்து ஆசையாக வருடிக்கொடுத்தார்.

''பேரக்குழந்தையைப் பார்த்ததும் பிள்ளையை மறந்திட்டீங்க. காலை டிபன் எதுவும் போடுவீங்களா ? இல்ல கிளம்பவா ? '' என்று குரல் கேட்க மரகதம் தன் பார்வையைத் திரும்பினார்.

அறையின் வாசல் கதவில் சாய்ந்த படியே கைகளை மார்பின் குறுக்கே கட்டி நின்றவனைக் கண்ட மரகதத்தின் கண்கள் பனித்தது. அவனை நெருங்கியவர் வாஞ்சையுடன் அவன் தலையை வருடி கொடுத்து. ''உன் அப்பாவையும் அண்ணனையும் உன் உருவத்தில பார்த்து தான் மனசை தேத்திக்கறேன். உன்னை விட்டா எனக்கு வேற யாருடா இருக்கா '' என்றார்... மரகதம்.

''அம்மா ப்ளீஸ். நான் ஆபீஸ் கிளம்பணும். திரும்பவும் நீங்க அழுதா நான் என்ன பண்ணுவேன். '' எனக் கேட்டு அவரைக்

கட்டிக்கொண்டான்.

சற்று நேரத்தில் சமாதானம் அடைந்தவர் அவனுக்குக் காலை உணவை பரிமாற உணவு மேஜைக்கு அழைத்துச் சென்றார். அங்கே தன்யா முன்பே வந்து அமர்ந்திருந்தாள். மரகதத்தைக் கண்டவள் சிவாவை பார்த்து. ''பசிக்குது அதான் வந்தேன். '' என்றாள்.

''பசிச்சா போட்டு சாப்பிட வேண்டியது தானே. எதுக்கு உட்கார்ந்துக்கிட்டு இருக்கணும். '' என்று மரகதம் கூற

தன்யா ''சாப்பிட வந்தது ஒரு குத்தமா ? எதுக்கு இப்படிப் பேசறீங்க ?'' என்று கண் கலங்க கேட்டாள்.

''அண்ணி அம்மா சாப்பிட தானே சொன்னாங்க அதுக்கேன் அழறீங்க ?'' என்று கேட்க

''எல்லோரும் என்னையே திட்டுங்க. எனக்காகக் கேட்க யாரு இருக்கா? எல்லாம் என் விதி. '' என்றபடியே எழுந்து ஓடினாள்.

''என்னம்மா இது ? ''

''இப்ப புரியுதா ? தொட்டதுக்கு எல்லாம் அழுதா நான் என்னதான் பண்றது. '' என்ற மரகதம் ஒரு பெருமூச்சை இழுத்துவிட்டார்.

''நான் போய்ப் பேசவா ? '' என்று சிவா தயக்கமாகக் கேட்க.

''வேண்டாம் நான் பார்த்துக்கறேன். நீ உட்கார்ந்து சாப்பிடு. '' எனக் கூறி உணவை பரிமாறினார். அரை மனதுடன் பாதி சாப்பிட்டு எழுந்து கொண்டான்.

மரகதம் காலை உணவைத் தட்டில் வைத்து தன்யாவின் அறை நோக்கி சென்றார். அறை உள்ளே இருந்த மேஜை மேல் தட்டை வைத்துவிட்டு மௌனமாக வெளியேறினார். அவர் வெளியே வரும் வரை வண்டியில் காத்திருந்தவன் அவர் வெறும் கையுடன் வெளியே வந்ததில் நிம்மதியுடன் அலுவலகம் கிளம்பினான்.

அவன் அலுவலகத்தை நெருங்கவும் ஸ்வேதாவுடன் அபிராமி அலுவலகம் வரவும் சரியாக இருந்தது. அவளைக் கண்டதும் அவன் மனதில் இருந்த கவலை மறைந்து முகத்தில் புன்னகை அரும்பியது.

'கேடி. என்ன எல்லாம் டயலாக் பேசின. கட்டினா உன்னைத் தான் கட்டுவேன். சாகற வரை மறக்க மாட்டேன் அப்படின்னு அழுது சீன் போட்டவ இப்ப என்னை அடையாளம் கூடத் தெரியாத மாதிரி நடிக்கறா ? இரு இரு உன்னை என்ன பண்றேன் பாரு.' என

மனதில் நினைத்த படியே ஸ்வேதாவின் வண்டியை இடிக்கும் படி சென்று நிறுத்தியவன்.

''குட் மார்னிங்'' என்றான் இருவருக்கும் பொதுவாக.

ஸ்வேதா பதிலுக்கு ''குட் மார்னிங் '' என்றிட. அபி எதுவும் கூறாமல் வண்டியில் இருந்து இறங்கி சென்றாள்.

''மேடம் மரியாதைக்குக் கூட குட் மார்னிங் சொல்ல மாட்டாங்க போல. ''

''அப்படி எல்லாம் இல்ல ரூபன் காலையில இருந்து ஏதோ டிஸ்டர்பா இருக்கா அதான். நீங்க இதைப் பெருசா எடுத்துக்காதீங்க''. என்று ஸ்வேதா கூற சற்றே அதிர்வுடன் ''ஏதாவது சீரியஸ் பிரச்சனையா ? '' என்றான்.

''தெரியல ரூபன். ஆனா பெருசா எதுவும் இருக்கற மாதிரி தோணல.'' என்றாள்.

''ஓ. '' என்றவன் யோசனையுடன் வண்டியை பார்க் செய்துவிட்டு அலுவலகம் உள்ளே நுழைந்தான்.

அபி தன் இருக்கையில் அமர்ந்திருப்பதைப் பார்த்தபடியே தன்னறை நோக்கி சென்றான். அவன் செல்லும் வரை அவனைப் பாராமல் இருக்கப் பெரும்பாடுபட்டவள், அவன் அறைக்குச் சென்றதை கடைக்கண்ணால் கவனித்து அறிய தன் பார்வை உயர்த்தி வினோத்தை தேடினாள்.

வினோத் மற்றொரு அலுவலக ஊழியருடன் பேசிக்கொண்டிருப்பதைக் கவனித்தவள். அவனை நோக்கி சென்றாள்.

''அண்ணா.. ''

''அபி வந்திட்டியா ? சாரி மா நேத்து போன் சுவிட்ச் ஆப் ஆயிடுச்சு. அதான் பேச முடியல. பத்திரமா வீட்டுக்கு போயிட்ட தானே. ஸ்வேதா வந்துட்டாங்க தானே ? ''

''ம் ''

''ஏன் ஒரு மாதிரியா இருக்க ? உன் முகத்துல கலகலப்பே காணோம். ஏதாவது பிரச்சனையா ? ''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல அண்ணா. '' என்றவள் கூறிக்கொண்டு இருக்கும் போதே அங்கு வந்த ஸ்வேதா. ''உங்க பாசமலர் காலையில் சாப்பிடல. காரணம் கேட்டா சொல்ல

மாட்டேங்கறா ? உர்ன்னு மூஞ்சை வெச்சிருக்கா. '' என்று அவளை மாட்டிவிட வினோத் அபியை கேள்வியாய் பார்த்தான்.

''பசிக்கல அண்ணா அதான். வேற எதுவும் காரணம் இல்ல. ''

''இப்படிச் சொன்னாலே ஏதோ காரணம் இருக்குன்னு தான் அர்த்தம்.'' என்றாள் ஸ்வேதா.

''நீங்க வேற ஏத்தி விடாதீங்க ஸ்வேதா. ''

''இப்ப என்ன ஏத்தி விடறாங்க. சரியான காரணத்தைச் சொன்னா. அமைதியா போயிடப்போறோம். '' என்றவளை முறைத்தாள் அபி.

''எனக்குத் தெரியும் ஸ்வேதா. நான் பார்த்துக்கறேன். உங்க இன்பர்மேஷனுக்குத் தேங்க்ஸ். '' என்றான் வினோத் புன்னகையுடன்.

''பாருடா கடுவன் பூனை சிரிக்குது. '' என்றவள் வாய் பிளந்தபடியே கூற, வினோத் அவளை முறைத்தான் ''திரும்பவும் மைண்ட் வாய்ஸ் வெளிய கேட்குது ஸ்வேதா. '' எனக் கூறி அவளைக் கலாய்த்தாள் அபி.

''ஸாரி.. ஸாரி '' என்றபடியே ஓடிவிட்டாள் ஸ்வேதா. அவளைப் பார்த்து சிரித்தபடியே நின்றிருந்தவளிடம். ''அந்த அட்ரஸில் யாரு இருந்தா அபி?'' எனக் கேட்டு அவள் சிந்தனையைத் தன் பக்கம் திரும்பினான் வினோத்.

சிரித்துக் கொண்டிருந்தவள் முகம் சட்டெனச் சுருங்கியது. குரல் தடுமாற... ''எந்த அட்ரஸ் ? '' என்றாள்.

அவள் மாற்றத்துக்குக் காரணம் அந்த முகவரி தான் என்பதை மனதில் குறித்துக் கொண்ட வினோத் ''சரி வா கேன்டீன் போகலாம். '' என்று கூறி அவன் தோளில் கை போட்டு இழுத்துச் சென்றான்.

## 8

**கே**ன்டீனில் இருந்த நாற்காலியில் அபியை அமர்த்திவிட்டு உணவு வாங்கி வந்தான் வினோத்.

''எனக்குப் பசிக்கலண்ணா நீங்க சாப்பிடுங்க. ''

''ஒழுங்கா சாப்பிடு அபி. '' என்று அதட்டி அவளைச் சாப்பிட வைத்தான். அவளும் அவன் அன்பை நிராகரிக்க முடியாமல் வேண்டா வெறுப்பாக உணவை உண்ணத் தொடங்கினாள்.

''ஏன் அபி உங்க அப்பா என்ன வேலை பார்த்தாரு ? '' என்று கேள்வி கேட்டு அவள் வாயை கிளர தொடங்கினான் வினோத்.

''அப்பா இரயில்வே வேலையில் இருந்தாரு அண்ணா. ''

''இங்க எத்தனை வருஷம் இருந்தீங்க ? ''

''அது ஒரு ஏழு எட்டு வருஷம் இருந்திருப்போம். ''

''ஒரே ஏரியாவில் தான் இருந்தீங்களா ? ''

''ஆமாம் அண்ணா. ''

''அப்ப.. அக்கம் பக்கம் எல்லாம் நல்ல பழக்கம் இருந்திருக்கும் இல்ல ''ம்.. '' என்றவள் முகம் மாறியது.

அதை மனதில் குறித்துக் கொண்டான் வினோத்.

சற்றே இடைவெளி எடுத்து ''ஏன் அபி. இங்க இருந்து போகும் போது நீ என்ன படிச்சிக்கிட்டு இருந்த ? ''

''அது பத்தாவதுன்னு நினைக்கிறேன். ''

''ஆமாம் உன் கூடப் படிச்ச பசங்க பொண்ணுங்க எல்லாம் இப்ப எங்க இருக்காங்கன்னு தெரியுமா ? அவங்களோட தொடர்பில் இருக்கியா ? ''

''இல்ல அண்ணா. எக்ஸாம் முடிஞ்சதுமே கிளம்பிட்டோம். ஊருக்குப் போனதும் பழைய பொருட்களோட நண்பர்களின் கான்டாக்ட் டீட்டெய்ல்ஸ் எழுதி வெச்சிருந்த நோட் புக்கையும் பரண் மேல தூக்கி போட்டுட்டாங்க. அதனால யாரோடயும் டச் இல்லாம போயிடுச்சு. ''

''ம் '' என்ற வினோத் ஏதோ யோசனையாக இருக்க ''எதுக்கு அண்ணா இத்தனை டீட்டெய்ல்ஸ் கேட்கறீங்க ? எனக்காக நீங்க யாரையும் தேட வேண்டாம். நான் யாரை தேடியும் இங்க வரல. கொஞ்ச நாள் சுதந்திரமா இருக்கலாம்னு வந்தேன். எப்படியும் இன்னும் கொஞ்ச நாளில் கல்யாணம் பண்ணிடுவாங்க. அதுக்கு அப்புறம் குடும்பப் பொறுப்பு வேலை பளுன்னு நமக்காக வாழ முடியாது அதனால கொஞ்ச நாள் நான் எனக்காக வாழலாம்னு வந்தேன். சரியா. '' எனக் கூறி புன்னகை சிந்தினாள்.

அவளின் இறுதி சொற்றொடர்களைக் கேட்டபடியே வந்தான் சிவரூபன். அவளின் ''எப்படியும் இன்னும் கொஞ்ச நாளில் கல்யாணம் பண்ணிடுவாங்க '' என்ற வார்த்தைகள் அவன் மனதை

கலங்க வைத்தது.

''அப்படின்னா அபி நம்மைத் தேடி வரலையா ? '' என்ற கேள்வி அவனுள் எழுந்தது. ''அவ தன்னோட அன்பை சொன்னப்போ நீ ஏத்துக்கல. அவ இங்கிருந்து போனதுக்கு அப்புறம் தான் புரிஞ்சிக்கிட்ட. இப்ப புலம்பினா என்ன அர்த்தம். '' என்று எதிர் கேள்வி கேட்டது அவன் மனம்.

''ஆயிரம் இருந்தாலும் என்னைச் சாகற வரை மறக்க மாட்டேன்னு சொன்னாளே ''

''அப்ப அவ சின்னப் பொண்ணு. அதுக்கு அப்புறம் அவ வாழ்க்கையில் என்ன என்ன மாற்றங்கள் வந்திருக்கும். படிப்பு வேலை புதுப் புது நண்பர்கள் எப்படி உன்னை மறந்தாளோ அது அவளுக்குத் தானே தெரியும். ''

''ஆனா அவ வருவான்னு தானே நான் இத்தனை வருஷமா காத்திருக்கேன். ''

''அதுக்கென்ன பண்றது. பப்பி லவ் எல்லாம் காலத்துக்கும் மனசில் இருக்குமா ? மெச்சூரிட்டி வந்ததும் அவ மறந்திட்டா. ''

''பழசை மறந்தா என்ன ? புதுசா என்னை நேசிக்க வைக்கறேன். இத்தனை வருஷம் இவளையே நினைச்சிருந்த என் அன்பை அவளுக்குப் புரிய வைப்பேன். '' என்று மனதோடு மல்லுக்கு நின்று அதைச் சம்மதிக்க வைத்தான் சிவரூபன்.

அதற்குள் அபி சாப்பிட்டு முடித்திருக்க வினோத்தும் அபியும் எழுந்தனர். நாற்காலியில் இருந்து எழுந்தவள் சிவா நின்றிருப்பதை அறிந்தாள். சற்றே தடுமாறி நாற்காலி மேல் சரிந்து விழப்போனாள்.

''அபி பார்த்து '' என்று வினோத் பதற சிவா சட்டென அவளைத் தன் கரத்தால் வளைத்துப் பிடித்தான். தடுமாறியவள் நிலைத்து நின்று அவன் கரத்தை அவசரமாக விலக்கிவிட்டாள்.'' சாரி கவனிக்கல '' என்றவள் ''தேங்க்ஸ் '' என்றுவிட்டு நகர்ந்தாள்.

''வினோத் சைட்டுக்கு நானே போறேன். நீங்க ஸ்வேதாவோட இங்கேயே இருந்து புது டிசைனை பைனல் பண்ணுங்க. '' என்றான்.

அதைக் கேட்டு அபி நிற்க, அதை எதிர்பார்த்தவன் போலப் புன்னகையைப் படரவிட்டு நின்றான் ரூபன்.

''அப்படியா ? நான் இங்கேயே இருக்கவா ? '' என்று தயங்கமாக

வினோத் கேட்க. ''ஏன் அதில் ஏதாவது பிரச்சனையா ? '' என்று கேட்டான் ரூபன்.

''இல்ல ரூபன் அந்தப் பொண்ணு ஸ்வேதா '' என்று இழுத்தான் வினோத்.

''வினோத் நாம வேலை பார்க்க வந்திருக்கோம். ஒருத்தரோட சேர்ந்து வேலை பார்க்கறதுக்குத் தயங்கினா எப்படி ? '' என்று சற்றே கடுமையான குரலில் கேட்டான் ரூபன்.

''கோவிச்சுக்காதீங்க ரூபன். எனக்கு ஒண்ணும் பிரச்சனை இல்லை. அந்தப் பொண்ணு தான். ''

''வினோத் ''

''ஓகே ஓகே நான் பார்த்துக்கறேன். நீங்க பாருங்க. '' என்றவன் அலுவலகம் நோக்கி நகர்ந்தான். அவன் பின்னோடே ஓடினாள் அபி.

''அண்ணா என்ன அண்ணா சரின்னு சொல்லிட்டீங்க ? நீங்க வராம நான் எப்படி சைட்டுக்கு போவேன். '' என்று அபி கேட்கவும் தான் நின்று யோசித்தான் வினோத்.

''ஆமா இல்ல நீ எப்படிப் போவ ? '' எனக் கேட்டவன் ''அதான் ஸ்வேதாவோட வண்டி இருக்கு இல்ல நீ அதை எடுத்துக்கிட்டு போ அந்தப் பிசாசு உனக்குத் தருவா தானே. ''

''தருவாங்க ஆனா எனக்கு ஓட்ட தெரியாதே. '' என்றாள் அப்பாவியாக.

''என்ன பொண்ணு நீ ? இந்தக் காலத்துல வண்டி ஓட்ட தெரியாதுன்னு சொல்ற ? பொண்ணுங்க விண்கலனே ஓட்டறாங்க நீ என்னடான்னா '' என்று சலித்துக் கொண்டான்.

''போ அண்ணா கிண்டல் பண்ற. நான் ஆட்டோ பிடிச்சி போயிக்கறேன்.'' என்றவள் கோபித்துக் கொண்டு செல்ல ''அபி இரு '' என்று அழைத்து அவளை நிறுத்தினான் வினோத்.

''நான் வேணா ரூபன் கிட்ட கேட்கவா ? அவரோட அவர் வண்டியில் போறியா ? '' என்றான்.

''வேணாம் '' என்று அவசரமாக மறுத்தாள் அபி.

''இல்ல அபி ரூபன் நல்லவரு. உனக்கு அவரால எந்தப் பிரச்ச னையும் வராது. தனியா போறத விட அவரோட போகலாம்.

உனக்கு உதவியா இருக்கும்.''

''எனக்கு அவரோட உதவி தேவையில்லை. நான் ஆட்டோவில் கிளம்பறேன்.'' என்று கோபமாகப் பேசியவள் தன் கைப்பையை எடுத்துக்கொண்டு அலுவலகம் விட்டு வெளியேறினாள்.

''ஏன் அபி தனியா போறா ? நீங்க போகலையா ?'' என்ற கேள்வியோடு அவனை நெருங்கினாள் ஸ்வேதா.

''ரூபன் சைட்டுக்கு போறாராம் என்னை உங்களோட இருந்து டிசைனை பைனல் பண்ண சொன்னாரு''

''அது சரி ரூபன் என்கிட்டேயும் இதைச் சொன்னாரு. ஆனா அபி ஏன் தனியா போறா ? ரூபனோட போயிருக்கலாமே.''

''நான் சொன்னேன் அவ கேட்கல''

''அவளுக்கு ரூபன் சாரை பிடிக்கல போல''

''ம் எனக்கும் அப்படித் தான் தோணுது.''

''எல்லாருக்கும் ரூபனோட போறதுன்னா இஷ்டமா இருக்கும். ஆனா இவளுக்கு ஏன் அவரைப் பிடிக்கலன்னு தெரியல.'' என்றாள் ஸ்வேதா.

''எல்லோருக்கும் எல்லோரையும் பிடிக்காது. உங்களுக்கு என்னைப் பார்த்தா கடுவன் பூனையாட்டம் தெரியற மாதிரி அவளுக்கு ரூபன் மலை குரங்கா தெரியலாம் இல்லையா ?'' என்றான் கேலியாய் வினோத்.

''ஹலோ எதுக்கு இப்ப ரூபனை இழுக்கறீங்க. உங்க தங்கச்சிக்கு தான் பிரச்சனை. நல்ல ஆள் வந்து சேர்ந்திருக்கு பாரு அண்ணனுக்கு ஏத்த தங்கச்சியா ?'' என்றவள் தன் முகத்தைத் தோள்பட்டையில் இடித்துக்கொண்டு நகர்ந்தாள்.

கேன்டீனில் காபியை பருகிவிட்டு வந்த சிவரூபனுக்கு ஏமாற்றமாக இருந்தது அபி ஆட்டோவில் சென்றது. ''குள்ளச்சி என்னோட வரக்கூடாதுன்னு முன்னாடியே கிளம்பிட்டியா ? இரு இரு உன்னைக் கவனிச்சிக்கறேன்.'' என மனதில் கருவிக் கொண்டே கட்டுமான பணி நடக்கும் இடம் நோக்கி கிளம்பினான்.

அவனுக்கு முன்பே அங்கு சென்றிருந்த அபி தன் பணிகளைச் செவ்வனே செய்து கொண்டு இருந்தாள். அவளை நெருங்கியவன்.

''வேலை எல்லாம் எப்படிப் போயிக்கிட்டு இருக்கு. '' என்று கேட்ட படியே அவள் எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

அவனை நிமிர்ந்து பாராமல். ''அதைக் கவனிக்கத் தானே வந்திருக்கீங்க ? போய்ப் பாருங்க. '' என்றுவிட்டு அமைதியானாள் அபி.

''எங்க வேலை என்னன்னு எங்களுக்குத் தெரியும். உங்க வேலை எப்படி நடக்குதுன்னு கேட்டேன். நேத்து சொன்ன மாற்றங்கள் எல்லாம் செஞ்சிட்டீங்காளா ? '' என்றான் கடுப்பான குரலில்.

''அந்த வேலையைத் தான் பார்த்துகிட்டு இருக்கேன். '' என்று சற்றும் இறங்கி வராமல் பதில் அளித்தாள் அபி.

அவளிடம் இருந்து சரியான விதத்தில் பதில் வராமல் போனதில் சிவாவின் மனம் சுணங்கியது. ''ப்ச் உன்னைப் பார்த்ததும் என் கஷ்டத்தைத் துக்கத்தைப் பகிர்ந்துக்க நீ இருக்கன்னு நம்பிக்கை வந்திச்சு அபி. ஆனா இப்ப அதுவும் இல்லன்னு ஆகிடுச்சு. '' என மனதில் நினைத்தவன் பெருமூச்சொன்றை இழுத்துவிட்டு அடுத்து செய்ய வேண்டிய பணிகளைச் செய்யத் தொடங்கினான்.

அவன் அடுத்த பணி செய்யச் சென்றது அவள் மனதிலும் சுணக்கத்தை ஏற்படுத்தியது. ''என்னை வற்புறுத்தி பேச வைக்க முயற்சி கூடச் செய்ய மாட்டியா சிவா ? நான் உனக்கு அந்தளவு அன்னியமா போயிட்டேன் இல்ல. ம்ஹூம் கல்யாணம் குழந்தைன்னு வாழற உனக்கு என் அன்போட ஆழம் கடைசிவரை புரியவே புரியாது. '' என்று மனதிற்குள் புழுங்கினால் அபிராமி.

மாலை வேளை வரை இருவரும் பாராமுகமாகவே தம் தம் பணிகளைச் செய்து கொண்டு இருக்க இல்லம் கிளம்ப வேண்டிய நேரம் நெருங்க தொடங்கியது.

அபி ஸ்வேதாவின் வரவுக்காய் காத்திருக்க. வானமோ இருட்டி... மழை மேகங்களைச் சேர்க்க தொடங்கியது. ஆட்டோவில் கிளம்பி விடலாமா என்றவள் யோசித்து முடிக்கும் முன் மழை மேகங்கள் இடியாய் இடித்து மழைத்துளிகளால் புவி மகளைக் குளிர்விக்கத் தொடங்கிவிட்டது.

''அச்சோ மழை வந்துடுச்சே. இப்ப எப்படி வீட்டுக்குப் போறது. இங்கிருந்து ஆட்டோ பிடிக்கக் கூடக் கொஞ்சதூரம் நடக்கணுமே.''

என்று யோசித்தபடியே நின்றிருந்தாள் அபிராமி.

''அபி '' என்ற அழைப்புக்கு திரும்பியவள் முன் தேநீர் குவளையை நீட்டினான் சிவா.

அவளோ அதை வாங்காமல். ''நோ தேங்க்ஸ்'' என்று விட்டு திரும்பிக் கொள்ள. அவள் தலையில் லேசாகக் குட்டி. ''குள்ளச்சி. ஒழுங்கா குடி. இல்ல பொனலை வெச்சி வாயில் ஊத்திடுவேன். '' என்று மிரட்டல் விடுத்தான்.

''ஹலோ என்ன ? குட்டுறீங்க ? குள்ளச்சின்னு வேற கிண்டல் பண்றீங்க ? புதுசா வேலைக்குச் சேர்ந்தவங்ககிட்ட இப்படித் தான் பிஹேவ் பண்ணுவீங்களா ? '' என்று கொதித்தாள் அபிராமி.

அவளின் கொதிப்பு கண்டு அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. ''அபி என்னாச்சு உனக்கு ? ஏன் என்னைத் தெரியாத மாதிரி நடந்துக்கற ? '' என்று குரல் அடக்கி கேட்டான்.

''உங்களை எனக்குத் தெரியாது மிஸ்டர் '' என்றாள் கடுமையான குரலில்.

''அபி... சிவா டி... நீ ஸ்கூல் படிக்கும் போது இங்க தானே படிச்ச நாம பக்கத்து பக்கத்து வீடு மறந்திட்டியா ? ''

''ஸ்கூல் படிக்கும் போதா ? பக்கத்து வீடா ? '' என்றவள் யோசிப்பது போலப் பாவனைச் செய்தாள்.

பின் ''சின்ன வயசில் நடந்தது எல்லாம் காலத்துக்கும் ஞாபகம் இருக்குமா ? காலப்போக்கில் மறந்திருக்கும். மே பீ நாம பக்கத்து வீட்டுக்காரங்களா இருந்திருக்கலாம் இல்லாமலும் இருந்திருக்கலாம். இப்ப நாம இருக்கற பொசிஷனுக்குத் தகுந்த மாதிரி நடந்துக்க வேண்டாமா ? சில்லியா பிஹேவ் பண்றீங்க. யாராவது இதை எல்லாம் கேட்டா என்னைத் தானே தப்பா நினைப்பாங்க. '' என்று பொரிந்தாள் அபி.

''.... ''

''என்னபதிலையேகாணோம். உங்கவயசுக்கும் அனுபவத்துக்கும் தகுந்த மாதிரி நடந்துக்கோங்க ரூபன். '' என்று அபி முடிக்க...

அதற்கு மேல் பொறுக்க முடியாமல் ''ஸாரி மிஸ். அபிராமி. உங்க நினைவு அடுக்கு பத்தி நல்லாவே புரிஞ்சிக்கிட்டேன். என் பொசிஷனுக்கும்.. வயசுக்கும்.. அனுபவத்துக்கும் தகுந்த மாதிரி

இனி நடந்துக்க முயற்சி பண்றேன். ஸாரி பார் தி டிஸ்டபன்ஸ் '' என்று விட்டு நகர்ந்தான் சிவா.

''சாரி சிவா. நான் உன்னை மறக்கலன்னு தெரிஞ்சா உன் மனசு கஷ்டப்பட வாய்ப்பிருக்கு டா. உன் கல்யாண வாழ்க்கை என்னால பாதிக்கப்படக் கூடாது. அதான் இப்படிப் பிஹேவ் பண்றேன். என்னை மன்னிச்சிடு. '' என நினைத்து மனதிற்குள் அழுதாள் அபி.

சிவாவோ மழை என்றும் பாராமல் தன் இரு சக்கர வாகனத்தைக் கிளம்பிக் கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டான். அவன் கண்ணீர் துளிகள் மழைத்துளியின் ஊடே யாரும் அறியாமல் பயணித்து தண்ணீரோடு தண்ணீராகச் சேர்ந்தது.

''நீயும் என்னை ஏமாத்திட்ட அபி. உன்னைப் பார்த்ததும் உன் காதலாவது எனக்குக் கிடைக்கும்னு ஆசையா இருந்தேன். எல்லாம் போச்சு. நான் ஒரு அதிர்ஷ்டம் கெட்டவன். '' என நினைத்த படியே தன் கைப்பேசியை எடுத்து வினோத்திற்கு அழைத்தான். அபி தனித்து இருப்பதை அவனுக்குத் தெரிவித்துவிட்டு, தனிமையைத் தேடி யாருமில்லா இடம் நோக்கி பயணித்தான்.

## 9

இரண்டு நாள் கடந்தது. அதன் நிகழ்வுக்குப் பின் சிவா அபியோடு உரையாடுவதைத் தவிர்த்தான். அது அபிக்கு மன வருத்தத்தை அளித்தந்தது என்றாலும் அதை மறைத்துக் கொண்டு புன்சிரிப்போடு வலம் வந்தாள்.

அன்று காலை அலுவலகத்தில் சிறிய மீட்டிங் ஏற்பாடு செய்திருந்தான் சிவரூபன். அனைவரும் சரியாக அங்கே ஆஜராகிவிட்டனர்.

''ஹாய் பிரண்ட்'ஸ் நம்மோட புது ப்ராஜெக்ட் பத்தி டிஸ்கஸ் பண்ணத்தான் இந்த மீட்டிங். '' என்று தொடங்கிய சிவா புதிய தொடக்கம் பற்றி விவரிக்கத் தொடங்கினான்.

நேரம் நகர்ந்து கொண்டே இருக்க ஒருவரோடு ஒருவர் கலந்துரையாடி தங்கள் சந்தேகங்களையும் கருத்துக்களையும் கூற.. சந்தேகங்களுக்குச் சரியான விளக்கமும் கருத்துக்களுக்கு ஏற்புரையும் வழங்கி அந்தச் சந்திப்பை சிறப்பாக நடத்திக்

கொண்டிருந்தான் சிவரூபன்.

அதில் தான் அபிக்கு ஒன்று புரிந்தது. இவன் பழைய சிவா இல்லை. பக்குவமான மனநிலையில் வலம் வரும் புதிய ரூபன் தான் என்று. அதனால் தான் அலுவலகத்தில் உள்ள அனைவரின் மனதையும் வென்றுள்ளான். அவனின் ஒவ்வொரு அசைவிலும் அவள் விழிகளும் அவனுடன் சேர்ந்தே அசைந்தது. மனதில் பூட்டி வைக்க முயற்சிக்கும் காதல் ! கதவை உடைத்துக் கொண்டு வெளியே வர முயன்று கொண்டிருந்தது. அதை அவனும் கவனிக்கத் தவறவில்லை. மெல்லிய நம்பிக்கை மீண்டும் அவனுள் உதித்தது.

''அடியே குள்ளச்சி பழிக்கு பழிவாங்க தான் என்னைத் தெரியாத மாதிரி நடிக்கறியா ? உன் கண்ணே சொல்லுதுடி உன் காதலை. உன்னை இப்படியே தூக்கிட்டு போயிடணும் போல இருக்கே. உன்னை என்ன தான் பண்றது. சீக்கிரம் இந்த நாடகத்துக்கு ஒரு முடிவு கட்றேன். '' எனத் தன்னுள் இருக்கும் அபியிடம் பேசியவன். தன் கண் முன்னே இருந்த அபியை பார்த்து ஒற்றைக் கண்ணடித்துச் சிரித்தான்.

அதில் சிந்தனை கலைந்தவள் அவனை முறைத்துவிட்டு தலை குனிந்தாள். இவர்களின் இந்தச் செயலை யாரும் கவனிக்கவில்லை என்றவர்கள் நினைத்திருக்க வினோத்தும் ஸ்வேதாவும் இதைக் கவனிப்பதை தவிர வேறு வேலை எங்களுக்கு இல்லை என்பதைப் போல வாயை பிளந்தபடி இருவரையும் பார்த்துக் கொண்டு இருந்தனர்.

''ஸ்வேதா என்ன நடக்குது ? '' என்று வினோத் அவளின் காதில் கிசுகிசுப்பாகக் கேட்க, அவனின் மூச்சுக்காற்றுப் பட்டதில் தடுமாறினாள் ஸ்வேதா.

''ஏய் உன்னைத் தான். இரண்டு பேரும் ஒருநாள் தானே தனியா இருந்தாங்க. அதுக்குள்ள என்ன நடந்திருக்கும். இப்படிப் பார்வையாலயே பேசறாங்க. '' என்று கேட்டு அவளைக் கலைத்தான் வினோத்.

''ம்ச் எல்லாரும் உங்களை மாதிரி இருப்பாங்களா ? எப்பவும் உர்ருனு எதையுமே புரிஞ்சிக்காம'' என்று ஸ்வேதா கூற நான் என்ன கேட்கறேன் நீ என்ன சொல்ற ? புரியல எனக்கு. ''

''புரிஞ்சிட்டாலும்...'' என வாய்க்குள் முணுமுணுத்தவள். ''பேசாம மீட்டிங்கை கவனிங்க. அப்புறம் பேசலாம். அவங்களை யாரும் கவனிக்கல ; ஆனா நம்மை எல்லோரும் கவனிக்கறாங்க.'' என்றுவிட்டு அமைதினாள்.

''ம் உனக்குப் புரியல. '' என்றவன் ''அபி அப்சட்டா இருந்தாளே ஆனா இப்ப இப்படி மாறிட்டாளே ? என்ன காரணம்னு தெரியலன்னு இவளை கேட்டா இவ நம்மைக் குறை சொல்றா ? என்னமோ இவளுக்குத் தான் எல்லாம் தெரியுங்கற மாதிரி '' என்று தன் பங்கிற்கு அவனும் வாய்க்குள் முணுமுணுத்த படியே தலையைத் திருப்ப மற்ற அனைவரின் கவனமும் இவர்கள் மேல் திரும்பி, இருந்ததை அப்போது தான் உணர்ந்தான்.

''என்ன வினோத் நீங்க பேசி முடிச்சாச்சா நாம மீட்டிங்கை கன்டினியூ பண்ணலாமா ? '' என்று கிண்டலாக ரூபன் கேட்க.

''சேட்டையை நீங்க செஞ்சிட்டு பழியை என் மேல போட்டுட்டீங்களே '' என்று எண்ணிய படியே ''சாரி ரூபன் '' என்றான். அவனும் புன்னகையுடன் தொடர்ந்தான்.

மதிய உணவு இடைவேளை நெருங்கியது. ரூபன் அனைவரிடமும் ''இன்னைக்கு லஞ்ச் என்னோட ட்ரீட் '' என்றிட அனைவரும் ஆரவாரம் செய்தனர்.

அனைவரும் குதூகலத்துடன் மதிய உணவுக்குச் செல்ல தயாராகினர். அபி.. ஸ்வேதாவின் காதருகே சென்று. ''நான் வரல ஸ்வேத்.. இங்க கேன்டீன்லையே சாப்பிட்டுக்குறேன்.'' என்றாள்.

''அடியே நீங்க அடிச்ச கூத்தை யாரும் கவனிக்கலன்னு நினைக்காதே. நாங்க பார்த்துட்டோம். என்ன டி செஞ்ச அந்த ஆறடி ஈபிள் டவர் இதுவரை எந்தப் பொண்ணைப் பார்த்தும் வழிஞ்ச தில்லை ஆனா....'' என்றவள் முடிக்கும் முன்னே ஆரம்பித்தாள் அபி. போதும் ஸ்வேதா.. ஏன் இப்படி எல்லாம் தரம் தாழ்ந்து பேசறீங்க. இதை உங்ககிட்ட இருந்து நான் எதிர்பார்க்கல '' என்று சத்தமாகவே பேசிவிட்டு நகர்ந்தாள்.

அவள் கத்தியதில் ஸ்வேதா ஸ்தம்பித்து நின்றுவிட வினோத் அவளைச் சமாதானம் செய்ய முன் வந்தான்.

''என்ன ஸ்வேதா ஏன் இப்படிப் பேசிட்ட. நீ சொல்ல வந்தது

சரியா இருந்தாலும் சொன்ன விதம் தப்பு. அவங்களுக்குள்ள ஏதோ ஒரு உணர்வு வந்திருக்கு. ஆனா அதை நாமே தப்பா பேசக்கூடாது இல்ல. '' என்றவன் கேட்க அப்போது தான்... தான் பேசிய விதத்தை உணர்ந்தாள் ஸ்வேதா.

அதீத சந்தோஷமோ கோபமோ நம்மிடம் இருந்து வரும் வார்த்தைகளில் கவனம் தேவை என்பதை உணர்ந்து.... அபியை தேடி சென்றாள். அபி டேபிளில் அமர்ந்திருப்பதைக் கண்டதும். அவளை நெருங்கினாள்.

''சாரி அபி நான் சும்மா விளையாட்டா தான் பேசினேன். தப்பு தான் மன்னிச்சிடு.. ப்ளீஸ் கோச்சிக்காதே. '' என்றாள் கெஞ்சலுடன்.

''ஆமாம் அபி நானும் நல்லா திட்டிட்டேன். இந்த ஒரு தரம் மன்னிச்சிடு. திரும்பவும் இப்படி நடந்தா. நானே இவளை உண்டு இல்லன்னு பண்ணிடறேன். '' என்றபடியே வந்தான் வினோத்.

இருவரும் மாறி மாறி சமாதானம் செய்தும் அபி வாய் திறக்கவில்லை. ஸ்வேதா முகம் சோகத்தில் ஆழ்ந்தது.

''நீங்க மூணு பேரும் வரலையா ? '' என்று கேட்டபடியே அவர்களை நெருங்கினான் சிவரூபன்.

''எல்லாம் இவனால '' என்று அவனை முறைத்தபடியே மனதில் திட்டி தீர்த்தாள் அபிராமி.

''இல்ல சார்.. அபிக்கு லஞ்ச் வேண்டாமாம்.. அதான் நாங்களும் '' என்று இழுத்தாள் ஸ்வேதா.

''அவங்களுக்கு வேண்டாம்னா விட்டுடுங்க ஏன் கம்பள் பண்றீங்க. அவங்க புதுசு தானே நம்மோட பழைய ப்ராஜெக்ட் நல்லபடியா முடிஞ்சதுக்குத் தான் இந்த ட்ரீட். இதுல அவங்க கலந்துக்கலன்னா பரவாயில்லை. நீங்க இரண்டு பேரும் கிளம்புங்க. எல்லோரும் வெய்ட் பண்றாங்க. '' என்று கூலாகப் பேசினான் சி வா.

அதில் செம கடுப்பானாள் அபி. ''அதான் சொல்லிட்டாங்க இல்ல கிளம்புங்க. '' என்றாள் இருவரையும் பார்த்து.

''சரி உனக்குக் கேன்டீனில் வாங்கி வரவா.. '' என்று வினோத் கேட்க

''நான் வேணா பே பண்ணிடறேன். '' என்றான் சிவா.

''யாரும் வாங்கியும் தர வேணாம் யாரும் பணமும் தர வேண்டாம்.'' என்ற படியே எழுந்து நடந்தவள் காதில் விழும்படி. ''ஆனா இன்னைக்குக் கேன்டீன் லீவாச்சே வினோத் '' என்றான் சிவா.

''அட ஆமாம் அபி இன்னைக்குக் கேன்டீன் லீவ். '' என்று அதை ஆமோதித்தான் வினோத்.

சட்டெனத் திரும்பி வந்து தன் நாற்காலியில் அமர்ந்தவள் ''எனக்குப் பசிக்கல.. நீங்க போயிட்டு வாங்க. '' என்று விட்டு கைப்பேசியை நோண்ட தொடங்கினாள்.

''அபி நீ காலையில கூடச் சரியா சாப்பிடல. நான் அப்படிப் பேசினது தப்பு தான் அதுக்குத் தண்டனையா நான் வேணா சாப்பிடாம இருந்துக்கறேன். நீ போயிட்டு வா. '' என்றாள் ஸ்வேதா குரல் தழுதழுக்க.

''என்னாச்சு ஸ்வேத் எதுக்கு இப்படிப் பேசறீங்க ? என்ன பிரச்சனை?'' என்று ரூபன் கேட்க ஸ்வேதா தயக்கமாக வினோத்தை பார்த்தாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்ல ரூபன் அவங்களுக்குள்ள ஏதோ'' என்று சமாளித்தான்

''ஓ'' என்ற ரூபன் ''லேட்டானா லஞ்ச் இருக்காது வினோத் கிளம்பலாம். அவங்களுக்கு நம்ம ஆபீஸ் பிடிக்கல போல அதான் நம்மோட வர யோசிக்கிறாங்க. நாம எல்லாம் அவங்களை ஏதாவது பண்ணிடுவோம்னு பயம் போல '' என்றான் அபியை பாராமல்.

அதைக் கேட்டவள் ''அப்படி எல்லாம் ஒண்ணுமில்ல. எனக்குப் பசிக்கல உங்க எல்லோரையும் பிடிச்சிருக்கு. ஒரே ஒருத்தரை தவிர''

''ஓ.. அப்ப ஒருத்தரை பிடிக்கலன்னு மத்தவங்களைக் கஷ்டப்படுத்தரது தான் இவங்க பழக்கம் போல '' என்று ரூபன் மேலும் பேச

''இப்ப நான் யாரை கஷ்டப்படுத்தறேன். ''

''நம்ம டீம் மெட்ஸை கஷ்டப்படுத்தறீங்க மிஸ். அபிராமி. எல்லோரும் காத்திருக்காங்க. எல்லோரோடும் நல்ல பாண்டிங்

ஏற்படுத்த தான் இந்த லஞ்ச் இனி நாம சேர்ந்து ஒரு ப்ராஜெக்ட் செய்யப் போறோம் டீம்மா இல்லாம இருந்தா எப்படி ? '' என்று ரூபன் ப்ராஜெக்ட் ஹெட்டாகக் கேட்க...

''இப்ப என்ன ? நான் வரணும் அதானே வந்து தொலையறேன்.'' என்றவள் எழுந்து நடக்க

''வாங்க போகலாம். '' என்று புன்னகையுடன் கூறி நடந்தான் ரூபன்.

அனைவரும் அருகே இருந்த உணவகத்துக்குச் சென்றனர். அவரவர் விருப்பப்படி உணவுகளை ஆர்டர் செய்து கொண்டு இருந்தனர்.

வினோத் ஸ்வேதா அபி மூவரும் ஒரே மேஜையில் அமர்ந்திருக்க அபி உனக்கு என்ன வேணும் ? '' என்று அபியிடம் கேட்டான் வினோத்.

''எனக்கு எதுவும் வேணாம். நீங்க சாப்பிடுங்க. ''

''அபி அடம் பிடிக்காதே '' என்று கெஞ்சினாள் ஸ்வேதா.

''சரி. உங்களுக்காக ஒரு ஆப்பிள் ஜூஸ் மட்டும் வாங்கிக்கறேன் வேற எதுவும் வேண்டாம். '' என்றுவிட்டு கைப்பேசியைப் பார்க்கத் தொடங்கினாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு அவளுக்கு வேண்டிய ஜூஸையும் தங்களுக்கான உணவையும் ஆர்டர் செய்து கொண்டு இருக்க அவர்கள் மேஜையை நெருங்கினான் சிவரூபன்.

''இங்க உட்காரலாமா ? வேற எங்கேயும் இடம் இல்லை. '' என்றான்.

''உட்காருங்க ரூபன்.. '' என்றான் வினோத்.

அபி அருகே இருந்த நாற்காலியில் அமர்ந்தவன் தனக்கான உணவையும் ஆர்டர் செய்தான். வினோத்தும் ஸ்வேதாவும் அபியையே பார்த்துக் கொண்டு இருப்பதைக் கவனித்தவன் ''மேடம் எதுவும் ஆர்டர் செய்யலையா ? '' என்று கேட்டான்.

''அது... ஆப்பிள் ஜூஸ் ஆர்டர் பண்ணி இருக்காங்க ரூபன். '' என்றாள் ஸ்வேதா.

''ஓ டயட்டில் இருக்காங்களா ? '' என்றவன் ''மட்டன் பிரியாணி இரண்டா கொண்டு வாங்க '' என்றான்.

சற்று நேரத்தில் ஆர்டர் செய்த உணவுகள் வந்துவிட மூவரும் உண்ணத் தொடங்கினர். ''வினோத் , இந்த மட்டன் பிரியாணி இருக்கே அது இங்க ரொம்ப ஸ்பெஷல். சிலருக்கு சாப்பிட கொடுத்து வைக்கல '' என்றபடியே தன் உணவை ரசித்துச் சாப்பிட தொடங்கினான்.

காலையில் சாப்பிடவில்லை தனக்கு மிகவும் பிடித்த உணவு வேறு அருகே இருந்து நாசியைத் துளைக்க பசி வயிற்றைக் கிள்ள அபி தவிப்புடன் ஜூஸ் டம்ளரை உருட்டிய படியே அமர்ந்திருந்தாள். அதைக் கவனித்த ரூபன் பிரியாணி பிளேட்டை அவள் புறமாக நகர்த்தி ''என்னால யாரும் பட்டினி கிடக்க வேண்டாம். வேணும்னா இதுக்கான பணத்தை அப்புறமா என்கிட்ட கொடுத்திடலாம். நான் ஒண்ணும் நினைக்க மாட்டேன். '' என்றான்.

தன் கைப்பையில் இருந்து அந்த உணவுக்கான பணத்தை எடுத்து வைத்துவிட்டு அதைத் தன் பக்கமாக நகர்த்தி உண்ணத் தொடங்கினாள். அவள் செய்கை வினோத்திற்கும் ஸ்வேதாவிற்கும் சங்கடத்தைத் தந்தது.

''அபி.. '' என்று வினோத் ஏதோ சொல்ல வாயெடுக்க அவனை ஜாடையால் அமர்த்தி அவள் சாப்பிடட்டும்.. என்றான் ரூபன்.

அவளும் சாப்பிட்டு முடித்துக் கை கழுவ சென்றாள். அவள் பின்னோடு சென்ற ஸ்வேதா ''நீ செஞ்சது கொஞ்சமும் சரி இல்ல. அவரு உன்னை என்ன பண்ணிட்டாருன்னு இப்படி அரகென்ட்டா நடந்துக்கற அபி. '' என்று சற்று கடுமையாகவே கேட்டாள்.

''ஸ்வேதா விடுங்க இங்க எதுவும் பேச வேண்டாம் எல்லோரும் டிஸ்டப் ஆகிடுவாங்க. அப்புறம் பேசிக்கலாம். '' என்ற ரூபன் கைகளைக் கழுவிக் கொண்டு நகர்ந்தான்.

''இவரை இன்சல்ட் பண்ண உனக்கு எப்படித் தான் மனசு வருதோ தெரியல '' என்று அலுத்துக் கொண்டே ஸ்வேதாவும் நகர்ந்து விட்டாள்.

''அபி.. உன் மனசில் என்னமோ இருக்குன்னு புரியுது. ஆனா அதைச் சொல்ல மாட்டேங்கற... என்னை உன் அண்ணனா நினைச்சிருந்தா சொல்லி இருப்ப. நான் யாரோ தானே நான்

தான் அதிகமா எதிர்பார்த்திட்டேன். என்ன இருந்தாலும் நாங்க அன்னியம் தானே. நான் ஏதாவது அதிகப் பிரசங்கித் தனமா பேசி இருந்தா என்னை மன்னிச்சிடு '' என்று விட்டு வினோத்தும் நகர அபிக்குச் சங்கடமாகிவிட்டது.

''அண்ணா '' என்றபடியே அவன் பின்னோடு நடந்தாள். மேஜை மேல் இருந்த பணத்தைச் சிவரூபன் எடுக்கப் போக அபி அதை எடுத்துக்கொண்டாள். ''ஸாரி '' என்று மூவருக்கும் பொதுவாகச் சொல்லிவிட்டு அமைதியாக நின்றாள்.

''பண்றதெல்லாம் பண்ணிட்டு ஸாரியாம் ஸாரி'' என்று முணுமுணுத்தாள் ஸ்வேதா.

''ஸ்வேதா விடுங்க. '' என்ற ரூபன்... ''உங்க ஸாரி ஏற்கப்பட்டது மேடம். நான் ஏதாவது தப்பு பண்ணி இருந்தா ஸாரி. பழசை எல்லாம் மறக்கறது உங்களுக்குப் புதுசில்லையே அதுமாதிரி நான் செஞ்ச தப்பையும் பெரிய மனசு பண்ணி மறந்திடுங்க''. என்றான் அபியிடம்.

அவள் முகம் வாடிப்போனது. ஆனால் அதைக் கவனிக்க முடியாமல் தலையைக் குனிந்திருந்தாள். அனைவரும் கிளம்பி அலுவலகத்தை அடைந்தனர்.

ஸ்வேதாவின் வண்டியில் இருந்து இறங்கியவள் காதுகளில்.. ''ஹாய் அபி '' என்ற குரல் கேட்க திடுக்கிடலுடன் திரும்பினாள். அவள் எதிரே சக்தி நின்றிருந்தான்.

''நீங்க. '' என்றவள் தடுமாற

''டென்ஷன் வேண்டாம். சும்மா தான் பார்க்க வந்தேன். கொஞ்சம் பேசணும் '' என்றான் சக்தி மென்னகையுடன்.

''என்ன பேசணும். எதுவா இருந்தாலும் வீட்டுல பேசுங்க. '' என்றவள் தயக்கமாகப் பேசிக்கொண்டு இருக்க வினோத் ரூபன் ஸ்வேதா மூவரும் அவர்களை நெருங்கினர்.

''அபி யாரு.. இவங்க ? '' என்றான் வினோத்.

''நான் சக்தி அபிக்கு வீட்டுல பார்த்திருக்கற மாப்பிள்ளை. '' என்றான் அவன்.

அதைக் கேட்டதும் சிவரூபன் சிலையானான். அபி அமைதி காத்தாள். வினோத் தன்னை அவனிடம் அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''ஓ அப்படியா ? நான் வினோத். அபிக்கு அண்ணன் மாதிரி. இவங்க ஸ்வேதா...அபியோட ரூம் மெட் இவரு ரூபன் எங்க ஹெட்.''

''ஹாய்'' என்று இருவருக்கும் கூறிய சக்தி '' நானும் இந்த ஊர்ல தான் வொர்க் பண்றேன். அபியோட கொஞ்சம் பேசணும் அதான் வந்தேன். நீங்க எல்லாம் டீம்மா லஞ்சுக்குப் போனதா சொன்னாங்க அதான் வெய்ட் பண்ணிக்கிட்டு இருந்தேன். உங்களை எல்லாம் சந்திச்சது ரொம்பச் சந்தோஷம். '' என்று எளிதாக அவர்களோடு ஒட்டிக்கொண்டான் சக்தி.

## 10

சக்தியை வினோத்திற்கு மிகவும் பிடித்துப்போனது. சக்தியின் எளிமையான உரையாடலும் அலட்டல் இல்லாத சுபாவமும் அபிராமியின் குணத்திற்கு அவன் பொருத்தமானவன் தான் என்பதை அவன் மனம் அவனுக்கு உணர்த்தியது.

''அதுக்கு ஏன் சங்கடப்படறீங்க. வாங்க கேன்டீன்ல உட்கார்ந்து பேசுங்க. '' என்று புன்னகையுடன் வினோத் கூற, சக்தி மென்னகையுடன் அதை ஏற்பது போலத் தலையசைத்து அபியை பார்த்தான்.

அவளோ நடப்பது புரியாமலும் அதைத் தடுக்கவும் முடியாமலும் தவித்தபடியே நின்றிருந்தாள்.

அதைக் கவனித்த ஸ்வேதா ''அபி , அவரு உன்னைத் தான் பார்க்கறாரு. பதில் சொல்லு. '' என்று கிசுகிசுத்தாள்.

ரூபன் தன் குரலை செருமி ''ஒகே.. நான் உள்ள போறேன். எல்லோரும் அரை மணியில் மீட்டிங் ஹால் வந்திடுங்க. '' என்று கூறிவிட்டு நகர்ந்தான்.

அது அபியை மேலும் சங்கடப்படுத்தியது. சக்தியை நிமிர்ந்து பார்த்தவள் , '' தப்பா எடுத்துக்காதீங்க இன்னைக்கு வேண்டாம் இன்னொரு நாள் பேசலாம். '' என்றாள்.

''இல்லங்க முக்கியமான விசயம். அவசரம் பேசியே ஆகணும். அதான் இத்தனை நேரம் காத்திருந்தேன். இல்லன்னா முன்னாடியே

கிளம்பி இருப்பேன். '' என்றான் சக்தி தயங்கத்துடன்.

''அபி ஏன் அவாய்ட் பண்ற மீட்டிங் ஹால் போக இன்னும் அரை மணி நேரம் இருக்கு. நீ போய்ப் பேசிட்டு வா. '' என்றான் வினோத்.

அவள் மௌனமாக நிற்கவும் ''நீங்க வாங்க நாம கேன்டீன் போகலாம். அபியை ஸ்வேதா கூப்பிட்டு வருவா. '' என்று சக்தியிடம் கூறிய வினோத் அவனை அழைத்துக் கொண்டு நகர்ந்தான்.

ஸ்வேதா அபியிடம் ''ஆளு ரொம்பக் கூலா இருக்காரு அபி. உனக்கு ஏத்த ஆளா தான் தெரியறாரு. ஏன் தயங்கற ? வீட்டுல எதுவும் சொல்வாங்களா ? வேணும்னா அப்பாகிட்ட பர்மிஷன் கேளேன். '' என்றாள்.

''அப்பாகிட்ட பர்மிஷன் வாங்கிட்டு தான் வந்திருக்காரு ஸ்வேத்.'' என்றாள் அபி குழப்பாக.

''அப்புறம் என்ன ? எதுக்குத் தயங்கற ? ''

''.... ''

''அவரைப் பிடிக்கலையா ? ''

''.... ''

''அபி பார்க்க மட்டும் இல்ல பழகவும் ஸ்வீட்டா தான் இருக்காரு. இவரைப் பிடிக்கலன்னு சொல்ற அதிசயமா தான் இருக்கு. '' என்றவள்'' சரி உனக்கு விருப்பம் இல்லைங்கறதை அவர்கிட்ட சொல்லிடு '' என்றாள்.

''அப்பா அம்மாவுக்கு இவரை விட மனசில்லை ஸ்வேத். இவங்க குடும்பமும் ரொம்ப நல்லவங்களா தான் தெரியறாங்க. அதான் மறுக்கவும் முடியல. ''

''ஏய் நீ யாரையாவது லவ் பண்றியா என்ன ? '' என்ற கேள்வியால் சிலையானாள் அபி.

பின் தன்னைச் சமாளித்து ''அதெல்லாம் ஒண்ணுமில்ல. எனக்குக் கொஞ்சநாள் சுதந்திரமா இருக்கணும். அதான் யோசிக்கறேன்.'' என்றாள்.

''ஐய்யோ.. லூசு அபி. இதுக்கு எதுக்கு இத்தனை தூரம் யோசிக்கற. இதை அவர்கிட்டயே சொல்லு வெய்ட் பண்ண இஷ்டமிருந்தா வெய்ட் பண்ணட்டும். ''

''ம் ''

''ஆனா அவரு வெய்ட் பண்ற மூடில் தான் இருக்காரு போல. ''

''ம் அதான் பயமா இருக்கு. ''

''எதுக்குப் பயம் . ''

''இல்ல என்னால அவரு எதுவும் ஏமாந்து போயிடுவாரோன்னு''

''பைத்தியம் மாதிரி பேசாத அபி. முதலில் அவரோட பேசு. அப்பதான் கிளாரிட்டி கிடைக்கும். '' என்ற ஸ்வேதா அபியின் கைகளைப் பிடித்து இழுத்துச் சென்றாள்.

தன் அலுவலக அறைக்குள் நுழைந்த சிவரூபன் மனம் வேதனையில் உழன்றது. தன் சுழல் நாற்காலியில் அமர்ந்தவன் கண்களை மூடி சிந்தனையில் ஆழ்ந்தான். ''ம்ச் திரும்பத் திரும்ப நம்பிக்கை பிறந்து ஏமாற்றத்தையே தருதே. அவளுக்கு என்னைத் தெரியலங்கற உண்மையை ஏன் நான் ஏத்துக்க மாட்டேங்கறேன். ஏதோ ஒரு ஈர்ப்பு அது அந்த வயசுல வரது சகஜம் தானே. அப்ப ஏதோ உளறலா அவ பேசினதை மனசில் வெச்சிக்கிட்டு இப்ப அவளைக் குறைப்பட்டுக்கறது சரியில்லையே. என் வாழ்க்கை தான் வேதனையில் வெந்துக்கிட்டு இருக்கு. அவளாவது சந்தோஷமா இருக்கட்டும். '' என்று நினைத்தவன் கண்கள் கசிந்து கண்ணீரை சிந்தியது.

அதற்குள் மீட்டிங் ஹாலில் சக ஊழியர்கள் வந்து அமர தொடங்கியிருந்தனர். தன் பணியைச் செய்ய மனதை திடமாகினான். இனி என் வாழ்வு பணி செய்து கிடப்பதே என்ற வாக்கியத்தை மனதில் ஏற்றிக் கொண்டு சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அறைக்குச் சென்றான் சிவரூபன்.

அங்கே அனைவருமே கூடி இருந்தனர். அபி வந்துவிட்டிருந்தாள். அவள் முகம் நிலம் நோக்கிய நிலையில் இருந்ததால் அவனால் அவள் முகத்தைப் படிக்க முடியாமல் போனது. இனி அவளைத் தொல்லை செய்வதில்லை என்று மீண்டும் மனதிடம் கூறிக்கொண்டு சந்திப்பை துவக்கினான்.

அபியின் மனமோ சக்தி பேசிய வார்த்தைகளையே மீண்டும் மீண்டும் அசைப்போட்டுக்கொண்டு இருந்தது. ஸ்வேதாவோடு சென்ற அபி சக்தியிடம் தனக்கு முடிவெடுக்க நேரம் வேண்டும்

என்று கூறினாள்.

அதைக் கேட்ட சக்தி '' நீங்க எதுக்கு டைம் கேட்கறீங்க அபி ?'' என்று கேள்வி கேட்டான்.

''எதுக்குன்னா ? என்ன அர்த்தம் ? புரியல. '' என்றாள் அபி.

''இல்ல அபி என்னைப் பிடிச்சிருந்தா கல்யாணத்துக்கு டைம் எடுத்துக்கலாம். ஆனா நீங்க என்னைப் பிடிக்குதா இல்லையான்னு சொல்லவே யோசிக்கற மாதிரி தெரியுது. அதான் கொஞ்சம் தெளிவா சொன்னா. நாங்க அடுத்து யோசிக்க வசதியா இருக்கும். ''

''.....''

''எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு. எங்க வீட்டுலையும் எல்லாருக்கும் பிடிச்சிருக்கு. உங்க வீட்டு சைட்லையும் ஆல் ஓகே உங்க பதிலுக்காக எல்லோருமே காத்திருக்கோம். கொஞ்சம் தெளிவா சொல்லிடுங்களேன்.''

''.... ''

''அபி...கல்யாணத்துக்கு அப்புறமும் நீங்க வேலைக்குப் போகலாம். உங்க சுதந்திரத்துல நான் தலையிட மாட்டேன். என் அப்பா அம்மாவும் தலையிட மாட்டாங்க. எனக்கும் ஒரு அக்கா இருக்காங்க அவங்களை எங்க மாமா எப்படி வெச்சிருக்காருன்னு நானும் பார்க்கறேன். என் அக்காவோட சுதந்திரம் எனக்கு எத்தனை முக்கியமோ அது மாதிரி என் மனைவியின் சுதந்திரமும் முக்கியம்னு நான் அப்பவே முடிவெடுத்திட்டேன். எங்க அம்மா அப்பா கிட்டையும் தெளிவா இதைப் பத்தி பேசி இருக்கேன். அவங்களும் புரிஞ்சிக்கிட்டாங்க. ஸோ இதைச் செய் அதைச் செய்யாதேன்னு கம்பள் செய்ய மாட்டாங்க. ''

''ஒரு நிமிஷம் . நான் ஒண்ணும் பெரியவங்க வார்த்தைகளை மதிக்காத பொண்ணு கிடையாது. எனக்கு யார் கிட்ட எப்படி நடந்துக்கனும்னு தெரியும். ஸோ உங்க பேரன்ஸோட மரியாதைக்கோ அவங்களோட வார்த்தைகளுக்கு மரியாதை தராம நடந்துக்கற ஆள் நான் இல்ல. சுதந்திரத்தை சரியா பயன்படுத்தர பொண்ணு நான். அதனால இதெல்லாம் பேசாதீங்க. ''

''குட் அப்ப என்னைப் பிடிக்கலையா ? அதைத் தெளிவா சொல்லலாமே.''

''பிடிக்கலன்னா முகத்துக்கு நேரா சொல்லி இருப்பேன். இத்தனை நேரம் உட்கார்ந்து பேசி இருக்க மாட்டேன். ''

''அப்புறம் என்னதான் பிரச்சனை அபி ? ''

''.... ''

''அபி மௌனம் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வாகாது. ''

அதைக் கேட்டவள் அமோதிப்பது போலத் தலையசைத்து. ''எனக்கு அது புரியுது. '' என்றவள் சற்று இடைவெளி எடுத்து ''உங்களை நம்பறேன். என் மனசில் இருக்கறதை சொல்றேன். உங்களுக்கு அது ஓகேன்னா அடுத்தது பேசலாம். ''

''என்னை நம்பறேன்னு சொன்னதுக்கு நன்றி. ''

''எனக்கு ஒரு லவ் இருந்தது. ஒன்சைடு லவ் தான். ஆனா அதுல இருந்து என்னால வெளிய வர முடியல. அவங்க அவங்களோட வாழ்க்கையில் நல்லபடியா செட்டில் ஆகிட்டாங்க. ஆனாலும் எனக்கு அவங்களை மறக்கறது கஷ்டமா இருக்கு. இந்த விசயம் தான் என்னைக் குழப்புது. நாளைக்குக் கல்யாணம் ஆனதுக்கு அப்புறம் இது ஒரு சிக்கலா நமக்குள்ள வந்தா. இரண்டு குடும்பமும் பிரச்சனைக்குள்ளாகும். எனக்கு இன்னும் இரண்டு தங்கைகள் இருக்காங்க. அவங்க வாழ்க்கை என்னால பாதிக்கப்படக் கூடாது. அதான் ஒரே குழப்பமா இருக்கு. ''

சக்தி சற்று நேரம் யோசித்துவிட்டுப் பின் தெளிவான குரலில் பேசினான். ''அபி இது ஒரு பிரச்சனையா எனக்குத் தெரியல. உங்களுக்கு வந்தது கிரஸ். இது பலரோட வாழ்க்கையிலும் வந்திருக்கும். எத்தனையோ பேர் உண்மையா காதலிச்சி சேர முடியாம பிரிச்சி இருப்பாங்க. அவங்க அடுத்த வாழ்க்கைக்குள்ள நுழையும்போது ரொம்பவே தயக்கமான மனநிலையோட தான் இருப்பாங்க. உங்களோட மனநிலையும் ஏறக்குறைய அது மாதிரி தான் இருக்கு. என்னை உங்களுக்குப் பிடிச்சிருந்தா. நான் எப்பவும் உங்களைப் புரிஞ்சி நடந்துக்க முயற்சி பண்றேன்னு உறுதி தரேன். இல்லன்னா இந்தப் பேச்சு வார்த்தையை இப்படியே நிறுத்திடலாம். ஒண்ணும் பிரச்சனை இல்லை. ''

அவனின் வார்த்தைகள் சற்றே தைரியத்தை அபிக்கு தர ''எனக்கு

ஒரு வாரம் டைம் கொடுங்க. யோசிச்சி சொல்றேன். '' என்றாள்.

அதைக் கேட்டதும் சக்திக்கு நம்பிக்கை பிறந்ததோ என்னவோ ''தாராளமா எடுத்துக்கோங்க. பிடிச்சிருந்தாலும் சரி பிடிக்கலன்னாலும் சரி ஓப்பனா சொல்லுங்க. எதுவுமே கட்டாயம் கிடையாது. '' என்றான்.

''ம் தேங்க்ஸ். அப்புறம் அந்த ஒன்சைடு விசயம் என் அம்மா அப்பா கிட்ட சொல்லிடாதீங்க. ''

''நிச்சயம் சொல்ல மாட்டேன். நீங்களும் அதுல இருந்து வெளிய வர பாருங்க. எனக்காகச் சொல்லலே உங்களுக்காகச் சொல்றேன். ''

''ம் அதுக்குத் தான் முயற்சி பண்ணிக்கிட்டு இருக்கேன். ''

''தட்ஸ் குட் அப்ப நான் கிளம்பறேன். இது என் கார்ட். இதுல என் நம்பர் இருக்கு. கால் பண்ணுங்க. இப்ப நான் கிளம்பறேன். உங்க நேரத்தை ஒதுக்கி ஓப்பனா பேசினதுக்குத் தேங்க்ஸ். '' என்று புன்னகையுடன் கூறி எழுந்தான் சக்தி.

அபியும் எழுந்துகொள்ள சக்தி வினோத்தும் ஸ்வேதாவும் அமர்ந்திருந்த மேஜை நோக்கி நடந்தான். வினோத்திற்கும் ஸ்வேத்திற்கும் நன்றி கூறி விடைபெற்றுக் கிளம்பினான்.

''என்ன பதில் சொன்ன அபி ? '' என்று ஸ்வேதா கேட்டாள்.

''ஒரு வாரம் டைம் கேட்டிருக்கேன் ஸ்வேத். '' என்றுவிட்டு அலுவலகம் நோக்கி நடந்தாள்.

வினோத்தும் ஸ்வேதாவும் புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு தோள்களைக் குலுக்கி தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்திக் கொண்டனர்.

மூவரும் மீட்டிங் ஹாலை அடைந்தனர். சிவரூபனும் சரியாக வந்துவிட அந்தச் சந்திப்புத் தொடங்கியது. அபி தன் சிந்தனையைக் களைந்து பணியைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

## 11

இரண்டு நாட்கள் இருவரும் பாரா முகமாகவே நடந்துக் கொண்டனர். ரூபன் தன் பணியில் மட்டுமே கவனமாக இருக்க அபி இருதலை கொள்ளியாய் தவித்துக் கொண்டிருந்தாள்.

சிவாவை மறக்கவும் மனமில்லை சக்தியை ஏற்கவும் முடியவில்லை. அந்தத் தவிப்பு அவளுக்குச் சிவா மேல் கோபமாகத் திரும்பியது. அவள் மனம் , 'எத்தனை தூரம் சொன்னேன். என்னால உன்னை மறக்க முடியாது. என் காதலை ஏத்துக்கோன்னு. ஆனா ஆனா என் அன்பை புரிஞ்சிக்காம. என்னைச் சங்கடத்தில் நிறுத்திவிட்டானே. அவனுக்கு என்ன? கல்யாணம் குழந்தை என்று வாழ்க்கை சுகமாக அமைந்துவிட்டது. நான் தான் அவனை மறக்க முடியாமல் தவிக்கிறேன். எனக்கு வாழ்க்கை நல்லபடியா அமைந்தால்தான் என் தங்கைகள் வாழ்க்கை நல்ல படியா அமையும். நான் முரண்டுபிடித்துத் திருமணத்தை மறுத்தால் அவர்களை ஊர் பேசும். என் பெற்றோருக்கும் தலைகுனிவு ஏற்படும். சிவாவை நான் விரும்பினால் கூடத் தந்தை அதை ஏற்றுக்கொள்வார் என்ற நம்பிக்கையில் தான் இங்கு வந்தேன். ஆனால் இங்கே நிலைமை தலைகீழாகிவிட்டது. இனி எந்தக் காரணம் கொண்டு தந்தையைச் சமாளிப்பேன். சக்தியை வேண்டாம் எனக் கூற என்னிடம் தான் காரணமே இல்லையே. கடவுளே இத்தனை ஆண்டுகள் ஒருவனையே நினைத்து வாழ்ந்த எனக்கு ஏன் இந்தச் சோதனை.'' என்று புலம்பிக் கொண்டிருந்தது.

அப்போது சிவரூபன் தன் அலுவலக நண்பர்களுக்கு ஒரு அழைப்பு விடுக்க வந்தான்.

''பிரண்ட்ஸ் , வர ஞாயிற்றுக்கிழமை எங்க வீட்டில் வளைகாப்பு வைபவம் ஏற்பாடு செஞ்சிருக்கோம். நீங்க எல்லோரும் அந்த வைபவத்திற்கு வந்து தாயையும் அவங்க வயிற்றில் இருக்கும் சிசுவையும் வாழ்த்தணும். '' என்ற வேண்டுகோளுடன் அழைப்பு விடுத்தான்.

அனைவரும் மகிழ்வுடன் வருவதாகத் தெரிவித்தனர். அவர்களுக்குப் புன்னகையால் நன்றி கூறினான் சிவரூபன். அவனையே வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்த அபியை நெருங்கினான்.

''நீங்களும் கட்டாயம் வரணும் மிஸ். அபிராமி. '' என்றான்.

''ஸாரி என்னால வரமுடியாது. எனக்கு வேற வேலை இருக்கு.'' என்று கூறிவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டாள். இதை அவன்

எதிர்பார்த்தான் அதனால் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் ''கூப்பிடறது என் கடமை. வரதும் வராம இருக்கறதும் உங்க இஷ்டம். '' என்றுவிட்டு அடுத்தவர் நோக்கி நகர்ந்தான்.

ஒவ்வொருக்கும் தனித்தனியாக அழைப்பு விடுத்துவிட்டு வினோத்தை நெருங்கினான். ''வினோத் வந்துடுங்க. '' என்றான்.

''கட்டாயம் வந்திடறேன் ரூபன். '' என்றவன் சற்று தயங்கி ''உங்களை ஒண்ணு கேட்கணும் கேட்கலாமா ? '' என்றான்.

''தாராளமா கேட்கலாம் வினோத். ''

''உங்களுக்கும் அபிக்கும் ஏதாவது பிரச்சனை இருக்கா. அவ எல்லார்கிட்டையும் நல்லாதான் பேசறா. உங்களைக் கண்டா மட்டும் அரகென்ட்டா பிஹேவ் பண்றா ஏதாவது இருந்தா சொல்லுங்க ரூபன். என்னால முடிஞ்சா அதைச் சரி செய்ய உதவுவேன்.''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல வினோத். அந்தப் பொண்ணுக்கு என்னைப் பிடிக்கல போல. அதான் இப்படி நடந்துக்குது. அதை நான் பெரிசா எடுத்துக்கல '' என்று கூறி வினோத்தின் ஐயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து நகர்ந்தான் ரூபன்.

ஆனால் வினோத்தின் மனதிற்கு அவன் கூறிய காரணம் ஏற்புடையதாகத் தோன்றவில்லை. ''உங்க இரண்டு பேருக்கும் நடுவில் என்னவோ இருக்கு. அதைக் கண்டுபிடிச்சி உங்க பிரச்சனையைத் தீர்த்து வைப்பேன். மே பீ மிஸ் அண்டர்ஸ்டேண்டிங்கா தான் இருக்கும். '' என எண்ணிக் கொண்டிருந்தான்.

அப்போது சற்றுத் தூரத்தில் ஸ்வேதாவும் அபியும் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து அவர்களை நோக்கி எட்டு வைத்தான். அவர்களை நெருங்க நெருங்க அவர்களின் சம்பாஷனை காதில் விழ ஆரம்பித்தது.

ஸ்வேதா அபியிடம் , ''நீ செய்றது சரியான்னு நீயே யோசிச்சி பாரு அபி. ஒருத்தங்க விசேஷத்துக்குக் கூப்பிடறாங்கன்னா இப்படியா முகத்துக்கு நேரா வர முடியாதுன்னு சொல்லுவே. அதுவும் ஆபீஸே பார்த்துக்கிட்டு இருக்கு. அவரு நம்ம டீம் ஹெட் மத்தவங்க என்ன நினைப்பாங்க. ஆயிரம் பிரச்சனை நமக்குள்ள

இருந்தாலும் நம்ம டீமை மத்தவங்க மத்தியில் விட்டுக்கொடுக்கக் கூடாது. அதுதான் டீம் ஸ்ப்ரிட். அது கூடத் தெரியல. உன்னை என்னவோன்னு நினைச்சிருந்தேன் அபி ஆனா நீ சுத்த மோசம். அடுத்தவங்களை மதிக்காத பொண்ணு. இனிமே என்னோட பேசாதே.'' என்றான்.

''அவங்கவங்க பிரச்சனை அவங்கவங்க இடத்தில் இருந்து பார்த்தா தான் புரியும். மத்தவங்க முன்னாடி அவரை இன்சல்ட் பண்ணல. வேலை இருக்கு வர முடியாதுன்னு தான் சொன்னேன். அதுக்கு அவங்களே பீல் பண்ணல, நீ ஏன் இத்தனை தூரம் பீல் பண்ற. நான் நல்ல பொண்ணு இல்ல சரியா. இனிமே உன்னோட பேசல. விட்டுடு. '' என்ற அபி நகர முயலை அவளைத் தடுத்தான் வினோத்.

''அபி , என்ன இது ? எதுக்கு இத்தனை கோபம். நாங்க அப்படி என்ன செஞ்சோம் உனக்கு ? '' என்றவன் கேட்க.

''யாரும் எதுவும் செய்யல. எனக்குத் தான் கிறுக்குப் பிடிச்சிருக்கு. விடுங்க. '' என்றவள் கேன்டீன் நோக்கி சென்றாள்.

''அபிக்கும் ரூபனுக்கும் ஏதோ பிரச்சனை இருக்கு ஸ்வேதா. அது என்னன்னு தெரியற வரை இரண்டு பேர் கிட்டயும் இதைப் பத்தி பேச வேண்டாம். ''

''எனக்குப் புரியுதுங்க ஆனா இவ ஓவரா போறா. நட்ட நடு ஆபீஸில் இப்படி எடுத்தெறிஞ்சி பேசுவா. ஏற்கனவே நம்ம டீம் மேல நிறையப் பேருக்குப் பொறாமை இருக்கு. இதுல நமக்குள் ஒத்துமை இல்லன்னு தெரிஞ்சா ரூபனை டார்கெட் பண்ணி பேரை கெடுத்திடுவாங்க. ஏற்கனவே அவர் வாழ்க்கையில் பல கஷ்டங்கள் இருக்கு. இதுல இது வேற தேவையில்லாத பர்டனா ஆகிடாதா?'' என்று கவலை தோய்ந்த முகத்துடன் வினவினாள் ஸ்வேதா.

''உண்மைதான். இப்ப நடந்ததுக்கே ஏதாவது பிரச்சனை வரும்.'' என்றவன் ஒரு பெருமூச்சில் தன் கவலைகளைக் குழப்பங்களை வெளியேற்றினான்.

கேன்டீன் சென்ற அபி தனிமையில் அமர்ந்திருக்க அவளை நெருங்கினான் ஒருவன்.

''ஹலோ மிஸ். அபிராமி. ஆர் யூ கே நௌ. '' என்று கேட்டபடியே அவளருகே இருந்த நாற்காலியை இழுத்துவிட்டு அமர்ந்தான்.

அவனைக் கேள்வியாய் பார்த்தாள் அபி. அவனோ ''நான் சரத் , இங்க நானும் ஒரு டீம் லீடர் தான். '' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''தெரியும். ஆனா என்னைத் தேடி எதுக்கு வந்திருக்கீங்கன்னு தான் தெரியல. '' என்றாள் அபி.

''உங்க லீடரோட பிரச்சனையா. அவன் உங்களை எதுவும் தொல்லை பண்றானா ? அப்படி எதுவும் இருந்தா சொல்லுங்க. நான் மேனேஜ்மென்ட் கிட்ட பேசறேன். அவனுக்குக் கிடைக்க வேண்டிய தண்டனை கட்டாயம் கிடைக்கும். ''

''சரத் சார் எங்க டீம் பிரச்சனையைத் தீர்க்க எங்களுக்குத் தெரியும். உங்க உதவிக்கு ரொம்ப நன்றி. '' என்று அழுத்தமாகக் கூறினாள் அபி.

அவனோ முகத்தை வெடுக்கெனத் திருப்பிக்கொண்டு நகர்ந்தான். இதை எல்லாம் ரூபனும் சற்று தள்ளி இருந்த மேஜையில் அமர்ந்து கவனித்துக் கொண்டு இருக்க, ஸ்வேதாவும் வினோத்தும் வாயிலில் இருந்து கவனித்தனர்.

சரத் அவர்களைக் கடந்து செல்ல இருவரும் அபியை நோக்கி உள்ளே சென்றனர்.

''தேங்க்ஸ் அபி '' என்றாள் ஸ்வேதா.

''எதுக்கு ? ''

''இல்ல சரத் கிட்ட நம்ம டீமை விட்டு கொடுக்காம பேசினியே அதுக்குத் தான். ''

''.... ''

''அவனுக்கு ரூபனை பிடிக்கவே பிடிக்காது. எப்படியாவது ரூபனை வேலையைவிட்டு தூக்கணும்னு நினைக்கறான். நீ வேற எல்லார் முன்னாடியும் ரூபனை ஹர்ட் பண்ணிட்டியா அதை வெச்சி அவன் ரூபனோட கேரக்டரை டேமேஜ் செஞ்சிடுவானோன்னு எனக்குப் பயமா போயிடுச்சு. ஆனா நீ பேசினதில் அவனுக்கு அந்த எண்ணமே போயிருக்கும். ''

''.... ''

''உன்னைப் புரிஞ்சிக்கவே முடியல அபி. ''

''என்னாலயே என்னைப் புரிஞ்சிக்க முடியல. '' என்றாள் அபி.

''நீ எதனாலயோ டிஸ்டர்பாகி இருக்க. அது என்னன்னு சொன்னா அதைத் தீர்க்க நாங்க உனக்கு உதவுவோம் இல்ல. ''

''ஸ்வேதா சும்மா இருங்க. அவ எதுவும் சொல்ல வேண்டாம். அவளைக் கொஞ்சம் யோசிக்க விடுவோம். நல்லது கெட்டது அவளுக்கே புரியும். அவளே நல்ல முடிவா எடுப்பா. '' என்றான் வினோத்.

இருவரையும் மாறி மாறி பார்த்த அபி ''அண்ணன் சொல்றது உண்மை தான். எனக்குக் கொஞ்சம் யோசிக்க டைம் வேணும். அதுவரை என் குழப்பத்துக்குப் பதில் கிடைக்காது. எனக்கே பதில் தெரியாதப்ப உங்களுக்கு நான் எப்படி என் மனசை கன்வே பண்ண முடியும். ''

''.... ''

''கொஞ்சம் பொறுத்துக்கோங்க ஸ்வேதா. ப்ளீஸ். '' என்று அபி கேட்க. ஸ்வேதாவும் அவளைக் கட்டிக்கொண்டு ''இட்ஸ் ஓகே.. டேக் யுவர் டைம் பேபி. '' என்றாள்.

மூவரும் சமாதானமாகி காபியோடு தங்கள் உரையாடலை முடித்துக்கொண்டு அலுவலகம் உள்ளே சென்றனர்.

அலுவலகம் நுழைந்ததும் அவள் கண்ணில் பட்டான் ரூபன் அவனை நெருங்கியவள். ''ரூபன் சார் எனக்குப் பர்சனல் வேலை இருக்கு அதனால தான் வரலன்னு சொன்னேன். தப்பா எடுத்துக்காதீங்க. காலையில் கொஞ்சம் டென்ஷன் அதான் கொஞ்சம் போர்ஸா பேசிட்டேன். அதை நீங்க தப்பா எடுத்துக்கலன்னு எனக்குத் தெரியும். ஆனா மத்தவங்க கண்ணுக்கு அது தப்பா பட்டிருக்கும் போல. தேவையில்லாத குழப்பத்தில் அவங்க இருக்காங்க. அவங்களோட குழப்பத்தைத் தீர்க்க நான் உங்க கிட்ட மன்னிப்பு கேட்டுக்கறேன். ஸாரி பார் தி ஹர்டிங். '' என்று புன்னகை மலர்ந்த முகத்துடன் கூறிவிட்டு... தன் இருப்பிடத்தை அடைந்தாள்.

அவள் செய்கை அவனுக்குச் சிரிப்பையும் பெருமிதத்தையும் சேர்ந்தே தந்தது.

12

ஞாயிற்றுக்கிழமைகாலைதன்யாவின்வளைகாப்பு வைபவத்திற்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள் ஸ்வேதா. அவளை நெருங்கினாள் அபிராமி.

''ஸ்வேதா ''

''சொல்லு அபி. நீயும் வரியா ? '' என்று ஆர்வமாகக் கேட்டாள்.

''இல்ல ஸ்வேத், சக்தி கூப்பிட்டுக்கிட்டே இருக்காரு. ''

''உன்னோட பதிலை தெரிஞ்சிக்கத் தான் கூப்பிடுவாரு அபி. பதிலை சொல்லிடு. ''

''என்ன பதில் சொல்றதுன்னு தெரியாம தான் முழிச்சிக்கிட்டு நிக்கறேன்.''

''அபி.. இது உன் வாழ்க்கை. இன்றைய உன்னோட முடிவு நாளைய உன் எதிர்காலம். யாருக்காவும் யோசிச்சி உன் வாழ்க்கையையும் உன்னை நம்பி கல்யாணம் பண்ணிக்கப் போறவரையும் கஷ்டப்படுத்திடாதே. ''

''ம் ''

''வேண்டான்னா வேண்டாம்னு சொல்லிடு. அவங்க வேற இடம் பார்ப்பாங்க. தேவையில்லாம உனக்காகக் காத்திருந்து அவர் ஏமாற வேண்டாம். ''

''சரி நான் சொல்லிடறேன். '' என்றவள் கைப்பேசியோடு அறையில் இருந்து வெளியேறி வாசல் கதவை திறக்க அங்கே அவளின் தாயும் தந்தையும் நின்றிருந்தனர்.

பாலனின் கை காலிங் பெல் மேல் பட அது அலறியது. ''அடடே பெல் அடிக்கறதுக்கு முன்னாடியே கதவை திறந்திட்டியே ? '' என்று கேட்டார் பாலன்.

''அப்பா அம்மா.. '' என்றவள் இருவரையும் சென்று தழுவினாள்.

''உள்ள வாங்க '' என்றபடியே அவர்களை உள்ளே அழைத்துச் சென்று மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தினாள். சக தோழியரும் அவர்களை வரவேற்று உபசரித்தனர்.

''அப்பா இது ஸ்வேதா. என்னோட ஆபீஸ் மெட். இவங்க அக்ஷயா அக்கா, நர்ஸா இருக்காங்க. இது மாலினி , ஈஸ்வரி

இவங்க ரெண்டு பேரும் ஸ்டூடன்ஸ். '' என்று அவர்களைத் தன் பெற்றோருக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள்.

பின் ''என்ன அப்பா திடீர்னு வந்திருக்கீங்க. சொல்லவே இல்லை. '' என்று வியப்பாகக் கேட்டாள்.

''சும்மா தான்மா. உனக்கு ஒரு இன்ப அதிர்ச்சி தரலாம்னு. '' என்றார் பாலன்.

''அபி.. ''அம்மா அப்பாவை ரூமுக்கு கூட்டிக்கிட்டு போ அவங்க குளிச்சி பிரஷ் ஆகட்டும். அதுக்குள்ள நான் டிபன் செஞ்சிடறேன். சாப்பிட்டுக்கிட்டே பேசுவீங்கலாம். '' என்று அக்ஷயா கூற

''சரிக்கா '' என்றவள் தன் பெற்றோரை அறைக்கு அழைத்துச் சென்றாள்.

''அபி நீயும் ரெடியாகிடு. நாம கொஞ்சம் வெளிய போகணும்''. என்றார் சுதா.

''வெளியவா ? எங்க ? ''

''சொல்றோம். '' என்ற சுதா ''ஏங்க நீங்க முதலில் குளிச்சி ட்டு வாங்க. நான் உங்களுக்கு வேண்டியதை எல்லாம் எடுத்து வைக்கறேன். '' என்றபடியே பாலனை குளியலறை உள்ளே அனுப்பினார்.

''அபி நீ பக்கத்து ரூமுல போய்க் குளிச்சிட்டு வந்திடு. சீக்கிரம்.. சீக்கிரம்.'' எனக் கூறி அவளை அவசரப்படுத்தினார். அபி ஒன்றும் புரியாமல் குழப்பத்துடன் நடந்து பக்கத்து அறையை அடைந்தாள். அங்கேயே குளித்துத் தயாராகி வந்தவள் முன் இருவரும் தயாராகி நின்றிருந்தனர்.

இருவரையும் வியப்பாகப் பார்த்த படியே நின்றிருந்தவளை இழுத்து வந்து உணவு உண்ண வைத்தார் சுதா.

''அக்ஷயா உன் சமையல் அபாரம். '' என்று அவளைப் புகழ்ந்து தள்ளினார்.

பின் அபியை இழுக்காத குறையாக இழுத்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பினர். கீழே கார் நின்றிருப்பதைக் கவனித்தவள். ''இவங்க கார்லயா வந்தாங்க ? ஐய்யோ அம்மா ஏதோ முடிவோட வந்திருக்காங்க போலயே.'' என்ற எண்ணம் தோன்றி அவள்

தொண்டையை அடைத்தது.

அவளால் மறுக்க முடியாமல் அவர்களோடு புறப்பட வேண்டியதாகிப் போனது. அவர்களை வழியனுப்ப வந்த ஸ்வேதாவும் தன்யாவின் வளைகாப்பிற்குச் சென்றாள். மற்றவர்கள் அவரவர் பணியைக் கவனிக்கத் தொடங்கினர்.

''அப்பா நாம எங்க போறோம் ? '' என்று தந்தையின் காதில் கிசுகிசுத்தாள் அபி.

''கோவிலுக்குப் போறோம். '' என்று பதில் வந்தது தாயிடமிருந்து.

''எந்தக் கோவிலுக்கு ? ''

''அபி இங்க பாரு. இப்ப நாம அந்த வரனை முடிவு பண்ணத்தான் போயிக்கிட்டு இருக்கோம். நீ அமைதியா வா. உனக்கு எது நல்லதோ அதைத் தான் நாங்க செய்வோம். உன்னை நல்லவிதமா கட்டிக் கொடுத்தா தான் அடுத்தடுத்து நிக்கறவங்களுக்கு நல்ல வாழ்க்கையை அமைச்சி தர முடியும். படிக்கறேன்னு சொன்ன நீ நினைச்ச படிப்பையே படிக்க வெச்சோம். வேலைக்குப் போறன்னு சொன்ன உன் இஷ்டப்படி வேலைக்குப் போக அனுமதிச்சோம். கல்யாணத்துக்கும் உன் விருப்பத்துக்காகக் காத்திருந்தோம் ஆனா உன்னால முடிவெடுக்க முடியல. அதனால உனக்கு நல்லதை நாங்களே செஞ்சிடறதுன்னு முடிவு பண்ணிட்டோம். தள்ளி தள்ளி போட்டு. நாளைக்கு நீ கஷ்டப்படறதை பார்க்க எங்களால முடியாது. இதுவரை உன்னைப் புரிஞ்சி நடந்துக்கிட்ட எங்களை இப்ப நீ புரிஞ்சி நடந்துக்கோ. ஒரு அம்மாவா இதை மட்டும் தான் உன்கிட்ட கேட்கறேன். '' என்று நீண்ட விளக்கம் கொடுத்து நிறுத்தினார் சுதா.

அபியால் அதற்குப் பதில் பேச முடியவில்லை. சக்தியை பிடிக்கவில்லை என்று கூற ஒரு காரணமும் கிடைக்கவில்லை. அமைதியாக நடப்பதை ஏற்க மனதை தயார் படுத்த தொடங்கினாள்.

அங்கே சிவரூபன் அபியின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தான். தன்னுடன் சண்டையிட்டாலும் எப்படியும் வந்துவிடுவாள் என்றே நம்பி இருந்தான். ஆனால் ஸ்வேதா அபியில்லாமல் வந்ததைக் கண்டதும் அவன் மனம் வாடிப்போனது.

ஸ்வேதாவை நெருங்கிய வினோத் ''அபி வரலையா ? '' என்று

வினவ. ''அபியோட அம்மா அப்பா வந்திருக்காங்க. அவங்களோட வெளிய போயிருக்கா.'' என்று பதில் தந்தாள்.

''சரி வா'' என்ற வினோத் அவளோடு சேர்ந்து விசேஷ வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினான்.

விசேஷத்திற்கு வந்தவர்களில் யாரோ ஒருவர் மற்றொருவரிடம் ''புருஷனை முழுங்கின இவளுக்கு வளைகாப்பு தேவையா ?'' என்று முணுமுணுக்க அதைக் கேட்டு தன்யாவின் மனம் வெதும்பி கண் கலங்கினாள்.

அதைப் பார்த்த மரகதம் ''என் புள்ளையோட உயிர் தான் அவளோட வயித்துல வளருது. அதை யாரும் மறக்க வேண்டாம். இருக்க இஷ்டம் இருக்கறவங்க இருந்து வாழ்த்திட்டு போங்க. வாழ்த்த இஷ்டமில்லாதவங்க இப்பவே கிளம்பலாம். '' என்று உரக்க கூறி அனைவரின் வாயையும் அடைத்தார்.

அவரின் வார்த்தைகள் தன்யாவிற்கு மகிழ்ச்சியையும் மதன் இல்லாத வேதனை அழுகையும் சேர்ந்தே தந்தது. நல் உள்ளங்களின் ஆசியுடன் தன்யாவின் வளைகாப்பு இனிதாக நிறைவடைய, வந்தவர்களுக்கு விருந்திட்டு நன்றி கூறி அனுப்பி வைத்தனர் மரகதமும் சிவரூபனும்.

வினோத்தும் ஸ்வேதாவும் அவர்களிடம் விடைபெற வந்தனர். ''ரூபன் நாங்களும் கிளம்பறோம்.''

''ரொம்பத் தேங்க்ஸ் வினோத். நீங்க முன்னாடியே வந்திருந்து... எனக்கு வேண்டிய உதவிகளைக் கேட்காமலே செஞ்சிட்டீங்க. ரொம்பச் சந்தோஷம். ''

''ஆமாம்ப்பா ரொம்ப நன்றி. நான் கூட உன் முரட்டுத் தனமான முகத்தைப் பார்த்து முதலில் கொஞ்சம் பயந்தேன். ஆனா நீ ரொம்ப நல்ல பையன். பொறுப்பான பையனா இருக்க. அடிக்கடி வந்து போயிக்கிட்டு இரு சரியா. '' என்று மரகதம் உரிமையுடன் கூறவும் வினோத் நெகிழ்ந்து போனான்.

''கட்டாயம் வந்து போறேன் ம்மா. ''

''உன் குடும்பம் எங்க இருக்குப்பா ? கூடப்பிறந்தவங்க எத்தனை பேர் என்று ?'' வாஞ்சையுடன் கேட்க

அவன் முகம் வாடி ''எனக்குன்னு யாரும் இல்லம்மா. நான்

வளர்ந்தது ஆசிரமத்தில் தான். '' என்றான் சோர்வுடன்.

''ஸாரிப்பா எனக்குத் தெரியாது. '' என்றவர் அவனை நெருங்கி. ''இனிமே யாரும் இல்லன்னு சொல்லாதே. உனக்கு நாங்க இருக்கோம்.'' என்றார் பாசத்துடன்.

''ரொம்ப நன்றிம்மா ''

அவர்களின் பாசப்பிணைப்பை ரசித்தபடி நின்றிருந்தனர் ரூபனும் ஸ்வேதாவும்.

★★★

கோவிலில் சக்தியும் அவன் தாய் தந்தையும் வந்து அபி குடும்பத்தினர் வரவுக்காக காத்திருந்தனர். இரு வீட்டாரும் ஒருவருக்கு ஒருவர் வணக்கம் கூறி வரவேற்றுக் கொண்டனர்.

சாமியை கும்பிட்டு வந்து பேச்சை ஆரம்பிக்கலாம். '' என்று சக்தியின் அன்னை விஜி கூறவும் அதை அமோதித்து அனைவரும் சுவாமியை வணங்க சென்றனர்.

''சக்தி அபியை நெருங்கியபடியே மெல்ல பேசினான். ''ஏன் போன் பிக் பண்ணல ? '' என்றவன் கேள்விக்கு மௌனமாய் நடந்தாள் அபி.

''எனக்கே இன்னிக்குக் காலையில தான் தெரியும். உங்க அம்மா உனக்குப் பிடிச்சிருக்குன்னு சொல்லி மேற்கொண்டு பேசலாம்னு சொல்லி இருக்காங்க. அதுக்குத் தான் இப்ப வந்திருக்காங்க. ''

''.... ''

''உனக்கு டைம் வேணும்னு கேட்ட என் கிட்ட சொல்லாமயே ஓகே சொல்லிட்டியா ? ''

''ம் '' என்ற ஒற்றை எழுத்தில் அவள் முடித்துக் கொள்ள சக்திக்குக் குழப்பமாக இருந்தது.

''அது இல்ல அபி '' என்றவன் தொடங்கும் முன் ''மாப்பிள்ளை கல்யாணத்துக்கு அப்புறம் நீங்க தானே பேசிக்கிட்டே இருக்கப்போறீங்க. இப்ப வாங்க பூஜை பண்ணலாம். '' என்ற சுதா புன்னகையுடன் அவனைப் பிராகாரத்திற்கு அழைத்துச்சென்றார். பூஜை முடித்து நிச்சயதார்த்தம் குறித்துப் பேச ஆரம்பித்தனர்.

''அப்ப அடுத்த வாரமே நிச்சயதார்த்தத்தை வெச்சிக்கலாம் தானே.'' என்று கேட்டார் சக்தியின் தந்தை ரகுபதி.

அதைக் கேட்டு சக்தியும் அபியும் அதிர பாலனோ தடுமாறச் சுதா இன்முகத்துடன் ''சம்மதம் அண்ணா. '' என்றார் உரிமையுடன்.

அவரின் சம்மதத்தை அடுத்து சக்தி அபியின் முகம் காண அவளோ தலை குனிந்து அமர்ந்திருந்தாள். அவள் முகள் பாவத்தை அறிய முடியாமல் தடுமாறினான் சக்தி.

''சக்தி , உனக்குச் சம்மதம் தானே. '' என்று விஜி கேட்க.

''அபிக்கு சம்மதம்னா.. எனக்கும் சம்மதம் தான். '' என்றான்.

அதைக் கேட்ட சுதா ''மாப்பிள்ளை இப்பவே என் பொண்ணு வார்த்தைக்கு முக்கியத்துவம் தராரே'' என்று வியந்து..'' அபி சொல்லுடா. உனக்குச் சம்மதம் தானே. நீ கேட்ட மாதிரி அடுத்த வாரம் நிச்சயம் மூணு மாசம் கழிச்சி கல்யாணம். உனக்குச் சந்தோஷம் தானே. '' என்று கேட்டு அபியை இடித்தார்.

அவள் தலை நிமிர்ந்து தன் சம்மதத்தைத் தலையசைப்பில் தெரிவிக்க, விஜிக்கும் ரகுபதிக்கும் திருப்தியாக இருந்தது. சக்திக்கு மனம் நெருடியது. இருந்தாலும் எதையும் அவனால் மறுக்கவோ நிறுத்தவோ முடியவில்லை. அவள் மனதை அவளே உரைத்தால் அன்றி.. அவனுக்கு எப்படித் தெரியும். எல்லாம் பேசி முடித்துக் கொண்டு அவரவர் இருப்பிடம் கிளம்பினர்.

## 13

அபியுடன் அவள் தங்கி இருந்த அறைக்கு வந்தனர் அவள் பெற்றோர். அனைவருடனும் சுதா இயல்பாகப் பழகி ஒட்டிக்கொண்டார். அக்ஷயாவுடன் சமையல் அறையில் உதவி செய்தார். மாலினி ஈஸ்வரியுடன் டி.வி. பார்த்தார். ஸ்வேதா வந்ததும் அவளோடு அளவளாவினார். அனைவரை பற்றியும் கணித்துவிட்டார்.

''எல்லோரும் நல்ல பிள்ளைகளா இருக்கீங்கம்மா. குடும்பத்துக்காக எத்தனை சுமையை உங்க தோள்களில் சுமக்கறீங்க. உங்களைப் பெத்தவங்க ரொம்பப் புண்ணியம் செஞ்சிருக்கணும்.'' என்று கூறிப் பெருமிதப்பட்டார்.

அவர்களுக்கும் இவரை மிகவும் பிடித்துப் போனது. அம்மா அம்மா என்று ஒட்டிக்கொண்டனர். யாருடனும் ஒட்டாமல் தனித்து

இருந்தது அபிராமி தான். அவளை நெருங்கினார் பாலன்.

''அபி ''

''வாங்கப்பா.. உட்காருங்க. ''

''அபி உன் அம்மா அவசரமா முடிவெடுத்திட்டா டா. அப்பாவால தடுக்க முடியல. சக்தி நல்ல பையன் தான். ஆனா உனக்கு ஏன் பிடிக்கலன்னு தெரியாம குழம்பமா இருக்கு. இந்தக் கல்யாணத்தை எப்படித் தடுக்கறதுன்னு யோசிக்கறேன். பேசாம சக்திக்கிட்ட பேசி அவரே உன்னை வேண்டாம்னு சொல்ல வெச்சிடலாமான்னு ஒரு யோசனை வருது. ''

''அப்பா அதெல்லாம் வேண்டாம். எனக்கே இந்தக் கல்யாணத்துல சம்மதம் தான். நீங்க வொரி பண்ணிக்காதீங்க. ''

''இல்லடா உன் வாய் தான் சரின்னு சொல்லுதே தவிர உன் கண்ணு சொல்ல மாட்டேங்குதே. எப்பவும் கலகலன்னு இருக்கற பொண்ணு. இப்ப இப்படி அமைதியா உட்கார்ந்திருக்கியே ? அப்பாவுக்குப் பயமா இருக்குடா. உன் கல்யாணம் எத்தனை முக்கியமோ அதைவிட உன் சந்தோஷம் முக்கியம். உன் சந்தோஷத்தை கெடுத்து கல்யாணம் பண்ணி வைக்க அப்பாவுக்கு இஷ்டமில்லடா. ''

''அப்படி எல்லாம் எதுவும் இல்லப்பா. நான் சந்தோஷமா தான் இருக்கேன். என்ன இன்னும் கொஞ்ச நாள் உங்க மகளா இருக்கணும்னு ஆசைப்பட்டேன். ஆனா அம்மாவோட ஆசையும் நியாயம் தானே.''

''இது போதும் டா எனக்கு.. '' என்றவர் நிம்மதி பெருமூச்சு விட்டார்.

''அப்பா நீங்க ரெஸ்ட் எடுங்க நான் போய் அக்ஷயா அக்காவுக்கு உதவறேன். அவங்க நைட் டியூட்டிக்கு போகணும். '' என்றுவிட்டு வெளியேறினாள்.

அங்குச் சென்று அனைவரோடு சற்றுநேரம் பேசி விட்டு இரவு உணவை தயாரிக்க உதவினாள்.

''அபி அப்படியே சமைக்கக் கத்துக்கோடி. அம்மாகிட்ட தான் கத்துக்கப் பிடிக்கல அக்காகிட்ட யாவது கத்துக்கோ. அக்ஷயா கை மணம் ரொம்ப நல்லா இருக்கு. நாளைக்கு சக்தி தம்பியோட தனிக்

குடித்தனம் பண்ணும் போது சமைக்கத் தெரியாதுன்னு நிக்காதே.'' என்றார் சுதா.

''அம்மா. அபிக்கு மாப்பிள்ளை பார்த்தாச்சா ? '' என்று கேட்டாள் அக்ஷயா.

''ஆமாடா இன்னிக்குத் தான் முடிவா பேசி இருக்கோம். அடுத்த வாரம் நிச்சயம் வெச்சிருக்கோம். நீங்க எல்லாம் கட்டாயம் வரணும். மாப்பிள்ளை சக்தி இங்க இந்த ஊருல தான் வேலையில் இருக்காரு. கல்யாணத்துக்கு அப்புறம் அபி இந்த ஊருல தான் இருப்பா. அப்பப்போ இவளை போய்ப் பார்த்துக்கோங்க. உங்களை எல்லாம் நம்பிதான் இவளை தனியாவிடலாங்கற தைரியமே வந்திச்சு எனக்கு. ''

''அதுக்கென்னம்மா. நாங்க பார்த்துக்கறோம். '' என்று சுதாவிடம் கூறிய அக்ஷயா ''வாழ்த்துக்கள் அபி. '' என்றாள் அவளைப் பார்த்து. அதற்குப் புன்னகையால் நன்றி சொன்னாள் அபி.

இரவு உணவு முடித்து அனைவரும் உறங்கினர். மறுநாள் அபி ஸ்வேதாவோடு அலுவலகம் கிளம்பி விட மதியம் போல ஊருக்கு கிளம்பினர் பாலனும் சுதாவும்.

''ஏங்க அபியோட ஆபீஸுக்கும் ஒரு எட்டு போயிட்டு கிளம்புவோம்.'' என்று சுதா கூற ''என்ன நீ திடீர் திடீர்னு ப்ளானை மாத்தற. அபிக்கிட்ட காலையிலயே சொல்லிட்டோம் இல்ல. இப்ப எதுக்கு அங்க போகணுங்கற. '' என்றார் பாலன் டென்ஷனானார்.

''அங்க இருக்கறவங்களையும் பார்த்த மாதிரி இருக்கும். கூடவே அபியோட நிச்சயத்துக்கும் கூப்பிட்டுடலாம் அதுக்குத் தான். நீங்க டிரைவருக்கு வழியைச் சொல்லுங்க. '' என்றுவிட்டு தன் கைப்பேசியை எடுத்தார். யார் யாரை அழைக்க வேண்டும் என்ற குறிப்பை எழுதிய படியே அவர் பயணிக்க பாலன் செய்வதறியாது டிரைவருக்கு வழி கூற தொடங்கினார்.

அபி அலுவலகத்தில் பணியில் மூழ்கி இருக்க அவள் பெற்றோர் வந்திருப்பதாகத் தகவல் வந்தது. தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு. வேகமாக எழுந்து ஓடினாள். அவள் ஓட்டத்தைப் பார்த்து வினோத் அவளைப் பின்தொடர இருவரும் ரிசப்ஷனை அடைந்தனர்.

''இங்க எதுக்கு வந்தீங்க ? '' என்று அவள் காட்டமாகக் கேட்

டாள்,

''என்ன நீ இப்படிப் பேசற ? இதுக்கு முன்னாடி இருந்த ஆபீஸுக்கு கூட நாங்க வந்திருக்கோம். இங்க வந்ததுக்கு ஏதுக்கு இத்தனை கோபம் வருது உனக்கு ? '' என்று எதிர் கேள்வி கேட்டார் சுதா.

''சரி.. சரி.. வந்த விசயத்தைச் சொல்லுங்க. ''

''நாங்க ஊருக்கு கிளம்பிட்டோம். உன்னோட வேலை பார்க்கறவங்களையும் பார்த்திட்டு அவங்களை நிச்சயத்திற்குக் கூப்பிட வந்திருக்கோம். ''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். எல்லோரையும் கல்யாணத்துக்குக் கூப்பிடலாம். இப்ப கிளம்புங்க. '' என்ற அபி அவர்களை இழுக்காத குறையாக இழுத்துக்கொண்டு வெளியேறவும் அரைநாள் விடுப்பு எடுத்திருந்த சிவரூபன் உள் நுழையவும் சரியாக இருந்தது.

அபி அவசரத்தில் அவன் மேல் மோதி நிற்க '' பார்த்து நடக்க மாட்டியா? என்ன அவசரமோ தெரியலே. '' என்று அவளை வசைபாடினார் சுதா. பின் ரூபனை பார்த்து ''ஸாரி தம்பி கவனிக்காம வந்துட்டோம். '' என்றிட ''இட்ஸ் ஓகே. '' என்றபடியே அவன் நகர முயல ''சிவா நீ.. சிவா தானே ? '' என்றார் பாலன்.

அதைக் கேட்ட சுதா ''அட ஆமாம். நம்ம சிவா தான். டேய் சிவா எப்படி டா இருக்க ? அம்மா அப்பா மதன் எல்லோரும் எப்படி இருக்காங்க ? என்ன டா முழிக்கற எங்களைத் தெரியல. சுதாம்மாடா '' என்றவர் அவனை தொட்டு உரிமையாகப் பேசினார்.

''உங்களுக்காவது என்னை ஞாபகம் இருக்கே. சந்தோஷம். எங்க நீங்களும் மறந்திருப்பீங்களோன்னு நினைச்சு தான் அமைதியா போகப் பார்த்தேன். '' என்றான் சிவா அபியை பார்த்தபடியே.

''எது ஞாபகம் இல்லையா ? '' என்றவர் கேள்வியாய் அபியை பார்க்க...

''விடுங்க ஆன்ட்டி. அவங்களை எதுவும் கேட்காதீங்க ? நீங்க என்ன திடீர்னு வந்திருக்கீங்க ? ஹர்ஷா , சம்யுத்தா இரண்டு பேரும்

எப்படி இருக்காங்க ? ''

''எல்லோரும் நல்லா இருக்கோம் சிவா. ஆமாம் நீயும் இங்க தான் வேலை பார்க்கறியா ? '' என்று கேட்டார் பாலன்.

''ஆமாம் அங்கிள். டீம் ஹெட்டா இருக்கேன். ''

''அப்படியா ? ரொம்பச் சந்தோஷம் டா உன்னைப் பார்த்தது. ''

''ஆளே மாறிட்ட. '' என்ற சுதா அவனுக்கு நெட்டி முறித்து திருஷ்டி கழித்தார்.

''சிவா அபிக்கு வரன் பார்த்திருக்கோம். நேத்து தான் பேசி முடிச்சோம். அடுத்த வாரம் நிச்சயம் வெச்சிக்கலாம்னு முடிவு பண்ணி இருக்கோம். ''

''நல்லது ஆன்ட்டி. ''

''ஏன்டா வீட்டுக்கு கூப்பிட மாட்டியா ? உங்களை விசேஷத்துக் குக் கூப்பிட பழைய அட்ரஸுக்கு நேத்துப் போயிருந்தோம். அங்க நீங்க இல்ல ஏன்டா வீட்டை வித்துட்டீங்களா ? ''

''ம் ஆமாம். ஆன்ட்டி. ''

''இப்ப எங்க இருக்கீங்க ? ''

''நான் கூட்டிக்கிட்டு போறேன். ''

''இப்ப போகலாமா ? நாங்க சாயந்திரம் ஊருக்குப் போனா தான் நிச்சய வேலையைப் பார்க்க முடியும். ''

''ஒரு அரை மணி நேரம் வெய்ட் பண்றீங்களா. அன்டனன்ஸ் போட்டுட்டுப் போகலாம். '' என்றான் சிவரூபன்.

''அதுக்கென்ன சிவா நாங்க கேன்டீனில் காத்திருக்கறோம். நீ போயிட்டு வா. '' என்றார் பாலன்.

''சரி.. அங்கிள் வெய்ட் பண்ணுங்க வந்திடறேன். '' என்றபடியே அலுவலக அறை நோக்கி நடந்தான் சிவா.

''ஏன் டி நம்ம சிவாவை தெரியலையா உனக்கு ? ''

''தெரியல... இப்ப அது ஒரு குத்தமா ? ''

''என்னடி ஆச்சு உனக்கு. எப்பவும் அவங்க வீட்டுலயே கெடையா கெடப்ப இப்ப அவனையே தெரியலன்னு சொல்லறே. ''

''அம்மா மறந்துட்டேன் விடு. ''

''சரி. நீயும் கிளம்பு. சிவா வீட்டுக்கு போயிட்டு வந்திடலாம். ''

''நான் வரல எனக்கு வேலை இருக்கு. நீங்க போயிட்டு வாங்க.''

''நான் வேணா சிவாகிட்ட பேசவா ? அவன் தானே டீம் லீடர். உனக்குப் பர்மிஸன் தரமாட்டானா ? ''

''அம்மா வேலை செய்யற இடத்தில் யாரோட தயவையும் எதிர்பார்க்க கூடாது. நான் என் டேபிளுக்குப் போறேன். அதோ அங்க தான் கேன்ட்டீன் இருக்கு. போய் வெய்ட் பண்ணுங்க. சார்ரு.... வருவாரு.'' என்றுவிட்டு உள்ளே போய்விட்டாள் அபிராமி.

சுதாவுக்குச் சுத்தமாக ஒன்றும் புரியவில்லை. பாலனோ கடும் குழப்பத்திற்கு ஆளானார். இதை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்த வினோத்தோ சிந்தித்த படியே தன் இருக்கையை அடைந்தான்.

அரை மணியில் வந்த சிவரூபனோடு அவன் இல்லம் சென்றனர் இருவரும். அதை விரும்பாத அபிராமியோ மன உளைச்சலில் உழலத் தொடங்கினாள்.

## 14

''அபி '' என்றழைத்தபடியே அவளை நெருங்கினான் வினோத்.

''வாங்க அண்ணா. ''

''அவங்க தான் உன் அப்பா அம்மாவா ? ''

''ம் ஸாரிண்ணா அவங்க திடீர்னு வந்த டென்ஷனில் உங்களை அறிமுகப்படுத்த மறந்திட்டேன். ''

''அது பரவாயில்லை. நம்ம அம்மா அப்பா தானே உன் நிச்சயத்துக்கு வரும்போது அறிமுகமாகிக்கறேன். ''

''... ''

''நாள் குறிச்சாச்சுன்னு ஸ்வேதா சொன்னா. நாங்க வரலாமா ? ''

''என்ன அண்ணா இப்படிக் கேட்கறீங்க. நீங்க இல்லாம எப்படி ? நீங்க கட்டாயம் வரணும். ''

''சந்தோஷம். ஆமாம் , ரூபன் சாரோட உன் அப்பா அம்மா ரொம்பப்.... பேசிக்கிட்டு இருந்தாங்க போல. ''

''அது... ''

''அப்ப நீ தேடி வந்த பக்கத்து வீட்டுக்காரங்க ரூபன் சாரோட

குடும்பம் இல்லை. அப்படித் தானே ? ''

''ஆமாம் அது அவங்க இல்லை. ''

''சரி விடு ஆனா உன் அப்பா அம்மாவுக்கு அவங்களைத் தெரிஞ்சிருக்கும் போல. அதான் உன் நிச்சயத்துக்கு அவங்களை அழைக்கப் போயிருக்காங்க.''

''.... ''

''அபி.. உனக்கும் ரூபனுக்கும் என்ன பிரச்சனைன்னு தெரிஞ்சா அது தீர உனக்கு நான் உதவி செய்வேன். ஒரு அண்ணனா கேட்கறேன். சொல்லுடா ? '' என்றான் கெஞ்சலான குரலில்.

''எனக்கும் அவருக்கும் ஒரு பிரச்சனையும் இல்ல தயவுசெஞ்சு இதுக்கு மேல இதைப் பத்தி பேசாதீங்க. ப்ளீஸ். '' என்றவள் கையெடுத்து கும்பிட.. வினோத் மனம் வாடிப்போனது.

''சரி விடு நான் கேட்கல. '' என்றபடியே அங்கிருந்து தன் இருக்கைக்குச் சென்றான். அவன் பேசிவிட்டு வந்ததைக் கவனித்த ஸ்வேதா அவனை நெருங்கினாள்.

''எதுவும் கேட்காதே. நானே செம கடுப்பில் இருக்கேன். '' என்றான் வினோத்.

''ஒண்ணும் கேட்க வரல இதைக் கொடுக்க வந்தேன். '' என வெடுக்கெனக் கூறியவள் ஒரு கோப்பை அவன் மேஜை மேல் வைத்து நகர்ந்தாள்.

''அண்ணனும் தங்கச்சியும் ரொம்பப் பண்றாங்க. இருக்கட்டும் இருக்கட்டும். எனக்கும் ஒரு காலம் வரும் அப்ப வெச்சிக்கறேன். '' என முணுமுணுத்தபடியே தன் இருக்கையில் அமர்ந்தாள்.

நேரம் கரைந்ததே தவிர ரூபன் அலுவலகம் திரும்பவே இல்லை. மாலை பணி முடித்து தன் வசிப்பிடம் அடைந்தாள் அபி. அப்போது அவள் கைப்பேசி அழைக்க.. எடுத்துப்பார்த்தாள் பாலன் தான் அழைத்திருந்தார்.

''அபி நாங்க ஊருக்கு கிளம்பிட்டோம் டா. நைட்டுக்குள்ள வீட்டுக்கு போயிடுவோம். நீ பார்த்து ஜாக்கிரதையா இரு. அடுத்த வாரம் பத்திரமா வந்துடு. அப்பா அப்புறம் கூப்பிடறேன். '' என்றுவிட்டு அழைப்பை துண்டித்துவிட்டார்.

இவள் மறுமொழியைக் கூட கேட்கவில்லை. அவர் குரல் வேறு கரகரத்து இருப்பதைப் போலத் தோன்றியது அபிராமிக்கு. ''என்ன நடந்திருக்கும் ? '' என்ற சிந்தனையுடன் அமர்ந்தாள். அவளுக்கு எதுவும் பிடிபடவில்லை. குழப்பத்துடனே உறங்கினாள்.

மறுநாள் அலுவலகத்தில் சிவரூபனை தேட அவனோ அலுவலக அறையில் இருந்தான். அவனிடம் சென்று பேசலாமா ? வேண்டாமா? என்ற குழப்பத்துடன் தன் இருக்கையில் அமர்ந்தாள் அபி.

அவளை ரூபன் அழைப்பதாகத் தகவல் வர தயக்கத்துடன் அவன் அறை நோக்கி சென்றாள். ''வரலாமா ? '' என்று அனுமதி வேண்டி அவள் நிற்க உள்ளே வரும்படி ஜாடை செய்தான்.

''அபிராமி நாம சைட் விசிட்டு போகணும். ஸ்வேதா கிட்ட பிரின்ட் அவுட் வாங்கிக்கோங்க. நாளை மறுநாள் அங்க பூமி பூஜைக்கு ஏற்பாடு செய்யணும். '' என்று அலுவலக ரீதியான மொழியாடலை மட்டுமே அவன் பேசினான்.

''ஓகே ரூபன் '' என்றுவிட்டு அவன் அறைவிட்டு வெளியே வந்தாள்.

மேற்கொண்டு அவனிடம் எப்படி நடந்து கொள்வது எனப் புரியாமல் குழப்பத்தில் தன் நாட்களை அபிராமி தள்ள அவள் நிச்சயம் குறித்த நாளும் நெருங்கிவிட்டது. வினோத்தையும் ஸ்வேதாவையும் உடன் அழைத்துக் கொண்டு சொந்த ஊருக்கு கிளம்பினாள் அபிராமி. அவள் செல்லும் அதே பேருந்தில் சக்தியும் வந்தான்.

''அட அபி அங்க பாரு சக்தி. '' என்ற வினோத் ''சக்தி. இங்க வாங்க.'' என்றழைக்க அவனின் குரலில் திரும்பியவன் அவர்களை நோக்கி சென்றான்.

''நீங்களும் இந்தப் பஸ் தானா ? '' என்றவன் கேள்வியோடு தன் இருக்கையைத் தேட.. வினோத்தின் பக்கத்து இருக்கையாகிப் போனது.

''நாம பக்கத்து சீட் தான். வேற யாரையும் ரெக்வஸ்ட் பண்ண வேண்டியது இல்ல. '' என்ற சக்தி மென்னகையோடு அவனருகே அமர''அப்பாடா எனக்குப் பேச்சு துணைக்கு ஆள் கிடைச்சாச்சு. ஏய்

தங்கச்சி.. இங்க பாரு நீங்க மட்டும் தான் ஜோடியா வருவீங்களா ? எனக்கும் ஜோடி கிடைச்சிருச்சு. '' என்றிட, ''ஜோடியா ? நீங்களா கட்டிக்கபோறீங்க ? '' என்றாள் ஸ்வேதா வம்பாக.

''அடிங்கு '' என்று வினோத் பொங்க, ''ஹலோ இந்த மிரட்டற வேலை எல்லாம் வேணாம். சும்மா தமாசுக்குப் பேசினா கூட மூஞ்சை காட்டுறது. '' என்றுவிட்டு முகத்தை வெட்டினாள் ஸ்வேதா.

''நானும் சும்மா தான் மிரட்டினேன். பயப்படாதே. ''

''யாரு பயந்தா ? ''

''நீதான். ''

''நான் ஏன் பயப்படப் போறேன். உங்க மூஞ்சை பார்க்க சகிக்கல. இந்த மூஞ்சை பார்த்துப் பச்சை புள்ளை அழுகுது. '' என்றபடியே பக்கத்துச் சீட்டில் இருந்த குழந்தையைக் காட்டினாள் ஸ்வேதா.

''என் மூஞ்சி இப்படித் தான் இருக்கும். இந்த மூஞ்சை நீ இனிமே பார்க்க வேண்டாம். '' என்றுவிட்டு முகத்தைத் திருப்பி ஜன்னல் வழியே தலையை நீட்டி அமர்ந்தான்.

அவன் கோபித்துக் கொண்டதை கண்டதும் ஸ்வேதா மனம் சுணங்கியது.'' அபி கோவிச்சிக்கிட்டாரு டி. '' என்றாள்.

''உனக்குக் கொழுப்புக் கொஞ்சம் அதிகமா தான் இருக்கு. அவரே இறங்கி வந்து பேசினாநொடிக்கு நொடி கலாய்க்கிறா. என்னமோ பண்ணு.'' என்று கோபமாகக் கூறிவிட்டு முகத்தை அவளும் திரும்பிக் கொண்டாள்.

ஸ்வேதா பாவமாக சக்தியை பார்க்க தான் சமாதானம் செய்வதாக ஜாடை செய்தான். பக்கத்தில் அழுது கொண்டிருந்த குழந்தையை அதன் தாயிடம் கேட்டு வாங்கியவன் வினோத்திடம் கொடுத்தான்.

''குழந்தையைச் சமாதானம் பண்ணுங்க வினோத். இந்த மாதிரி பிராயாணத்துல இந்தக் குழந்தைங்க அழறது சகஜம் தான். நம்மை மாதிரி சக பயணிகள் இந்த அழுகையைப் பெருசா எடுத்துக்காம அவங்களுக்கு உதவியா விளையாட்டு காட்டணும். '' என்றான்.

வினோத் அழும் குழந்தையைப் பார்த்தான். அக்குழந்தை தன் பிஞ்சு விரல்களால் அவன் முகத்தைப் பிடித்து இழுத்தபடியே அழுதது. அதன் கைப்பட்டதும் ஏதோ ஒரு உணர்வு புன்னகை

முகத்தில் அரும்ப அக்குழந்தையைக் கொஞ்ச தொடங்கினான். அவன் கொஞ்சல் மொழி கேட்டு அழுகையைச் சற்றே நிறுத்தியது குழந்தை. பின் ஒரு தாலாட்டு பாடலை அவன் பாட. அவன் குரல் என்னும் காந்தத்தால் அமைதியாக உறங்கியது.

அவன் குரல் கேட்டு ஸ்வேதாவும் மயங்கினாள். இமை மூடி ரசித்தவளை பாடிய படியே அவனும் ரசித்துக் கொண்டிருக்க மௌனமாக அதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டான் சக்தி. அபியோ அதைக் கவனிக்கும் மனநிலையில் இல்லை. வினோத்தின் குரலில் ஒலித்த பாடல் தந்த மயக்கத்தில் இமைகளை மூடினாள். சற்று நேரத்தில் உறங்கியும் போனாள்.

உறங்கும் குழந்தையை அதன் தாயிடம் தந்து விட்டு வந்தமர்ந்த வினோத்திடம். ''செம வாய்ஸ் '' என்றாள் ஸ்வேதா.

''.... ''

''நீங்க ஏன் பாட்டு போட்டி மாதிரியான நிகழ்ச்சியில் கலந்துக்கக் கூடாது. உங்க வாய்ஸ்க்கு நல்ல ரெஸ்பான்ஸ் கிடைக்கும். ''

''பாட்டு பாடறது என் மனநிம்மதிக்காக. அதை வெச்சி பேர் புகழ் வாங்கறதுக்காக இல்ல. என் தொழில் மூலமா அதை நான் அடைவேன்'' என்றவன் அவளை அலட்சியப்படுத்துவதைப் போல சக்தியோடு தன் உரையாடலை தொடங்கினான்.

ஸ்வேதா உதட்டை சுழித்துக்கொண்டு திரும்பி அமர்ந்தாள். சக்தியும் வினோத்தும் பேசியபடியே பயணித்தனர். வினோத்தும் சக்தியும் நன்றாகப் பழக வாய்ப்பாக அது அமைந்து போனது. ஒருவரை பற்றி ஒருவர் தெரிந்துக்கொண்டனர். சற்று நேரத்தில் ஸ்வேதாவும் உறங்கிவிட்டாள்.

அவள் உறங்கிவிட்டதைக் கவனித்தபடியே பேசிக்கொண்டிருந்தான் வினோத். அதைப் பார்த்த சக்தி... ''நான் ஒண்ணு கேட்டா தப்பா எடுத்துக்கக் கூடாது. '' என்று பீடிகை போட,

''என்னது ? நான் உங்களைத் தப்பா ஏன் எடுத்துக்கப் போறேன் சக்தி. நீங்க என் மாப்பிள்ளை. '' என்றான்.

''ஒருவேளை மாப்பிள்ளையா இல்லாம இருந்தா, தப்பா எடுத்துக்குவீங்களா ? ''

''இல்ல அப்ப நல்ல நண்பனா எடுத்துப்பேன். ஏன்னா எனக்குன்னு ஒரு நண்பன் இதுவரை இல்லை. எல்லோரும் என்னைப் பார்த்தாலே பயந்து ஓடிடுவாங்க. என் முகம் அப்படி.'' என்றான் விரக்தியாக.

''முகத்தில் என்ன இருக்கு வினோத். மனசு தான் ஒருத்தரோட அழகை தீர்மானிக்கும். அது புரியாத சில பேர் வெளி அழகுக்கு முக்கியத்துவம் தராங்க. அதைப் பெருசா எடுத்துக்காதீங்க. என்னை உங்க நண்பனா ஏத்துக்கிட்டதுக்கு நன்றி. ஒருவேளை நான் உங்க மாப்பிள்ளை ஆகலன்னாலும் நாம நண்பர்களா இருக்கலாம் தானே? ''

''ஏன் இப்படிப் பேசறீங்க சக்தி ? அபியை உங்களுக்குப் பிடிக்கலையா?''

''எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. ஆனா அபி முழு மனசோட இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்கலையோன்னு என் மனசு நினைக்குது. இந்தக் கல்யாணம் நடக்குமான்னு ஒரு பயம் உள்ளுக்குள்ள இருக்கு. ''

''உண்மையைச் சொல்லணும்னா எனக்கும் அந்தப் பயமும் சந்தேகமும் இருக்கு சக்தி. ''

''முடிஞ்சா அவ கிட்ட பேசுங்க வினோத். எனக்கு அவளோட மனசில் இருக்கறதை தெரிஞ்சிக்கணும். ''

''நானும் முயற்சி செஞ்சிக்கிட்டு தான் இருக்கேன். ஆனா பிடிகொடுக்க மாட்டேங்கறா. சரியான அழுத்தக்காரியா இருக்கா. ''

''.... ''

''ஆமாம் நீங்க எதோ கேக்கணும்னு சொன்னீங்களே அது என்ன?''

''ஆங் அதுவா உங்களுக்கும் ஸ்வேதாவுக்கும் நடுவில் என்னமோ இருக்கு போலத் தெரியுது, அதான் ''

''ச்சேச்சே அதெல்லாம் ஒண்ணுமில்ல சக்தி. இவளோட என்னைச் சேர்த்து வெச்சி பேசாதீங்க. அவளுக்கு என்னைக் கண்டாலே பிடிக்காது. எப்பவும் என்னை மட்டம் தட்டிக்கிட்டே இருப்பா. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீங்க பார்க்கல ''

''பார்த்தேன் அவங்க உங்களை ரசிச்சி பார்த்ததை. '' எனக் கூறி

கண்ணடித்தான் சக்தி.

''அப்..படி..எல்லாம்.. இல்..லை.. சக்தி. '' என்றவன் உறங்கும் ஸ்வேதாவை பார்க்க, ''இருக்கு வினோத் '' என்று அழுத்தமாகக் கூறினான் சக்தி.

வினோத் வியப்பாக அவன் முகம் நோக்க ''நீங்க யோசிங்க இருக்கா இல்லையான்னு உங்களுக்கே தெரியும். இப்ப நான் தூக்கறேன். இல்லன்னா மாப்பிள்ளை மூஞ்சி ஏன் இப்படி வாடி இருக்குன்னு கேள்வி கேட்பாங்க. குட்நைட். '' என்று மென்னகையுடன் கூறிய சக்தி மெல்ல தன் இமைகளை மூடினான். உறக்கம் அவனையும் தழுவிவிட்டது. ஆனால் வினோத். இரவெல்லாம் சிந்தனையிலேயே கழித்தான். முதலில் ஸ்வேதாவை நினைத்து குழம்பியவன் அடுத்து அபியை நினைத்து வருந்தினான்.

''சக்தி ரொம்ப நல்லவரா இருக்காரு. அபி கிட்ட எப்படியாவது பேசி அவ மனசுல இருக்கறதை தெரிஞ்சிக்கணும். அதான் சக்தியோட வாழ்க்கைக்கும் அபியோட வாழ்க்கைக்கும் நல்லதா அமையும். '' என முடிவெடுத்து அவன் கண்மூட அதற்குள் அபியின் சொந்த ஊரே வந்துவிட்டது.

## 15

நால்வரும் பேருந்தில் இருந்து இறங்கினர். சக்தி அவர்களை ஆட்டோவில் ஏற்றிவிட்டு... ''ஓகே பங்ஷனில் பார்க்கலாம். '' எனக் கூறி வழியனுப்பி வைத்தான். மூவரும் அபியின் வீட்டை அடைந்தனர். தன் பெற்றோரிடமும் சகோதரிகளிடமும் வினோத்தையும் ஸ்வேதாவையும் அறிமுகப்படுத்தியவள், அவர்களையும் இவர்களுக்கு அறிமுப்படுத்தினாள். பயணக் களைப்பு தீர சற்று நேரம் ஓய்வெடுக்கும் படி கூறினார் பாலன்.

ஆனால் வினோத் குளித்துத் தயாராகி வந்து அவர்களுக்கு உதவத் தொடங்கிவிட்டான். அவனைக் கண்டதும் பயந்த சுதா கூட அவன் பணிவான செயல்களால் ஈர்க்கப்பட்டார்.

ஸ்வேதா , ஹர்ஷா , சம்யுத்தா மூவரும் அபியை தயார் படுத்

திக்கொண்டு இருக்க, உறவினர்களும் வர ஆரம்பித்தனர். சின்ன அளவில் தான் நிச்சயத்தை ஏற்பாடு செய்திருந்தனர். மிக நெருங்கிய சொந்தங்களையும் நண்பர்களையும் அழைத்திருக்க அவர்கள் தங்கி இருந்த அப்பார்மெண்ட் மாடியில் நிச்சயதார்த்த விழா ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. வந்தவர்களை வரவேற்கவும் அவர்களை உபசரிக்கவும் பாலனுக்கும் சுதாவுக்கும் உதவினான் வினோத்.

அப்போது சிவரூபன் , மரகதம் மற்றும் தன்யா மூவரும் அங்கே வந்தனர். அவர்களை ஓடிச்சென்று வரவேற்று அழைத்து வந்தனர் மூவரும். அவர்களை அமர வைத்து உபசரிக்க ; மரகதம் ''அபி எங்க? சின்னபிள்ளையில் பார்த்தது. ஒரு வாரமா இவன் கிட்ட கேட்கறேன் அவளைக் கூட்டிவரச் சொல்லி, வேலை இருக்குன்னு சொல்லி தட்டி கழிச்சிட்டான். '' என்றாள்.

''அவளும் ஒண்ணும் குறைசல் இல்ல மரகதம். சிவாவோட தான் வேலை பார்க்கறேன்னு ஒரு வார்த்தை கூடச் சொல்லலே. இந்தப் பிள்ளைங்க சின்னதில் தான் அடிச்சிக்கிட்டு ஆடுச்சுன்னா இப்பவும் அதையே பண்ணுதுங்க. '' என்றார் சுதா அலுப்பாக.

''அதை எல்லாம் அவங்க பேசி தீர்த்துப்பாங்க சுதா. நீயேன் அதைப் பெருசா பார்க்கற. அபியை பார்க்க தங்கச்சியை கூட்டிக் கிட்டு போ. '' என்றார் பாலன்.

அவர்களும் அபியை தேடி செல்ல ''நீங்க தான் அந்தப் பக்கத்து வீட்டில் இருந்தவங்களா ரூபன் ? '' என்ற கேள்வியை ரூபன் காதில் கிசுகிசுப்பாகக் கேட்டான் வினோத். திடுக்கிடலுடன் அவனைத் திரும்பி பார்த்தான் சிவரூபன்.

''அபி ஆபீஸ் வந்த புதுசுல அவங்க தங்கி இருந்த பழைய வீட்டுக்கு போனா. அங்க யாரையோ தேடினா அவங்க இல்லன்னதும் அப்சட்டா தான் இருந்தா. அப்புறம் என்ன நடந்துச்சோ கோபமா மாறிட்டா '' என்று கிசுகிசுத்துவிட்டு பாலனோடு நகர்ந்தான்.

சிவரூபன் சிந்தனையில் மூழ்கினான். ''பழைய வீட்டுக்கு போனாளா ? அப்புறம் ஏன் என்னைத் தெரியாத மாதிரி நடந்துக்கிட்டா ? '' என்ற கேள்வி அவனுக்குத் தலைவலியை கொடுக்கத் தொடங்கியது.

அபியை பார்க்க சென்ற மரகதத்திடம் நடிக்க முடியவில்லை

அபியால், திணறினாள் ''அபி , எப்படி டா இருக்க ? ஏன் டா இத்தனை நாள் என் பையனோட வேலை பார்த்திருக்க இந்த அத்தை பார்க்க வரணும்னு தோணல தானே உனக்கு. எங்களை எல்லாம் மறந்திட்டியா ? '' என்றவர் கேள்விக்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

''அது... அது சரியா நியாபகம் வர..ல.. அத்..த '' என்றாள்.

''எனக்கு நம்பிக்கையில்ல நீ சிவா மேல இருக்கற கோபத்துல. அவனைத் தெரியாத மாதிரி நடந்திருக்கன்னு தான் எனக்குத் தோணுது. என் அபி ரொம்பப் புத்திசாலி. அவ்வளவு சீக்கிரம் எதையும் மறக்க மாட்டா. '' என்றார் மரகதம் தீர்க்கமான குரலில்.

அதற்கு மறுமொழி கூறாமல் அவள் மௌனம் காக்க. ''அவனோட உன் பிரச்சனை எதுவா வேணா இருக்கட்டும். அதை அவனோட நிறுத்திக்கோ. ஊருக்கு வந்ததும் நம்ம வீட்டுக்கு வா உன்னோட நிறையப் பேசணும். '' என்றவர் அவள் கைகளைப் பிடித்த படி நின்றிருந்தார்.

அப்போது கதவு தட்டப்பட சுதா கதவை திறந்தார். ''அத்த மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துட்டாங்க. மாமா உங்களைக் கூப்பிடறாங்க. '' என்றபடியே நின்றிருந்தான் சிவரூபன்.

''தோ போறேன். அம்மாடி அபியை சீக்கிரம் தயார்படுத்துங்க.'' என்றபடி கிளம்பினார்.

சிவரூபன் உள்ளிருந்த தன் அன்னையிடமும் ஸ்வேதாவிடமும், ''தன்யாவை இங்க விடவா ? அங்க தனியா உட்கார்ந்து இருக்காங்க. கூட்டம் வந்தா அவங்க ரெஸ்ட்லெஸ் ஆகிடுவாங்க. '' என்று கேட்டான்.

''ரூபன் அவங்களை இங்க கூட்டிக்கிட்டு வாங்க. இங்க கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்கட்டும். டிராவல் பண்ணி வந்த களைப்பு வேற இருக்கும். கொஞ்ச நேரம் தூங்கலாம் பெட் இருக்கு. '' என்றாள் ஸ்வேதா.

''ஓகே '' என்றவன் தன்யாவை அழைத்து வந்து அங்கே விட்டுச் சென்றான்.

''தன்யா, இங்க உட்காருங்க. '' என்று ஸ்வேதா அவளுக்கு இடம் ஒதுக்கி தர அபியின் முகம் அவளைக் கண்டதும் வாடிப்போனது.

அப்போது ஹர்ஷா ''அத்த இவங்க மதன் மாமாவோட வொய்ப்பா?'' என்று கேட்க, அபியும் திடுக்கிட்டலுடன் மரகதத்தின் முகத்தைப் பார்த்தாள்.

''ஆமாம் டா '' என்றார் மரகதம் கலங்கிய குரலில். அதைக் கேட்டதும் அபிக்கு தலை சுற்றியது.

''இதை எப்படி மறந்தேன். மதன் மாமாவின் மனைவியாக இருக்கலாம் என்று எனக்கு ஏன் தோணவே இல்லை. '' எனத் தனக்குத் தானே கேட்டுக் கொண்டவள் காதுகளில் ஹர்ஷாவில் அடுத்தக் கேள்வி விழுந்தது.

''சுந்தர் மாமாவும் மதன் மாமாவும் வரலையா அத்த ? '' என்று கேட்க. ஸ்வேதா அவளை இடைமறித்தாள்.

''ஹர்ஷா மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துட்டாங்க அக்காவை சீக்கிரம் ரெடி பண்ணுவோம். அப்புறம் பேசிப்போம். '' எனக் கூறி திசை திருப்ப. அபி அதிர்வுடன் இருவரையும் பார்த்தாள்.

மரகதம் , தன்யா இருவரின் கண்களும் கலங்கி இருந்தது. இருவரிடம் மங்கள சின்னங்களைக் காணவில்லை. உடைந்து போனாள் அபி.'' ஐய்யோ என்ன நடந்ததோ தெரியவில்லையே ? சிவாவை கண்டதும் பேசி இருந்தால் இப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலையைத் தவிர்த்திருக்கலாமே ? எத்தனை முறை பேச வந்தான். விரட்டாத குறையாக விரட்டினோமே'' என நினைத்தபடியே அவள் அமர்ந்திருக்க ஸ்வேதா அவளுக்கு அலங்காரம் செய்யத் தொடங்கினாள்.

மரகதம் தன்யாவை பார்த்து.. ''தன்யா நீ இப்படிக் கொஞ்சம் நேரம் படுத்திரு. நான் போய் உனக்குச் சாப்பிட டிபன் எடுத்திட்டு வரேன்.'' என்றுவிட்டு அறையில் இருந்து வெளியேறினார். சுவரோரமாகத் திரும்பி படுத்தவள் கண்கள் நனைந்திருந்தது. அவள் மெல்லிய விசும்பல் கேட்டு அபி ஸ்வேதாவை பார்க்க, அவள் அதைக் கவனியாது போலத் தன் பணியைத் தொடர்ந்தாள்.

சற்று நேரத்தில் அபியை அழைத்து வரும்படி கூற அபி , ஸ்வேதா , ஹர்ஷா மற்றும் சம்யுத்தா நால்வரும் அறையில் இருந்து வெளியேறிறினர்.

விசேஷம் நடக்கும் இடத்தை அடைந்ததும் அபியின் கண்கள்

சிவாவை தேடியது. அவனை எங்கும் காணவில்லை. தவிப்புடன் நின்றிருந்தவளை சபையை வணங்கச் சொல்லி பணித்தார் சுதா. சபையை வணங்கிவிட்டு நின்றிருந்தவளை அமர வைத்து நலங்கிட்டனர் சக்தியின் வீட்டார். அவள் கரங்களில் நிச்சய புடவையைத் தந்தனர்.

''அபிக்கு இந்தப் புடவையைப் போய்க் கட்டி கூட்டிட்டு வாங்கம்மா.'' என்றார் சுதா ஸ்வேதாவை பார்த்து.

தயக்கத்துடன் நடந்தவள் அறையை நோக்கி சென்றாள். அங்கே இருந்த தன்யாவோ உணவை உண்டு விட்டு மரகதத்தோடு விஷேச பகுதி நோக்கி வந்து கொண்டு இருந்தாள். புன்னகையால் அவர்களை எதிர் கொண்டு கடந்த ஸ்வேதாவும் அபியும் அறையை அடைந்தனர்.

''ஸ்வேதா ஒரு ஐஞ்சு நிமிஷம் வெளிய வெய்ட் பண்றீங்களா ? கூப்பிடறேன். '' என்றாள் அபி.

''டைமில்ல அபி ''

''வாஷ் ரூம் போயிட்டு வந்து கூப்பிடறேன். ப்ளீஸ் '' என்றுவிட்டு அறை கதவை சாத்தினாள்.

''சிவா கிட்ட பேசாம அவசரப்பட்டு சக்திக்கு ஓகே சொல்லிட்டேனே இப்ப நான் என்ன பண்ணுவேன் ? '' என்றவள் புலம்ப ஆரம்பிக்கும் முன் மெல்லிய விசும்பல் சத்தம் கேட்டது. திடுக்கிட்டு அறையைச் சுற்றும் முற்றும் பார்த்தாள். அறையில் யாருமில்லை விசும்பல் சத்தத்தைக் கவனித்தவளுக்கு அது பக்கத்து அறையில் இருந்து


# கண்மணி

**கண்மணி தபாலில் பெற ஓராண்டு (உள்நாடு) சந்தா-ரூ.900 6 மாதம்-ரூ.450 மணியார்டர் மற்றும் காசோலை MURASU PUBLICATIONS என்ற பெயரில் அனுப்ப வேண்டிய முகவரி:**

**நிர்வாகி**

**கண்மணி**

**மாலைமுரசு பில்டிங்,**
**246, அண்ணா சாலை,**
**ஆயிரம் விளக்கு,**
**சென்னை-600 006.**

**சந்தா தொகையை NEFT/RTGS மூலம் செலுத்த:-**
**MURASU PUBLICATIONS**
**A/C NO. 6034172999**
**Indian Bank, Peters Road Branch**
**IFSC:IDIB000R047**
**நிர்வாகப்பிரிவு:**
murasupublication@gmail.com
போன்: 044-28297225

வருவது புரிந்தது. இரண்டு அறைக்கும் சிறிய தடுப்பு சுவர் மட்டுமே இருக்கும். பக்கத்து அறையில் பேசுவது தெளிவாகக் கேட்கும். அப்படி அவள் கவனித்துக் கேட்ட சேதி அவளை இன்னும் அதிகமாக உடைந்து போகச் செய்தது.

அவள் கண்கள் குளமாகி ஒவெனக் கதறி அழ தொடங்கும் முன் வெளியே இருந்த ஸ்வேதா கதவை தட்டினாள். ''அபி லேட்டாகுது. அம்மா கூப்பிடறாங்க. கதவை திற. ''

அதைக் கேட்டதும் தன் கை மீறி அனைத்தும் சென்று விட்டதை உணர்ந்த நொடி உலகமே சுற்ற தொடங்கியது. உடல் நடுங்க கதவை திறந்தவள் பொம்மை போலச் சேலையை மாற்றிக்கொள்ள, அவளை அழைத்துக்கொண்டு நடந்தாள் ஸ்வேதா.

சக்தி அபியின் விரலை பிடித்து நிச்சய மோதிரத்தை போட எத்தனிக்க அதிகபடியான உணர்வு போராட்டத்தின் காரணமாக மயங்கி சரிந்தாள் அபிராமி.

நிச்சயதார்த்தம் தடை பட அனைவரும் அதிர்வுடன் அபியை நெருங்கினர். வினோத் அவளைத் தூக்கிக் கொள்ள அருகே இருந்த மருத்துவமனை நோக்கி விரைந்தனர் சக்தியும் சிவாவும்.

## 16

அபியை மருத்துவமனையில் அனுமதித்த மூவரும் மருத்துவரின் வரவுக்காய் காத்திருந்தனர். அதற்குள் அபியின் பெற்றோரும் சக்தியின் பெற்றோரும் அங்கே வந்துவிட்டனர்.

''என்னாச்சுப்பா ? '' என்று சக்தியின் தாய் விஜி கேட்க

''டாக்டர் பார்த்துக்கிட்டு இருக்காங்க அம்மா இன்னும் எதுவும் சொல்லலே. '' என்றான் சக்தி.

''கடவுளே என் பொண்ணுக்கு எதுவும் ஆகக்கூடாது. '' என்ற வேண்டுதலுடன் சுவற்றில் தலை சாய்த்தார் சுதா.

''அத்த... அவளுக்கு ஒண்ணும் ஆகாது. எதுக்கு இப்ப அழறீங்க ? ஒரு வாரமா புதுப் ப்ராஜெக்ட் டென்ஷன் ரெஸ்ட் இல்ல நைட் டிராவல் வேற அதான் மயங்கி இருப்பா பயப்படாதீங்க. ரெஸ்ட் எடுத்தா சரியா போயிடும். '' என்று ஆறுதல் மொழி பேசி அவரைத்

தேற்றினான் சிவரூபன்.

அப்போது மருத்துவரும் வந்துவிட்டார். அனைவரும் அவரை வேகமாகச் சூழ்ந்திட அவரோ புன்னகையுடன் ''அவங்களுக்குப் பயப்படும் படி ஒண்ணுமில்ல. ரெஸ்ட் லெஸ்ஸா இருந்திருக்காங்க. டென்ஷன் அதிகமாகி மயக்கம் வந்திருக்கு. இப்ப அவங்க பல்ஸ் நார்மலா தான் இருக்கு. பயப்படாம அவங்க கிட்ட பேசுங்க. ஏன்னா உங்க பயம் அவங்களை இன்னும் ரெஸ்ட் லெஸ் ஆக்கிடும். இன்னைக்கு ஒருநாள் அப்சர்வேஷனில் இருக்கட்டும். நாளைக்குக் காலையில் டிஸ்சார்ஜ் பண்ணிடலாம். '' என்றார்.

அதன் பிறகு தான் அனைவருக்கும் நிம்மதி பெருமூச்சு வந்தது.

அனைவரும் அபியை சென்று பார்க்க சிவா அங்கிருந்த வராண்டாவிலேயே நின்றுவிட்டான். அதைக் கவனித்த வினோத் அவனை நெருங்கினான்.

''ரூபன் ஆர் யூ ஓகே. '' என்றிட

''எனக்கென்ன ? நான் நல்லாதான் இருக்கேன். '' என்று கூறிவிட்டு அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

''நீங்க வரலையா ? ''

''அவ என்ன நோயாளியா ? எல்லோரும் போய் நலம் விசாரிக்க. ஒரு வாரமா ஒழுங்கா சாப்பிடல அதனால வந்த மயக்கம். இப்ப எல்லோருக்கும் எத்தனை டென்ஷன். சரியான கொழுப்பு. '' என்று அவளை வசைபாடினான்.

''அவ்வளவு அக்கறை இருந்தா நீங்க ஊட்டி விட்டிருக்கலாம்''. என்றான் வினோத் சன்னமான குரலில்.

''என்ன சொன்னீங்க ? ''

''ஒண்ணுமில்ல நான் போய்ப் பார்த்திட்டு வரேன். நீங்க அப்புறம் போய் ஸ்பெஷலா பார்த்துக்கோங்க. '' எனக் கூறி நழுவினான்.

அங்கே கண் விழித்திருந்த அபியை சுற்றி சக்தி , அவனின் தாய் தந்தை அபியின் தாய் தந்தை என்று நின்றிருந்தனர்.

சக்தியின் தாய் விஜி அவளிடம். ''என்னம்மா நீ கொஞ்சம் கவனமா இருக்கறது இல்லையா ? இப்ப பாரு நல்லது நடக்கும் போது இப்படி ஆகிடுச்சு. ஆனா அதுக்காக நீ கவலைப்படாதே. விசேஷத்தை

இன்னொரு நாள் வெச்சிப்போம். அவசர அவசரமா நடந்ததால தான் நீ டென்ஷனாகி இருக்க, கொஞ்சம் உடம்பு சரியாகட்டும், பொறுமையா வெச்சிக்கலாம். என்னைக்கு இருந்தாலும் நீ தான் எங்க மருமக, மனசை போட்டு வருத்திக்காதே. அண்ணி உங்களுக்கும் தான் சொல்றேன். விசேஷம் தடைப்பட்டதை நாலு பேரு நாலு விதமா பேசினாலும் அதைக் காதுல வாங்கிக்காதீங்க. அபியை நல்லா பார்த்துக்கோங்க. '' என்றார்.

அதைக் கேட்ட சுதா உண்மையாகவே மனம் நிறைந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். ''ரொம்ப நன்றி சம்பந்தி. இப்படி ஒரு சூழ்நிலையில் பொண்ணைத் தப்பா நினைக்காம எங்களுக்குத் துணையா நிக்கறீங்க '' என்றார் நெகிழ்ச்சியுடன்.

''சரி அம்மா நாம கிளம்பலாம். அங்க எல்லோரும் பதட்டத்துல இருப்பாங்க. நாம போய்ப் பேசி அவங்களை அனுப்பி வைக்கணும். '' என்று அடுத்து நடக்க வேண்டியதை நினைவுபடுத்தினான் சக்தி.

''ஆமாம் சுதா நாமும் போகணும். இல்லன்னா நம்ம ஆளுங்களே பேசுவாங்க. '' என்றார் பாலன்.

''சிவா.. அபியோட இருப்பா நான் ஹர்ஷாவை அனுப்பி வைக்கறேன்.'' என்று அவனிடம் வேண்டுதல் விடுத்து சென்றார் சுதா. அவனும் அதை மௌனமாக ஏற்று அபி அனுமதிக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்றான்.

அபியை நிமிர்ந்தும் பாராது அமர்ந்திருந்தான் சிவரூபன். அவனிடம் எப்படிப் பேசுவது என்று புரியாமல் தவிப்புடன் அவன் முகத்தையே பார்த்தபடி படுத்திருந்தாள் அபிராமி.

இருவரும் அமைதியாக இருப்பதைப் பார்த்த வினோத். ''நான் போய்க் காபி குடிச்சிட்டு வரேன். '' என்று கூறிவிட்டு வெளியேறினான். வாசலில் நின்று அவர்கள் ஏதாவது பேசுகின்றனரா என்று கவனித்தான். ஆனால் அங்கே மௌனம் மட்டுமே ஆட்சி செய்தது.

வீட்டிற்குச் சென்றவர்கள் அபியின் நிலை குறித்து விவரிக்க ''இதெல்லாம் நாடகம். வேற என்னவோ காரணம் இருக்கு. '' என்று சிலர் முணுமுணுக்க, அதைப் பொருட்படுத்தாது அனைவருக்கும் விருந்து படைத்து உபசரித்து அனுப்பி வைக்கத் துவங்கினர்

இருவீட்டாரும்.

அப்போது சுதா, ஹர்ஷாவை அழைத்து ''ஹர்ஷா சக்தி மாமாவோட போய் அக்கா கூட இருடி. அங்க சிவா மாமாவும் வினோத் அண்ணாவும் இருக்காங்க. '' என்றிட ஹர்ஷா சக்தியோடு மருத்துவமனைக்குக் கிளம்பினாள்.

காரில் செல்கையில் ''அக்காவுக்கு என்னாச்சு மாமா ? '' என்று தயக்கத்துடன் கேட்டாள் ஹர்ஷா.

''பயப்பட ஒண்ணுமில்ல டென்ஷன். அவ்வளவு தான். ''

''உங்களுக்கு அக்காவை ரொம்பப் பிடிக்குமா மாமா ? '' என்றவள் கேட்க சக்தியிடம் மௌனம்.

''ஏன் மாமா அமைதியா இருக்கீங்க ? ''

''எனக்குப் பிடிச்சா போதுமா ? அவங்களுக்குப் பிடிக்க வேண்டாமா?''

''என்ன சொல்றீங்க ? ''

''உங்க அம்மா அவங்களைப் கம்பள் பண்றாங்க. இதுக்கு நானே ஒரு முடிவெடுத்தா தான் சரியா இருக்கும். பிடிக்காம கல்யாணம் நடந்தா நாளைக்குக் கஷ்டப்படப் போறது நாங்க தானே. ''

''அப்படி எதுவும் அவசரப்பட்டுச் சொல்லிடாதீங்க மாமா. ஏன்னா உங்களைப் பிடிக்கலன்னு சொல்றதுக்கு அவளுக்கு என்ன காரணமும் இல்லை. அம்மா அப்பா சரியான ஒருத்தரை தானே தேர்ந்தெடுத்திருக்காங்க. நீங்க ரொம்ப நல்லவரா இருக்கீங்க. அவ உங்களை வேண்டான்னு சொன்னா அது பெரிய முட்டாள்தனமா இருக்கும். நான் அக்கா கிட்ட பேசறேன் கொஞ்சம் டைம் கொடுங்க. ''

அவள் வார்த்தைகளைக் கேட்டவன் மெல்ல சிரித்து ''நான் நல்லவன்னு எதை வெச்சி சொல்லற ? '' என்று கேட்க

''பின்ன நிச்சய நேரத்துல பொண்ணு மயக்கம் போட்டு விழுந்தா மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுக்கு ஆயிரம் சந்தேகம் வரும். பொண்ணைக் கவனிக்காமா சண்டை போடுவாங்க. ஆனா நீங்க உடனே அக்காவை ஹாஸ்பிட்டலைஸ் பண்ணி அவளுக்கு ட்ரீட்மெண்ட் கொடுத்திருக்கீங்க. வீட்டுக்கு வந்து பெருசா ரியாக்ட் பண்ணாமஎல்லோர் கேள்விக்கும் பக்குவமா பதில் தந்து

அவங்க மனசு கோணாம பார்த்துக்கிட்டீங்க. இதுபோதாதா நீங்க நல்லவர்னு புரிஞ்சிக்க. ''

காரை செலுத்திய படியே அவளைத் திரும்பி பார்த்தவன். ''உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா ? '' என்று கேட்க திடுக்கிட்டாள்.

''ஏன்.. ஏன் இப்படிக் கேட்கறீங்க ? '' என்று தடுமாற்றத்துடன் கேட்டு தலை குனிந்தாள்.

''இல்லை என்னை இப்படிப் புரிஞ்சி வெச்சிருக்கியே புரிஞ்சிக்காதவங்களைக் கட்டாயப்படுத்தாம புரிஞ்சிக்கிட்டவங்களுக்கு ஒரு வாய்ப்பு தரலாம்னு தோணுது, அது தப்பா?'' என்று கேட்டு அவள் முகம் பார்த்தான்.

அதற்குள் மருத்துவமனை வந்துவிட ''ஹாஸ்பிட்டல் வந்துடுச்சு ஹர்ஷா '' என்று கூறி அவள் சிந்தனையைக் கலைத்தான்.

அவளும் இறங்கி நடக்க ''நான் சொன்னதை யோசி. உன் பதிலுக்காகக் காத்திருப்பேன்.'' என்று அவள் காதில் கிசுகிசுத்து முன்னேறி நடந்தான்.

அவள் மனம் தவிப்பில் உழல தொடங்கியது. ''அக்காவுக்கு வந்த மாப்பிள்ளையை நான் ஏன் ரசிக்கிறேன். இவரு வேற இப்படிச் சொல்லிட்டு போறாரே. அக்காவோட வாழ்க்கைக்கு நானே இடைஞ்சலா மாறிட்டேனோ ? இப்ப என்ன பண்றது ? '' என்ற சிந்தனையுடன் அவனைத் தொடர்ந்தாள்.

அறை வாசலில் வினோத் நின்றிருப்பதைக் கண்ட சக்தி. வேகமாக எட்டு வைத்து அவனை அணுகினான். ''என்னாச்சு ? ஏன் வெளிய நிக்கறீங்க ? '' என்று கேட்டான்.

''வந்துட்டீங்களா ? அது ஒண்ணுமில்ல சும்மா தான். உள்ளேயே எத்தனை நேரம் இருக்கறது. அதான் '' என்றான் வினோத்.

ஹர்ஷா தயங்கி தயங்கி நிற்க ''உள்ள போம்மா.. '' என்றான் வினோத்.

அவளும் மௌனமாக உள்ளே நுழைந்தாள். கனத்த அமைதியுடன் இருந்த அறையில் அவளின் காலடி சத்தம் கேட்டு நிமிர்ந்தான் சிவா.

''ஹர்ஷா.. வந்துட்டியா ? '' என்று கேட்டவன்.. அவளை நெருங்கினான்.

''சக்தி வரல.. ? '' என்ற கேள்வியோடு அறை வெளியே தேட ''வந்திருக்கேன் '' என்றபடியே உள்ளே நுழைந்தான் சக்தி.

''நல்லது இனி நீங்க பார்த்துக்கோங்க. நான் கிளம்பறேன். '' என்றான் சிவா.

''என்ன ரூபன் ? ஏன் இத்தனை அவசரம் ? '' என்றான் வினோத்.

''தன்யாவை போய்ப் பார்க்கணும். அவங்களுக்கு மாத்திரை மருந்து எல்லாம் கொடுக்கணும். சாயந்திரம் ஊருக்கு வேற கிளம்பணும். இப்ப வீட்டுக்குப் போனா தான் சொல்லிட்டு கிளம்ப சரியா இருக்கும். '' என்று விளக்கினான்.

''அதுவும் சரிதான். உங்க வொய்பையும் கவனிக்கணும். எத்தனை மாசம் ? '' என்று சக்தி கேட்க, அவன் கேள்வியில் அதிர்ந்தான் சிவரூபன்.

''அவங்க ரூபனோட அண்ணி. ''

''ஓ அப்படியா ? உங்களைச் சேர்ந்து பார்த்ததில் அவங்களை உங்க மனைவின்னு நினைச்சுட்டேன். ஸாரி பார் தட். உங்க அண்ணன் வரலையா ? ''

''ஏங்க. கொஞ்சம் அமைதியா இருங்க. கேட்கறது எல்லாமே தப்பாவே இருக்கு. '' என்றாள் ஹர்ஷா கோபமாக.

அவள் அதட்டல் கேட்டு வினோத்தும் ரூபனும் வியக்க, சக்தி ''என்ன தப்பா கேட்டேன். '' என்றான் புரியாமல்.

''அப்புறம் சொல்றேன். '' என்றாள் ஹர்ஷா அழுத்தமாக.

என்ன நடக்குது என்று புரியாமல் வினோத்தும் ரூபனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள அவனோ பார்வையால் என்ன? என்று கேட்டான் அவளிடம். அவளோ முறைப்பாக அமைதியாக இருக்கும் படி கூறினாள். இதை எல்லாம் படுக்கையில் இருந்த படி அபியும் கவனிக்கத் தவறவில்லை. அவள் மனதில் மெல்லிய மகிழ்ச்சி பிறந்தது.

ரூபன் தன் தொண்டையைச் செருமிக் கொண்டு. ''அண்ணனும் அப்பாவும் சமீபத்தில் நடந்த விபத்தில் தவறிட்டாங்க. '' என்றான்.

அதைக் கேட்ட சக்தி ''ஓ.. ஐ ஏம் ஸாரி நான் உங்களைக் கஷ்டப்படுத்த கேட்கல, மன்னிச்சிடுங்க. '' என்றான்.

''இதுக்கு எதுக்கு மன்னிப்பெல்லாம் கேட்கறீங்க சக்தி. உங்களுக்குத் தெரியாது இல்லை தெரிஞ்சிருந்தா கேட்டிருக்க மாட்டீங்களே... விடுங்க. நான் கிளம்பறேன். மேடத்தைப் பார்த்துக்கோங்க. '' என்ற படியே வெளியேறினான். அபியை திரும்பியும் பார்க்கவில்லை.

பார்த்திருந்தால் நின்றிருப்பான். அவள் கண்கள் கலங்கி இருந்தது. ''ஐய்யோ எத்தனை பெரிய துக்கத்தை மனதில் வைத்திருக்கிறான். இதை உணராமல் அவனை புண்படுத்திவிட்டோமே. '' என நினைத்தவள் யாரும் அறியாமல் கண்ணீர் சிந்தினாள்.

''இவரு உங்க சொந்தமா ? '' ஹர்ஷாவிடம் கேட்டான் சக்தி.

''இல்ல. நாங்க சின்னப் பிள்ளையா இருக்கும் போது அப்பா கோவையில் வேலையில் இருந்தாங்க. அப்ப இவங்க எங்க வீட்டுக்குப் பக்கத்தில் இருந்தாங்க. ''

''ஓ ''

''அக்கா எப்பவும் அவங்க வீடே கதியா கிடப்பா. அவங்களோட அக்காவுக்கு நல்ல பழக்கம். இப்ப போனாரே அவரோட எப்பவும் சண்டை போட்டுக்கிட்டே இருப்பா. இவளுக்கு அவருக்கும் நடுவுல நானும் மதன் மாமாவும் தான் மாட்டிக்கிட்டு முழிப்போம். மதன் மாமா ரொம்ப ஸ்வீட்டா பேசுவாரு. அவரு இல்லைங்கறதை என்னால இன்னும் ஏத்துக்க முடியல. '' என்ற ஹர்ஷாவின் கண்கள் கலங்கி இருந்தது.

''ஏய் அழாதே. '' என்ற சக்தி அவளை நெருங்கி அவள் கன்னம் பற்றிக் கண்ணீரை துடைத்துவிட்டான்.

''ரொம்ப நல்லவங்களைக் கடவுளுக்கு ரொம்பப் பிடிக்குமாம். அதனால கூட அவரைக் கடவுள் சீக்கிரம் கூப்பிட்டிருக்கலாம். சரியா ? இப்ப அவங்க குடும்பத்துக்குத் துணையா நாம இருக்கணும். '' என்றான் ஆதரவான குரலில்.

அதைக் கேட்டு பொம்மை போலத் தலையசைத்த படி நின்றிருந்தாள் ஹர்ஷா. ரூபனை வழியனுப்ப சென்றிருந்த வினோத்.. திரும்பும் போது இந்தக் காட்சியைக் கண்டு வாய் பிளந்து நின்றான்.

17

"சக்தி" என்றழைத்து அவர்களைக் கலைத்தான் வினோத். இருவரும் அதிர்ந்து நகர முயல, ஹர்ஷா தடுமாற அவளைத் தாங்கி பிடித்தான் சக்தி. மீண்டும் இருவரும் மோன நிலைக்குச் செல்ல...

"டேய் டேய் போதும் டா. அக்காவோட காலையில் நிச்சயம் பண்ண வந்துட்டு தங்கச்சியோட மதியம் டூயட் பாடறியே ? அதுவும் அக்காவை பக்கத்தில் வெச்சிக்கிட்டே உன்னைப் போய் நல்லவன்னு நினைச்சேன் பாரு என்னைச் சொல்லணும். என்று கோபம் கலந்த சலிப்பில் வினோத் பேச "நம்மைப் பிடிக்காதவங்களைக் கட்டாயப்படுத்தறதை விட நம்மைப் பிடிச்சிருக்குன்னு சொல்றவங்களுக்கு ஓகே சொல்லலாமே. தப்பில்லையே." என்றான் சக்தி தோள்களைக் குலுக்கியபடியே.

"அது சரி. " என்றபடியே அபிராமியை பார்த்தான் வினோத். அவளோ விட்டத்தை வெறித்தபடி அமர்ந்திருந்தாள். அங்கு நடந்ததோ நடப்பதோ அவள் செவிக்குக் கூட எட்டவில்லை.

"எல்லாம் ஒரு மார்க்கமா தான் இருக்கீங்க. இதெல்லாம் எங்க போய் முடியுமோ தெரியல. இந்த விசயத்தை உங்க வீட்டுல எப்படி எடுத்துப்பாங்கன்னு யோசிச்சீங்களா ? "

"அதைப் பத்தி இனிமே தான் யோசிக்கணும். பதிலுக்காகக் காத்திருக்கேன். " என்றபடியே ஹர்ஷாவை பார்த்தான் சக்தி. அவளோ பயம் கலந்த பார்வையை அவன் மேல் படரவிட்டாள்.

"பதில் தான் வந்துடுச்சே. " என்றான் வினோத்.

"ஓகே வா ? " என்று ஹர்ஷாவை கேட்டான் சக்தி.

அவளோ திணறினாள். "அக்காவும் தங்கச்சியும் ஒரே மாதிரி இருக்கீங்க. ஒருத்தி பிடிக்கலன்னு சொல்ல யோசிக்கறா இன்னொருத்தி பிடிச்சிருக்குன்னு சொல்ல யோசிக்கறா ? " என்ற சக்தி "இந்தச் சம்பந்தமே வேண்டான்னு சொல்லிடறேன். அது தான் எல்லோருக்கும் நல்லது. " என்றிட.

"அவசரப்படாதீங்க அக்கா முடிவு என்னன்னு தெரிஞ்சிக்க வேண்டாமா? " என்றாள் தயங்கமாக.

"வா அவளையே கேட்கலாம். " என்ற சக்தி அபியை நோக்கி ஹர்ஷாவை இழுத்துச் சென்றான்.

''அபி.. '' என்றவன் சற்றுச் சத்தமாக அழைக்க, விட்டத்தை வெறித்திருந்தவள் திடுக்கிட்டு திரும்பினாள். எதிரே நின்றிருந்தவனைக் கண்டதும். ''சக்தி இந்தக் கல்யாணம் வேணாம், எனக்கு இதுல இஷ்டமில்ல. எப்படியாவது இதை நிறுத்திடுங்க ப்ளீஸ் '' என்றாள் கெஞ்சலாக.

''அப்ப நிச்சயமா இந்தக்கல்யாணம் வேண்டாம். அப்படிதானே?'' என்று சக்தி இறுதியாகக் கேட்க ''நிச்சயமா வேண்டாம். '' என்றாள் அபிராமி உறுதியாக.

''நீ என்ன சொல்ற ? '' என்று ஹர்ஷாவை பார்த்து சக்தி கேட்க

''அவளை எதுக்குக் கேட்கறீங்க ? இது என் வாழ்க்கை '' என்று இடைப்புகுந்தாள் அபி.

''நாங்க எங்க வாழ்க்கை பத்தி பேசறோம் மிஸ். அபிராமி. நீங்க இதுல தலையிட வேண்டாம். ''

''நான் நல்லவன் தான். ஆனா காதலில் சில தப்பும் சரி தானே. ''

''அடப்பாவி. சரிதான். ஏய் ஹர்ஷா உனக்கு ஓகே வா '' என்று அபி கேட்க சரி என்பதைப் போலத் தலையசைத்தாள் ஹர்ஷா.

அபியை நெருங்கி''அக்கா என்னைத் தப்பா நினைக்காதே. அவரு திடீர்னு அப்படிக் கேட்டதும் எனக்கு... ''

''ஏய் எனக்குச் சந்தோஷம் தான். நல்லவரு நம்மால கஷ்டப்படுவாரேன்னு நினைச்சு வருத்தமா இருந்தது ஆனா உனக்கு அவரைப் பிடிச்சிருக்குன்னு சொன்னதும் நான் செம ஹேப்பி. அம்மா அப்பாவை எப்படிச் சம்மதிக்க வைப்பாரோ தெரியல. என்னால தான் அவருக்கு இந்தச் சங்கடம். '' என்றவள் ஹர்ஷாவின் கைகளை இறுக்கப் பற்றிக்கொண்டாள்.

இருவரும் இருவேறு சிந்தனையில் மூழ்கி இருக்க அபியை வீட்டிற்கு அழைத்துச் செல்ல மருத்துவரின் அனுமதியை வாங்கி வந்தனர் சக்தியும் வினோத்தும். நால்வரும் கிளம்பி வீட்டை அடைந்தனர்.

அபியை கண்டதும் ஓடி வந்த சுதா ''என்னம்மா அதுக்குள்ள வீட்டுக்கு வந்திட்ட, உன்னை இன்னைக்கு அங்கயே இருக்கச் சொன்னாங்களே...'' என்று கேட்டபடியே வினோத்தையும் சக்தியையும் பார்த்தார்.

''அவளுக்குச் சரியாகிடுச்சும்மா அதான் வந்துட்டோம். நீங்க வொரி பண்ணிக்காதீங்க ! '' என்ற வினோத் ''உள்ள போ அபி. ''

என்றிட அவளும் அமைதியாய் உள்ளே சென்றுவிட்டாள்.

''உள்ள வாங்க மாப்பிள்ளை '' என்று சக்தியை அழைத்தார் சுதா.

''அம்மா அப்பா கிளம்பிட்டாங்களா ?'' என்று கேட்ட சக்தி தயக்கமாக நிற்க

''கிளம்பிட்டாங்க மாப்பிள்ளை. நீங்க உள்ள வாங்க காபி குடிச்சிட்டுக் கிளம்புவீங்க''

''இல்ல.... அது '' என்றவன் தயங்கி நிற்க ''வாங்க ரொம்ப யோசிக்காதீங்க.'' என அழைத்துச்சென்றான் வினோத்.

உள்ளே நுழைந்தவர்கள் சோபாவில் அமர, அபி சோகத்துடன் அமர்ந்திருந்தாள். அதைக் கவனித்த வினோத், தன் கண்களால் ரூபனை துளாவ அவர்களைக் காணவில்லை.

''அம்மா ரூபனும் அவங்க பேமலியும் கிளம்பிட்டாங்களா ? '' என்று சுதாவிடம் கேட்டான் வினோத்.

''ஆமாம் தம்பி. நாளைக்கு ஏதோ முக்கியமான வேலை இருக்காமே நீங்களும் இங்க இருக்கறதால சிவா போகணும்னு கிளம்பிட்டான். பாவம் புள்ளதாச்சுப் பொண்ணை இழுத்துக்கிட்டு போகாத குறையா போறாங்க.'' என்ற சுதா அனைவருக்கும் காபி போட அடுப்படி சென்றார்.

சக்தி, ஹர்ஷாவை பார்க்க அடுத்து என்ன நடக்குமோ என்ற தவிப்பில் அவளும் அவனையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள்.

''நான் பார்த்துக்கறேன் '' என்று ஜாடை செய்தான் சக்தி.

வினோத் அபியின் காதில் ''என்ன அபி ரூபன் அதுக்குள்ள கிளம்பிட்டாரு. உங்களுக்கும் அவங்களுக்கும் ரொம்ப வருஷ பழக்கம்னு ஹர்ஷா சொன்னா... நீ முடியாம இருக்கிறதை கூடப் பெருசா எடுத்துக்காம கிளம்பிட்டாரே ? '' என்றான்.

''நாளைக்கு வேலை இருக்கு இல்ல. நான் ஒண்ணும் அத்தனை முடியாம இல்லையே. வாங்க நாமும் கிளம்பலாம். '' என்றுவிட்டு எழுந்து தன்னறைக்குச் சென்றாள். தான் கொண்டு வந்த பையோடு ஹாலை நெருங்கியவளை வியப்பாகப் பார்த்தனர் சுதாவும் பாலனும்.

''எங்க கிளம்பிட்ட ? '' என்று சுதா அதிர்வாகக் கேட்க,

''நான் ஊருக்கு போறேன். வேலை இருக்கு. '' என்றாள்.

''அபி இப்ப தானே ஹாஸ்பிட்டலில் இருந்து வந்த அதுக்குள்ள என்ன அவசரம். சிவா கூட உன்னை நல்லா ரெஸ்ட் எடுத்துக்கச்

சொல்லிட்டு தான் போயிருக்கான். '' என்றார் பாலன் தவிப்பாக.

''இல்லப்பா நான் போகணும். '' என்றாள் அபி பிடிவாதமாக. இதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான் சக்தி, ''ரொம்ப நல்லா இருக்கு அபி. இத்தனை பிடிவாதமா உனக்கு ? ஹாஸ்பிட்டலில் நாங்க சொன்னதைக் கேட்கல, இங்க அத்தை மாமா சொல்றதை கேட்க மாட்டேங்கற யாராவது ஒருத்தருக்காவது அடங்கி நடக்கணும். இப்படி இருந்தா செட்டாகாது. '' என்றான்.

''சைடு கேப்பில் சிக்கர் அடிக்கறானே சரியான கேடி. '' என்று முணுமுணுத்தான் வினோத்.

''மிஸ்டர் செட்டாகலன்னா போங்க, நான் இப்படித் தான். அடங்கிப் போகணுமா ? எதுக்கு ? என்ன தப்புப் பண்ணிட்டேன். வேலைக்குப் போகத் தானே கிளம்பி இருக்கேன். இதுக்கே நீங்க இப்படிச் சொன்னா நாளைக்கு எல்லாத்துக்கும் என்னைக் குறை சொல்வீங்க. உங்களோட மல்லு கட்ட என்னால முடியாது. '' என்று அபியும் அவன் போக்கிற்கு ஈடு கொடுத்து பேசினாள்.

''என்ன மாமா இது ? '' என்றான் சக்தி கோபமாக.

''என் அப்பாவை இப்பவே அதிகாரம் பண்ற உன்னைக் கட்டிக்க என்னால முடியாது. அப்பா அம்மா நான் கிளம்பறேன். '' என்றுவிட்டு வெடு வெடுவென வெளியேற சுதாவும் பாலனும் செய்வதறியாது தவித்து நின்றனர்.

## 18

குதூகலத்துடன் அலுவலகம் கிளம்பும் அபியை வியப்பாகப் பார்த்தாள் ஸ்வேதா. ''எனக்குத் தான் ஒரு மண்ணும் புரிய மாட்டேங்குது. '' என்று முணுமுணுத்தவள் அபியை நெருங்கி ''நேத்து நிச்சயத்தை நீயா நிறுத்தினியா ? இல்ல அதுவா நின்னுச்சா ? '' என்று ஒற்றைப் புருவம் உயர்த்திக் கேட்டாள் ஸ்வேதா.

அவளை மென்னகையுடன் பார்த்த அபி ''இரண்டும் தான்..'' என்று விட்டு நகர்ந்தாள். இருவரும் தயாராகி அலுவலகத்தை அடைய அப்போது சரியாக சிவரூபன் அவ்விடம் வந்துவிட்டான். அபியை கண்டு வியந்து போனான். என்றாலும் அதை வெளிக்காட்டி கொள்ளாமல் அலுவலகத்தின் உள்ளே நுழைந்தான். அபியும் நூல் பிடித்ததைப் போல அவன் பின்னே சென்றாள். ஸ்வேதா புரியாமல்

விழித்தபடி நின்றிருக்க, வினோத் அவளை அணுகினான்.

''இங்கயே நின்னு நேரத்தை கடத்தாம , உள்ள போ ஸ்வேதா. '' என்றவன் குரல் ஸ்வேதாவின் சிந்தனையைக் கலைத்தது.

''வினோத் இங்க என்ன தான் நடக்குது எனக்கு ஒண்ணுமே புரியல ? கொஞ்சம் சொல்லுங்களேன். தெரிஞ்சிக்கலன்னா என் மண்டையே வெடிச்சிடும் போல இருக்கு. '' என்று புலம்பிய ஸ்வேதாவை கண்டு நகைத்தான் வினோத்.

''ஓ கதை அப்படிப் போகுதா ? ''

''ம் ஆமாம். அப்படித்தான் போகுது. '' என்று கிண்டல் அடிக்கும் தோரணையில் வினோத் பேசிட அவன் செய்கையில் தன்னை மறந்து நின்றாள் ஸ்வேதா. அவள் கண்கள் வியப்பில் விரிந்து நிலைகுத்தி தன்னையே பார்ப்பதை பார்த்து வினோத்தும் செயலற்றுப் போனான். சில நிமிடங்கள் இருவரும் மௌனநிலையில் இருக்க... இருவரின் தவத்தைக் கலைப்பதை போல வினோத்தின் கைப்பேசி சிணுங்கியது. உடல் சிலிர்த்து இருவரும் சுயம் அடைந்தனர்.

''ம் போகலாம் ஸ்வேதா. '' என்று திணறலுடன் கூறிவிட்டு வினோத் அலுவலகத்தின் உள்ளே நுழைந்தான். ஸ்வேதாவும் நாணத்தில் சிவந்த முகத்தை விரல்களால் அழுந்த துடைத்துவிட்டு மனதை சமன் செய்து கொண்டு உள்ளே போனாள்.

அபி தன் இருப்பிடத்தில் அமர்ந்து சிவரூபனை இமைக்காமல் பார்த்துக்கொண்டு இருக்க ஸ்வேதா அவளுக்கு எதிரே நின்று சிவரூபனை மறைக்க முயன்றாள். அவளோ ஸ்வேதாவை தள்ளி நகர்த்திவிட்டு மீண்டும் தன் கண்ணைச் சிவரூபன் மேல் நிறுத்தினாள்.

''இது வேலைக்கு ஆகாது. காதல் கிறுக்கு முத்திப்போச்சு போல. '' என்று முணுமுணுத்த ஸ்வேதா தன்னிடத்திற்குப் போய் அமர்ந்தாள்.

சிவா தன்னறையில் இருந்து அபியை கவனித்தான். அவள் சிந்தனை தன் மீதே நிலைத்திருப்பதைக் கண்டு அதிர்ந்தான். என்னாச்சு இவளுக்கு ? ஏன் இப்படி நம்மையே பார்க்கறா ? நேத்து நிச்சயம் நின்னாலும் அவங்க இவளை மருமகளா தானே பார்க்கறாங்க. இவ ஏன் திடீர்னு இப்படி ?'' என்று நினைத்தான் யோசனையில்.

அபியின் பார்வை ரூபன் மேல் நிலைத்திருக்க ரூபன் தன்

கவனத்தைக் கைப்பேசி மேல் வைத்திருந்தான். ஒரு கணம் கூட அவன் பார்வை அவளைத் தீண்டவில்லை. அதனால் அபி மனசோர்வடைந்தாள்.

இதனால் அவனிருந்த இடம் நோக்கி போனாள்.

''உங்கிட்ட கொஞ்சம் பேசணும். ''

''சொல்லுங்க மிஸ். அபிராமி. ''

''ம்ச் இது தனிப்பட்ட விசயம். கொஞ்சம் உங்க கோபத்தை ஒதுக்கி வெச்சிட்டு கேட்க முடியுமா ? ''

''தனிப்பட்ட விசயமா ? என்னோட பேச உங்களுக்கு அப்படி என்ன தனிப்பட்ட விசயம் இருக்கப் போகுது. உங்க வருங்காலக் கணவரோட பேசுங்க மிஸ். அபிராமி. ''

''....''

அவள் மனம் ''சிவா என்னை வார்த்தையால கொல்லாதே. உன்னைப் பார்க்க தான் இந்த ஊருக்கே வந்தேன். ஆனா அன்னைக்குத் தன்யாவோட உன்னைப் பார்த்ததும் அவங்களை உன் மனைவினு நினைச்சிட்டேன். அதான் கோபம். என்னை மறந்திட்ட உன்னை , நானும் மறந்திட்டேன்னு காட்டிக்க அப்படி எல்லாம் நடந்துக்கிட்டேன். ஐயம் சாரி. '' என்று கூறிட துடித்தது.

ஆனால் அதற்குள் சிவாவின் கைப்பேசி அடிக்க அவன் கவனம் அதன் மேல் சென்றதால் தாமதித்தாள்.

அவனோ கைப்பேசி அழைப்பால் பதற்றமானான். ''எப்பம்மா?'' என்றவன் குரல் அதிர்வாக ஒலிக்க அபி துணுக்குற்றாள்.

''சரிமா நீங்க பயப்படாதீங்க. நீங்க தன்யாவோட ஹாஸ்பிட்டல் வந்திடுங்க. நானும் உடனே கிளம்பிடுவேன். நீங்க தன்யா பக்கத்துலயே இருங்க. '' என்று கைப்பேசியின் எதிர்முனையில் இருந்த தாயிடம் அறிவுறுத்திவிட்டு கிளம்பினான்.

''என்னாச்சு சிவா ? நானும் உன் கூட வரேனே. '' என்றாள் அபிராமி.

''இல்ல வேண்டாம். '' என்றவன் அங்கிருந்து நகர முயல ''நானும் வரேன். '' என்று பிடிவாதம் பிடித்தாள் அபிராமி.

''மெடிக்கல் எமர்ஜென்சி. தன்யாவுக்குப் பனிக்குடம் உடைச்சிருச்சாம், நான் போகணும். புரிஞ்சிக்கோங்க. ''

''அதான் நானும் வரேன்னு சொல்றேன். உங்களுக்கு அது ஏன் புரிய மாட்டேங்குது. '' என்று சத்தமிட்டாள் அபி.

''சரி வாங்க '' என்றபடியே நடந்தான் சிவரூபன். தன்யாவை

அறுவைசிகிச்சை அறையில் தன்யா இருக்க, வெளியே காத்திருந்தனர் மரகதம் , சிவா , அபி மூவரும். அவர்களை அணுகிய செவிலியர் அறுவை சிகிச்சை பாரத்தில் சிவாவின் கையொப்பம் கேட்டார்.

''சார் இதுல ஒரு கையெழுத்து போடுங்க. ''

''நானா ? ''

''ஆமாம் நீங்க தானே அவங்களோட கணவர். ''

''இல்ல இல்ல அவங்க என் அண்ணி. ''

''ஓ அப்படியா... ஸாரிங்க. '' என்று தன் வருத்தத்தைத் தெரிவித்த செவிலியர்

''சரி கார்டியன்னு போட்டு நீங்களே கையெழுத்து போடுங்க சார். இல்லன்னா உங்க அம்மாவை போடச்சொல்லுங்க. ''

''ஓகே சிஸ்டர். '' என்றவன் கார்டீயன் என எழுதி தன் கையெழுத்தை போட்டுக் கொடுத்தான். அதைப் பெற்றுக்கொண்டு செவிலியர் நகர்ந்ததும் 'ஸ்' என்ற அலுப்புடன் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான் சிவா.

''எல்லோரும் இவங்களை நம்ம மனைவின்னு நினைக்கறாங்களே, இது தப்பாபோயிடுமே. பேசாம அண்ணியோட அம்மா வீட்டில் பேசி அவங்களோட அண்ணியைச் சேர்த்து வெச்சிடலாமா ? நம்மோடயே இருந்தா நாளைக்கு எல்லோரும் தப்பா பேச ஒரு வாய்ப்பா மாறிடுமோன்னு பயமா இருக்கு. '' என்று அவன் சிந்தனையில் இருக்க, மரகதமோ ''சீக்கிரமா தன்யாவுக்கு ஒரு வாழ்க்கையை அமைச்சி தரணும். இப்படியே விட்டா அவ வாழ்க்கையே வீணா போயிடும். '' என நினைத்தார்.

அபிராமி இருவரும் சோகமாக அமர்ந்திருப்பதைப் பார்த்து அவர்களைத் திசை திரும்பத் தைரியமான வார்த்தைகளை அளிக்கத் தொடங்கினாள்.

''அத்தை பயப்படாதீங்க, தன்யா அக்காவுக்கு எதுவும் ஆகாது. குழந்தையும் அவங்களும் நல்லபடியா வந்திடுவாங்க. '' எனக் கூறி மரகதத்தின் அருகே அமர்ந்தாள்.

அவளைப் பார்த்த மரகதம் ''சரிடா தங்கம். நான் தைரியமா இருக்கேன்.'' எனக் கூறி புன்னகைத்தார்.

''இப்பதான் அழகா இருக்கீங்க. '' என்றாள் அபி.

அவள்தலையைவருடிக்கொடுத்தமரகதம்''ஆமாம்உனக்குஉடம்பு எப்படி இருக்கு ?அதுக்குள்ளஊரில்இருந்துவந்திட்டியா?இன்னிக்கு தான் உன்னை ஹாஸ்பிட்டலில் இருந்தே அனுப்புவாங்கனு சிவா சொன்னான். '' என்று கேட்க'

''அவங்க என்ன அனுப்பறது அத்தை. நானே ஹாஸ்பிட்டலில் இருந்து ஓடி வந்திட்டேன். ஆனா அதுக்குள்ள நீங்க எல்லாம் கௌம்பிட்டீங்க. அதான் உங்களைப் பார்க்க உடனே ஓடி வந்திட்டேன். என்ன அவசரம் ஏன் அதுக்குள்ள கிளம்பினீங்க. அதனால தான் அக்காவுக்கு இப்படிச் சட்டுனு உடம்பு கெட்டு போயிடுச்சு. '' என்று செல்லக் கோபம் கொண்டாள்.

அவளை ரசித்த மரகதம் ''இவனுக்கு இங்க வேலை இருக்குனு கூட்டிக்கிட்டு வந்திட்டான் அபி. ''

''ஆமாம் பொல்லாத வேலை. அதெல்லாம் ஒண்ணுமில்ல அத்த எங்களோட இருக்கப் பிடிக்கல சாருக்கு. '' என்றவள் கடைக் கண்ணால் சிவாவை பார்த்தாள்.

''அப்படி எல்லாம் இல்லடா செல்லம். '' என்ற மரகதம் ''உன் மாமியார் வீட்டுல எல்லோரும் ரொம்ப நல்லவங்களா இருக்காங்க. நீ ரொம்பக் கொடுத்து வெச்சவ. நேத்து சொந்தக்காரங்க தப்புத் தப்பா பேசும் போது கூட உன்னை அவங்க விட்டுத்தரல. அந்தப் பையன் சக்தி கூட ரொம்ப அருமையான பையனா இருக்கான். ஆமாம் திரும்பவும் நிச்சயம் வெக்கப்போறாங்களா ? இல்ல நேரடியாவே கல்யாணம் வெச்சிட்டாங்களா ? '' என்று அபியிடம் வினவினார்.

''அவங்க நல்லவங்க தான். அதனால தான், என் தங்கச்சி ஹர்ஷாவை அவங்க வீட்டுக்கு மருமகளா அனுப்பி வெக்க நாங்க எல்லோரும் முடிவு பண்ணிட்டோம். சக்தி அவங்களோட அம்மா அப்பா கிட்ட பேசி அவங்களைச் சம்மதிக்க வெச்சிடுவாருனு நினைக்கறேன். எப்படியும் சீக்கிரம் சக்தி - ஹர்ஷாவோட நிச்சயம் நடக்கும். நாம எல்லாம் அதுல கலக்கறோம். சரியா ? '' என்று நேற்று நடந்தவற்றைப் புதிராகக் கூற மரகதமும் சிவாவும் அதிர்வுடன் அவளைப் பார்த்தனர்.

அப்போது செவிலியர் வந்து தன்யாவிற்கு ஆண் குழந்தை பிறந்துவிட்டது என்று அறிவிக்க மூவரும் முகம் மலர்ந்தனர்.

19

மறுதினம்... மருத்துவமனையில் தன்யாவுடன் இருந்தவள் சிவா வந்ததும் அவனுடன் பேச வேண்டும் என நினைத்தபடியே அமர்ந்திருந்தாள்.

''என்ன அபி ஒரே யோசனையில் இருக்க ? '' என்று கேட்டு அவள் சிந்தனையைக் கலைத்தாள் தன்யா.

''அதெல்லாம் ஒண்ணுமில்ல தன்யா அக்கா ''

''என்னமோ இருக்கு. கல்யாணத்தை நிறுத்திட்ட, அந்த மாப்பிள்ளையை உன் தங்கச்சிக்கே கட்டி வெக்க சம்மதிச்சிட்ட, இத்தனை நாள் இதே ஊரில் இருந்தும் சிவாவை தெரியாத மாதிரி இருந்த... ஆனா இப்ப நாலு நாளா இங்கையே கெடையா கெடக்க' இதெல்லாம் ஏதோ ஒரு இடத்தில் இணையற மாதிரி இருக்கு. '' என்று தன்யா கூற'

''போங்க அக்கா கிண்டல் பண்றீங்க. என் நிலைமை உங்களுக்கு எப்படித் தெரியும். '' என்றபடியே அங்கிருந்து எழுந்து போனாள். அப்போது சிவாவும் மரகதமும் வந்துவிட, அறை வாசலில் அவன் மீது மோதி நின்றாள்.

''கண்ணு தெரியலையா ? பாத்து வர மாட்டியா ? இந்நேரம் எல்லாம் கொட்டி இருக்கும். '' என்று சத்தமிட்டான் சிவா.

''ஏன்டா கத்தற ? அவளோட சண்டை போடறதே உனக்குப் பொழப்பா போயிடுச்சு. சின்னபுள்ளையில் தான் வம்பிழுத்தன்னா... ஏழு கழுதை வயசாகியும் இன்னும் இப்படியே இருக்க. கொடு அதை '' என்று திட்டிய மரகதம் அவன் கையில் இருந்த உணவு கூடையை வாங்கிக் கொண்டு உள்ளே போனார்.

அபி சிவாவையே பார்த்த வண்ணம் நின்றிருக்க' அவன் ''அம்மா நான் வெளிய இருக்கேன். '' என்றுவிட்டுச் சென்றான்.

''அத்தை நான் கீழ போயிட்டு வந்திடறேன். '' என்ற அபியிடம் ''சாப்பிட்டு போடா அபி '' என்றார் மரகதம்.

''முதலில் அக்காவுக்குக் கொடுங்க. நான் வந்து சாப்பிடறேன்.'' என்றுவிட்டு வெளியேறினாள்.

சிவா சற்றுத் தொலைவில் நின்றிருப்பதைக் கண்டு அவனை நோக்கி போனாள்.

''சிவா '' என்றவள் அழைப்புக்குப் பதில் கூறாமல் அங்கிருந்த

மரக்கிளை மேல் பார்வையை நிலை நிறுத்தி நின்றிருந்தான் சிவரூபன்.

''சிவா இப்ப எனக்கு மெச்சூரிட்டி வந்திடுச்சா ? இப்ப நான் சொல்றது சின்னப் பிள்ள தனமா இருக்காதே. என்னை இப்பவாவது நம்புவியா ? '' என்றவள் கேட்க அப்போதும் அவனிடம் மௌனம்.

மறுநாள் சிவரூபன் தன் அன்னை மரகதத்திடம் தன்யாவிற்குத் திருமணம் செய்வது குறித்துப் பேசினான்.

''அம்மா உங்ககிட்ட கொஞ்சம் பேசணும். ''

''நானும் உன்னோட பேசணும்னு நினைச்சிக்கிட்டு தான் இருந்தேன். நீ வேலையா இருந்ததால பேச முடியல. இப்ப நீயே பேச வந்தது நல்லதா போச்சு. வா மாடிக்குப் போய்ப் பேசலாம்.'' என்ற மரகதம் மொட்டை மாடி நோக்கி சென்றார். அவரைத் தொடர்ந்தான் சிவரூபன்.

''நீங்க முதலில் சொல்லுங்கமா. '' என்றான் சிவா.

அவர் தொடர்ந்தார். ''என்னடா அம்மா இப்படிச் சொல்றேன்னு யோசிக்காதே. தன்யாவுக்கும் அவ குழந்தைக்கு நாம தானே பாதுகாப்பு தரணும். அவ குழந்தை நம்ம மதனோட வாரிசு. வேற யார் தன்யாவை கட்டிக்கிட்டாலும் குழந்தையை அந்நியமா தான் பார்ப்பாங்க, நீயே கட்டிக்கிட்டா ''

''அம்மா குழந்தையை நானே கூட வளர்த்துக்கறேன். ஆனா அண்ணியை என்னால என் மனைவியா பார்க்க முடியாது. இதைப் பத்தி மேல பேசாதீங்க. அவங்களுக்கு நல்ல வாழ்க்கை அமைச்சி தர நான் தயாரா இருக்கேன், ஆனா ''

''அம்மா வயசு முக்கியமில்ல. என்னால இது முடியாது. ''

''நம்ம குடும்பத்தை நம்பி வந்த பொண்ணு அவளை எப்படி இன்னொருத்தனுக்கு ''

''அம்மா ஒருவேளை எனக்கு இப்ப கல்யாணம் ஆகி இருந்தாலும் இதையே சொல்லுவீங்களா ? '' என்று சிவா கோபமாகக் கேட்க.

''சிவா ''

''என் மனசுல ஒரு பொண்ணு இருக்கா. எனக்காவே காத்திருக்கா, இன்னும் எத்தனை நாள் வேணும்னாலும் காத்திருப்பா... ஆனா இப்ப இதை நான் செஞ்சிட்டா அவ செத்திடுவா. ''

''என்னடா சொல்ற ? ''

''...''

கொஞ்ச நேரம் மௌனம் காத்தார் மரகதம். ''சரி தன்யாவை பேசி சம்மதிக்க வைப்போம். அவளுக்கு மாப்பிள்ளை பாரு. '' என்றார்.

''ம் நீங்களே தன்யாகிட்ட பேசுங்க.'' என்றுவிட்டு வெடுவெடுவெனக் கீழே போனான்.

மாடிப்படி அருகே கையில் குழந்தையுடன் தன்யா நின்றிருந்தாள். அவள் கண்கள் கலங்கி முகம் சோர்ந்து இருந்தது.

''நான் உங்க வாழ்க்கைக்கு இடைஞ்சலா இருக்க விரும்பல சிவா. என்னை ஏதாவது ஆசிரமத்தில் சேர்த்துவிட்டுடுங்க. அதுக்காக இன்னொரு கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி கட்டாயப்படுத்தாதீங்க. என் புருஷன்வேணா செத்துப் போயிருக்கலாம். ஆனா எங்க காதல் சொத்துப்போகல. '' எனக் கூறியவள் தன்னறைக்கு ஓடினாள்.

சிவா திரும்பி தன் அன்னையைப் பார்க்க, அவரோ கைகளைப் பிசைந்தபடி தவிப்புடன் அவனை நெருங்கினார். சிவா சுவரில் சாய்ந்து சோர்வுடன் நின்று ''இவங்க இப்படிப் பேசறாங்களே எப்படிமா சம்மதிக்க வெக்கறது ? '' என்றான்.

அவன் தலையை வருடிக்கொடுத்த மரகதம் ''யாருடா அந்தப் பொண்ணு ?'' என்று கேட்க,

''அப்புறம் சொல்றேன். ''

''ஏன்டா அண்ணனும் தம்பியும் எனக்குப் பொண்ணு பார்க்கற உரிமையைத்தான் தரல... பொண்ணு யாருன்னு முன்னாடியே தெரிஞ்சிக்கக் கூட உரிமை இல்லையா. தாலி கட்டி கூடி வரும்போது தான் நான் தெரிஞ்சிக்கணுமா ? '' என்று சலிப்புடன் கேட்டார் மரகதம்.

''சஸ்பென்ஸ் எல்லாம் ஒண்ணுமில்ல... அபிதான். அவங்க வீட்டில் என்னை மருமகனா ஏத்துக்குவாங்களான்னு எனக்கொரு சந்தேகம். அவங்களோட பேசிட்டு.. உன்கிட்ட சொல்லாம்னு நினைச்சேன். ''

''நிஜமாவா சொல்ற. அபியை நீ விரும்பறியா ? என்னால நம்பவே முடியல. நானே அண்ணன் கிட்ட பேசறேன். நீ கவலைப்படாதே....'' என்று பூரிப்புடன் கூறிய மரகதம் கீழே ஓடினார். குழந்தை அழுதுகொண்டு இருக்க, தன்யா அதைக்

கவனிக்காமல் மூலையில் உட்கார்ந்து மதன் புகைப்படத்தைக் கட்டிக் கொண்டு அழுத வண்ணம் இருந்தாள்.

அதைக் கவனித்த மரகதம் குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டு அவளை நெருங்கினார். ''தன்யா அழுது உடம்பை கெடுத்துக்காதே. உனக்கு இஷ்டமில்லாத வாழ்க்கையை நாங்க அமைச்சி தர மாட்டோம். முன்னாடி நீ என் மருமகளா இருந்திருக்கலாம். ஆனா இப்ப நீ என் மகள். உன்னை இப்படியே கிடன்னு என்னால விடமுடியாது. என்னை உன் அம்மாவா ஏத்துக்கிட்டா. குழந்தையை வாங்கு. இல்ல மாமியாரா பார்த்தா அந்தப் போட்டோவோட குடும்பம் நடத்து. '' எனக் கூறிவிட்டு நின்றார்.

தன்யா அவரையே பார்த்தாள். அவளுக்கு இப்போது ஒரு தாயின் துணை அவசியம் தேவை. தன்னை மகளாக பார்க்கும் அவரைக் காயப்படுத்த விரும்பாமல் குழந்தையை வாங்கினாள்.

*****

**ஓர் ஆண்டு கழித்து** தன்யா மணக்கோலத்தில் மணவறையில் அமர்ந்திருக்க, சிவா பார்த்த மாப்பிள்ளை சஞ்சை அவள் கழுத்தில் பொன்நாண் பூட்டினான். மரகதம் நிறைந்த மனதுடன் அவர்களை வாழ்த்த குழந்தை மதன்கிஷோர் தன் தாயின் மடியில் அமர்ந்திருந்தான்.

''எங்க பொண்ணை உங்களை நம்பி கொடுத்திருக்கோம் நல்லபடியா பார்த்துக்கோங்க. '' என்று மரகதம் சஞ்சையின் தாயிடம் கூற ''இன்னையில் இருந்து அவ எங்களுக்கும் பொண்ணு தான். எனக்கும் அவ கஷ்டம் புரியும். கவலைப்படாதீங்க என் மகன் இந்த முடிவை என்னைப் பார்த்து நான் அனுபவிச்ச கஷ்டங்களைப் பார்த்து தான் எடுத்தான். அதனால தன்யாவையும் மதனையும் நல்லபடியா பார்த்துப்பான். '' என்று உறுதியளித்தார் கண்ணம்மா.

அடுத்து வந்த முகூர்த்தத்தில் அபிராமி - சிவரூபன் திருமணமும் ; ஹர்ஷா - சக்தி திருமணமும் நடந்தது. அடுத்து வந்த முகூர்த்தத்தில் வினோத் - ஸ்வேதா திருமணமும் நடக்க, அனைவரும் தங்கள் மணவாழ்க்கையை இனிமையாகத் தொடங்கினர்.

**(முற்றும்)**


# என்னைப் பற்றி

எழுதும் ஆர்வம் பிறப்பதற்கு முன்னே, நான் ஒரு மிகச்சிறந்த வாசகி. எனது அம்மா என்னை படிக்கத் தூண்டினார் ; எனது கணவர் என்னை எழுதத் தூண்டினார். மூன்று ஆண்டுகளாக வலைத்தளங்களில் மட்டுமே டிஜிட்டலாக வலம் வந்த என் சிந்தனைகள்...முதன் முறையாக, வாசகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்து இருக்கும் கண்மணி மூலம் அச்சு பதிப்பாக வெகுஜன மக்களிடையே வந்து சேர்ந்து இருப்பது மகிழ்ச்சியை தருகிறது...

தற்போதைய கால சூழ்நிலையில் சமுதாயம் மற்றும் குடும்பத்தில் நடக்கும் சிறுசிறு சிக்கல்களுக்கு என்னால் இயன்ற தீர்வுகளுடன் கதைக்களங்களை வடிமைத்து எழுதிக் கொண்டிருக்கிறேன். வாசகர்களின் அன்பு மற்றும் அரவணைப்பு என்னை மென்மேலும் பொறுப்புடன் எழுதத் தூண்டும்

**கதை சுருக்கம் :-**

பதின் பருவத்தில் மலரும் காதல், அதை ஈர்ப்பு என நினைத்து ஒதுங்கும் காதலன். அவனின் உணர்வுக்கு மதிப்பளித்து விலகும் நாயகி. ஈர்ப்பு அல்ல உண்மைக் காதல் தான் என பருவம் வந்ததும் நாயகனைத் தேடி வரும் நாயகி, நாயகனின் சூழ்நிலையால் அவனை தவறாக புரிந்து கொள்கிறாள். உண்மையை உணர்ந்து இருவரும் இணைவார்களா... இல்லையா? என்பதே கதைக் களம்.



–சுஜாதா நடராஜன்



தமிழ் (ஈழத்)
தலைவன் கதை -14

எந்த இயக்கத்துக்கும் பெயர், சின்னம், கொடி, கொள்கை, முத்திரை வாசகம் முக்கியம். விடுதலைப் புலிகள் கொடி, சின்னம், சீருடை ஆகியவை உருவான வரலாறு வித்தியாசமானது.

தமிழ்மூவேந்தர்களில் முதன்மையானவரும், ஈழத்துக்கு நெருக்கமான நிலப்பரப்பை கொண்டவருமான பாண்டியரின் மீன் கொடி தமிழர்களின் பழமையான கொடி.



# புலி கொடி தேடி தமிழகம் வந்த பிரபாகரன்...

அதைவிட்டு விட்டு புலிக்கொடியை தேர்ந்தெடுக்க காரணம என்ன?

பாண்டியர்கள் சிங்களர்களை வெற்றிகொண்ட வரலாறும் உண்டு. அங்கிருந்து சிங்கள கைதிகளை கொண்டு வைகை கால்வாய் புனரமைப்புக்கும் பயன்படுத்தியுள்ளனர். ஆனாலும், மிக கடைசி காலகட்டம் வரை சோழர்களே இலங்கையை வெற்றிகொண்டனர். மேலும், புலிப்பாய்ச்சலே ஒரு விடுதலை இயக்கத்தின் இயங்கியல் தத்துவ அடையாளமாக இருக்கமுடியும் என்பதால் அதை தேர்ந்தெடுத்தனர்.

தமிழரின் ஆதி நாகரீகமான சிந்து நாகரீகத்திலேயே புலிக்கென முக்கிய இடம் இருக்கிறது. அதன் தொடர்ச்சியாகத்தான் சோழர்கள் புலிக்கொடியை தங்களுடையதாக ஆக்கிக்கொண்டனர். இமயத்தில் கரிகால் சோழனும், இலங்கையில் ராஜராஜ சோழனும் புலிக்கொடியை பறக்கவிட்டனர். இதனால் சிங்களர்கள் தமிழர்களை இன்றளவும் புலி (கொட்டியா) எனவே அழைக்கின்றனர்.

விடுதலை புலிகள் இயக்கம் உருவான பின்பு தமிழ்நாட்டுக்கு வந்த பிரபாகரன்,




இயக்கத்துக்கான அச்சு வேலை தொடர்பாக சிவகாசி சென்றபோது அங்கிருந்த ஓவியர் நடராஜனைப்பற்றி அறிந்தார். விருதுநகர் அருகே மல்லாங்கிணற்றை சேர்ந்த நடராஜனிடம் நண்பர் மாறன் மூலம் அறிமுகமானார்.

பேபியும் பிரபாகரனும் மாறனுடன் நடராஜனை சந்தித்தனர். அவரிடம் இயக்கத்தின் கொடி, சின்னம் பற்றிய தனது எண்ணத்தை பிரபாகரன் எடுத்துரைத்தார். ''சிவகாசி பட்டாசு லேபிள்களில் வரையப்பட்டிருந்த புலிப்படங்கள் சிலவற்றைப் பார்த்தோம். எங்களுக்குப் பிடிக்கவில்லை. புலி என்றால் சீறவேண்டும். புலியின் முகத்தில் சீற்றம் பூரணமாக வெளிப்பட வேண்டும். இப்படி ஒரு படத்துக்காக பல இடங்களில் பல நாட்கள் அலைந்துவிட்டோம். எதுவும் மனநிறைவாக இல்லை.

பிறகுதான் உங்களைப் பற்றி கேள்விப்பட்டு இங்கு வந்திருக்கிறோம்'' என்றார்.

இதையடுத்து நேர்முகமாக சீறும் புலியின் முகத்தை படமாக்கி அவர்களிடம் நடராஜன் காட்டினார். அதைச்சுற்றி வளையம் அமைத்து, ' வளையத்தைத் தாண்டி வெளியே வருவதுபோல் புலிகளின் நகங்கள் விரிந்த கால்கள் இருந்தால் நன்றாக இருக்கும்' என்று தனது அபிப்பிராயத்தையும் வெளிப்படுத்தினார்.

அதையடுத்து வளைவை மூன்றாகப் பிரித்து, ஒவ்வொன்றிலும் 11 தோட்டாக்கள் என 33 தோட்டாக்களை வரைந்தார். அவர்களின் விருப்பப்படியே நுனியில் குத்துக்கத்தி உள்ள இரண்டு துப்பாக்கிகள் ஒன்றுக்கொன்று குறுக்காக வளைவின் பின்புறம் இருக்கும்படி வரைந்தார். அந்தச் சின்னத்துக்கு பிளாக் எடுத்துக் கொடுத்ததோடு, புலிச்சின்னம் பொறித்த லெட்டர்பேடு, அடையாள அட்டைகள் அச்சடித்தும் கொடுத்தார் நடராஜன்.

ஈழத்தில் ஆட்சி செய்து காலனித்துவ அரசால் கொல்லப்பட்ட வண்டார வன்னியன் கேடயத்தின் குறுக்காக வைக்கப்பட்டிருந்த வாட்களை தனது அடையாளமாக வைத்திருந்தான். அதன் நினைவாகவே குறுக்காக இரு துப்பாக்கிகள். சுற்றிலும் தோட்டாக்கள். இக்கொடியில் மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய நான்கு நிறங்கள் உள்ளன.

இலங்கையின் வடக்கு கிழக்கு இணைந்த தமிழர்களின் தாயகப் பிரதேசமான தமிழ் ஈழத்தின் தேசியக் கொடி பிரபாகரனால் 1990ஆம்

**'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் 'என்ற வாக்கியம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசிய குறிக்கோள் ஆக (முத்திரை வாசகம், கொள்கை முழக்கம்) இருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் முக்கிய ஆவனங்களிலும் உரையிலும் இது குறிப்பிடப்பட்டது. இதுவே, பின்னர் ஏகோபித்த அனைத்து நாட்டுத்தமிழர்களின் விருப்பமாக ஆனதால், 'தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம்' என மாற்றமடைந்தது.**

ஆண்டு நவம்பர் 21ஆம்தேதி அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து உலகெங்கும் புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் தாம் வாழும் நாடுகளில், தமது இன மற்றும் தேசிய அடையாளத்தை வெளிப்படுத்தவும், தமது எழுச்சியை வெளிப்படுத்தவும் இக்கொடியை ஏற்றும் வழக்கம் தொடர்ந்தது.

இன்றளவும் புலிக்கொடியை ஈழத்தமிழர்கள் தாங்கள் வாழும் இடங்கள் தோறும் பறக்கவிடுகின்றனர்.

**1978** வைகாசி 19ஆம் நாள் 'தமிழீழ விடுதலைப் புலிகள் தடைச்சட்டம்' இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அது விடுதலைப் போராளிகளை அழிப்பதற்கு இலங்கை ஆயுதப் படைகளுக்கு அனைத்து அதிகாரங்களையும் வழங்கியது. அத்தோடு நிற்கவில்லை. விடுதலை இயக்கத்தினரின் உணர்ச்சிகளை உசுப்பும் வகையில் 1978 ஆவணி 7ஆம்நாள் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஐ.தே.க. அரசு புதிய அரசியலமைப்பை உருவாக்கி, தமிழ் மொழியை இரண்டாம் நிலைக்குத் தள்ளியது.

1979 ஆடி 20ஆம்நாள் விடுதலைப்புலிகள் தடைச்சட்டத்திற்கு ஏதுவான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை கொண்டுவந்தது. இச்சட்டத்தின் மூலம் ஒருவரை 18 மாதகாலத்திற்கு சிறையில் அடைக்கமுடியும். இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தை கொண்டுவந்த அதேதினம், இலங்கை வடக்கில் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி 1979 மார்கழி 31ஆம் நாளுக்கு முன் பயங்கரவாதத்தை அழித்து ஒழிக்குமாறு பிரிகேடியர் வீரதுங்காவை வட மாகாணத்து

**கடந்த 2011 இறுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் படம், தமிழீழ வரைபடம், விடுதலைப்புலிகளின் மலரான கார்த்திகைப்பூ (செங்காந்தள்) மற்றும் விடுதலைப்புலிகளின் சின்னம் ஆகியவை பிரான்ஸ் நாட்டு தபால் துறை அங்கீகாரத்துடன் வெளியிடப்பட்டது. கனடாவிலும் அந்த அரசின் தபால் துறை அங்கீகாரத்துடன் விடுதலை புலிகள் சின்ன அஞ்சல் வில்லைகள் வெளியிடப்பட்டன.**

க்கு ஜெயவர்த்தனே அனுப்பினார்.

இவ்வாறாக, விடுதலை இயக்கங்களை ஒடுக்குவது என்ற பெயரில் அப்பாவி மக்களை வேட்டையாடும் வாய்ப்பை ராணுவத்துக்கு அரசு வழங்கியது. இச்சூழலில் ஆயுதப் போராட்டத்தையும் அரசியல் போராட்டத்தையும் பலப்படுத்த அரசியல் பிரிவை விரிவு படுத்த பிரபாகரன் நினைத்தார். அதற்காக கோட்பாடுகளுடன் கூடிய அரசியல் திட்டத்தை தீட்டினார்.

இலங்கையில் அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் விடுதலை புலிகள் அமைப்பு நட்புணர்வு பேணியது. சர்வதேச ரீதியில் தமழீழ விடுதலைப் புலிகளின் கிளைகளை நிறுவி, அந்தந்த தேசங்களின் முற்போக்கு அமைப்புகளுடன் நல்லுறவு கொள்ளவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்த சூழலில் 1977 அளவில் கொழும்பு இளைஞர் பேரவையின் செயலாளரும் நில அளவையாளருமான


அமிர்தலிங்கம்

உமா மகேஸ்வரனின் தொடர்பு இயக்கத்துக்கு ஏற்படுகிறது. இதையடுத்து உமா மகேஸ்வரன் பிரபாகரனை யாழ்ப்பாணத்தில் சந்தித்தார். அதுமுதல் உமா மகேஸ்வரனும் முகுந்தன் என்ற இயக்கப் புனை பெயரோடு தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டார். பின்பு மத்திய குழு தலைவராகவும் ஆனார்.

உமா மகேஸ்வரன் அரசியல் நடவடிக்கைகளோடு, யுத்த நடவடிக்கைகளிலும் சிறந்து விளங்கினார். அத்துடன் புலம்பெயர்ந்த தமிழர்களுடனும் நல்ல தொடர்பில் இருந்தார். அதனால் அவருக்கு விடுதலை புலிகள் இயக்கத்தில் மிகுந்த முக்கியத்துவம் இருந்தது. உமா மகேஸ்வரனின் அறிவையும் திறமையையும் கருதி, பிரபாகரன் அவரை தலைவராக்கிவிட்டு, இராணுவப் பிரிவுத் தலைமையை மட்டும் தான் வகித்துவந்தார்.

**(தொடரும்)**

**வரிப்பையூரான்**




**போ**லியான உறவுகளால் நம்பிக்கை துரோகத்திற்கு ஆளாகும் நாயகன், முகமூடிகளுக்கு பின்னால் உள்ள முகத்தை அறிந்து கொள்ளும் முயற்சியே 'நடுவண்'.

கொடைக்கானலில் கார்த்திக்கும் (பரத்), அவனது நண்பன் சிவாவும் (கோகுல் ஆனந்த்) சேர்ந்து டீ தூள் தயாரிக்கும் தொழிற்சாலை நடத்துகின்றனர். இன்வஸ்ட்மெண்ட் மட்டும் செய்து விட்டு கம்பெனி வளர்ச்சியில் இன்ட்ரஸ்ட் காட்டாமல் சதா குடியும், கூத்துமாக இருக்கிறான் சிவா. மாறாக, குடும்பத்தைக் கூட கவனிக்காமல் சதா வேலையைக் கட்டிக் கொண்டு அலைகிறான் கார்த்திக்.

தன் குடும்பத்தை விட்டுவிட்டு கார்த்திக் மட்டுமே துணையென நம்பி வந்தவள் மது. அவர்கள் காதலுக்கு பரிசாக குழந்தை கவி இருக்கிறாள். ஆனால் பிசினஸ் பிஸியில் தன்னைக் கண்டு கொள்ளாத கணவன் மீது மதுவுக்கு வருத்தம்.

'யாருக்காக சம்பாதிக்குறேன் எல்லாம் உங்களுக்காக தானே' என்கிறான் கார்த்திக்.

ஊரில் தறுதலையாய் சுற்றித் திரிந்த சொந்தக்கார பையன் குருவுக்கு தன் கம்பெனியில் ஒரு வேலை போட்டுக் கொடுத்து அவுட் ஹவுஸில் தங்க வைக்கிறான் கார்த்திக்.

**பி**ளாஷ்பேக்கில், திருமணமான சில வருடங்களில் கார்த்திக் - மது இடையே சண்டை வரும் போதெல்லாம் பேமிலி பிரண்ட் என்ற முறையில் சமாதானம் செய்ய வருகிறான் சிவா. பரிமாற வந்தவன் பந்தியில் கை நனைத்து விடுகிறான்.

தனக்கு தேவையான அன்பும், ஆறுதலும் அவனிடம் கிடைக்க,

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| பரத் | ● | ● | ○ | ○ | ○ |
| அபர்ணா | ● | ● | ○ | ○ | ○ |
| கதை | ● | ● | ○ | ○ | ○ |
| திரைக்கதை | ● | ● | ○ | ○ | ○ |
| இயக்கம் | ● | ● | ○ | ○ | ○ |
| ஒளிப்பதிவு | ● | ● | ○ | ○ | ○ |
| இசை | ● | ● | ○ | ○ | ○ |
| மொத்தத்தில் | ✸ | ✸ | ☆ | ☆ | ☆ |

சிவாவுடன் தவறான உறவுக்கு உடன்படுகிறாள் மது.

கார்த்திக் வெளியூர் செல்லும் போதெல்லாம் சிவா அவன் வீட்டில் தஞ்சம் அடைகிறான். இந்த விஷயம் குருவுக்கு தெரிந்ததால், கள்ள உறவு கசிந்து விடக் கூடாதென்று பேக்டரியில் அவனை ஆள் வைத்து அடிக்கிறான் சிவா.

இனியும் அந்த வீட்டில் இருந்தால் விபரீதமாகி விடும் என்று நினைக்கும் குரு, பேக்டரி நண்பனின் பர்த்டே பார்ட்டியை கொண்டாடி விட்டு அப்படியே ஊருக்கு கிளம்பி விட நினைக்கிறான். புறப்படும் முன்பு, மனைவியின் கள்ள உறவு பற்றி கார்த்திக் டேபிளில் கடிதம் எழுதி வைக்கிறான். ஆனால், நண்பர்களுடன் போன குரு, ஒரு விபத்தில் சிக்கி கொலை கேஸில் மாட்டுகிறான்.

செத்துப் போனவன் அனாதை என்பதால், 'ரூ.10 லட்சம் கொடுத்தா உங்க நாலு பேரையும் விட்டுடுறேன்' என்று பேரம் பேசுகிறது போலீஸ். அந்த பணத்திற்காக கார்த்திக் வீட்டிலேயே கை வைக்கப் பார்க்கிறார்கள் பேக்டரி பாய்ஸ்.

மறுபுறம், சாக்லேட் பேக்டரி ஓபனிங் நிகழ்வில் குழந்தையை கவனிக்காமல் திருட்டுத் தனமாக சிவாவை பார்க்கப் போகிறாள் மது. அன்று மதுவின் மகளுக்கு ஆக்சிடெண்ட் ஆகி கால் முறிவு ஏற்படுகிறது.

குரு எழுதி வைத்த கடிதத்தை பார்த்து அதிர்ச்சியாகும் கார்த்திக், தன் மனைவியை நோட்டமிட்டு உண்மையை தெரிந்து கொண்டதுடன், இருவரையும் கையும் களவுமாக பிடித்து கொல்ல நினைக்கிறான்.

மறுபுறம், மகளுக்கு ஆக்சிடெண்ட் ஆன பிறகு தனக்கு இணங்க மறுக்கும் மதுவை மடக்க, கார்த்திக்கை கொலை செய்ய பிளான் போடுகிறான் சிவா.

இறுதியில் யாருக்கு என்ன நடந்தது? கார்த்திக் தன் மனைவியை என்ன செய்தான்? போன்ற கேள்விகளுக்கு திரில் மோடில் விடை சொல்கிறது மீதிக்கதை.

யதார்த்தம் மீறாத சராசரி குடும்பத் தலைவனாக,



ஏமாற்றத்தை சந்திக்கும் அப்பாவி கணவனாக பரத், நடித்துள்ளார்.

அவரது மனைவியாக வரும் அபர்ணா வினோத் குற்ற உணர்ச்சியில் தவிக்கும் காட்சியில் மனதில் நிற்கிறார்.

மாற்றான் மனைவிக்காக நம்பிக்கைத் துரோகம் செய்யும் நண்பனாக கோகுல் ஆனந்த் வில்லத்தனத்தில் தேறுகிறார்.

உறவுக்கார பையனாக வரும் அருவி பாலா மற்றும் அவனுடைய பேக்டரி நண்பர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தனி டிராக்கில் கதை நகர்த்தியது படத்தை டயர்ட்டாக்குகிறது.

இசையமைப்பாளர் தரண் குமார் இசையில் கூடுதல் கவனம் செலுத்தியிருக்கலாம்.

ஒளிப்பதிவாளர் யுவாவின் கேமரா கோணங்கள் மற்றும் கலர்டோன், ஓகே ரகம்.

கள்ளத் தொடர்பு, நம்பிக்கைத் துரோகம், ஏமாற்றம் என்ற வழக்கமான டெம்ப்ளேட்டை எடுத்துக் கொண்டு திரில்லர் படத்தைக் கொடுக்க நினைத்திருக்கிறார் இயக்குனர் ஷராங். ஆனால் ஓ.டி.டி.க்கெனவே நேர்ந்து விடப்பட்ட ஸ்லோ கதையோட்டமும், யூகிக்கக் கூடிய ட்விஸ்ட்டுகளும் சுவாரஸ்யத்தை குறைக்கிறது.

கதை உருவாக்கத்தில் இன்னும் மெனக்கெட்டிருந்தால் நடுவண், பார்க்கக்கூடிய படமாக இருந்திருக்கும்.



# சிறார்களிடம் வன்முறை மனோபாவம்...

பிறப்பு மூலம் பிரத்யேக தன்மைகளை பெற்றிருந்தாலும், வளர்ப்பின் மூலம் குழந்தைகளுக்கு வாய்க்கும் வாய்ப்புகள் அதிகம். 'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவர் ஆவதும், தீயவர் ஆவதும் அன்னை வளர்க்கையிலே' என்ற பாடலுக்கேற்ப, குழந்தை வளர்ப்பில் காணப்படும் குறைபாடு அவர்களின் வருங்கால குற்றப்பாடு ஆவதற்கு வழிசெய்துவிடுகிறது.



# வளர்ப்பு முறை காரணமா?

அதை நிலை நிறுத்துவதுபோல பல சம்பவங்கள் இங்கும் இந்தியாவின் பிற இடங்களிலும் அண்மையில் கூட நிகழ்ந்துள்ளன.

சேலம் மாவட்டத்தில் உள்ள கொத்தாம்பாடி பாரதியார் நகர் பகுதியில் காட்டுராஜா-காசி அம்மாள் என்ற தம்பதியினர் வசித்து வந்தனர். இவர்கள் தங்கியிருந்த வீட்டுக்கு கடந்த 12ஆம் தேதி தீ வைக்கப்பட்டு, 2 பேரும் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்து விட்டனர். தாத்தா-பாட்டியை தீ வைத்து உயிரோடு எரித்துக் கொன்றது 16 வயதுடைய அவர்களது பேரன் என்பது தான் அதிர்ச்சி.

''எனக்கு சரியாக படிப்பு வராமல் ஊர் சுற்றி வந்தேன். இதனை எனது பெற்றோர் கூட கண்டிக்கவில்லை. ஆனால் என் தாத்தாவும் பாட்டியும், என்னை கண்டித்தனர். மேலும் எங்கேயாவது வேலைக்கு சென்று தொழிலை கற்றுக்கொள் என்றும் அடிக்கடி சொல்லிவந்தனர்.

கடந்த 12ஆம் தேதி நான் மது குடித்துவிட்டு ஆற்றோரத்தில் பீடி புகைத்துக் கொண்டு இருந்தேன். அப்போது அங்கு வந்த எனது பாட்டி என்னை துடைப்பத்தால் அடித்து, கடுமையான வார்த்தைகளால் திட்டினார். நண்பர்கள் முன்னிலையில் அவமானப்படுத்தியதால் தாத்தா, பாட்டி இருவரையும் கொலை செய்ய முடிவு செய்தேன். அதன்படி எங்கள் வீட்டிலிருந்து 2 லிட்டர் மண்ணெண்ணெய் மற்றும் ஒரு பூட்டை எடுத்துக் கொண்டு தாத்தா-பாட்டி வீட்டுக்கு சென்றேன். அங்கு இருவரும் உறங்கியதை உறுதி செய்தபின் வீட்டின் வெளிப்புறம் கதவை பூட்டி மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்தேன்'' என்று வாக்குமூலம் கொடுத்துள்ளான்.

**க**டந்த மாதம் , சேலம் சாமிநாதபுரத்தில், கஞ்சா பழக்கத்தை கைவிடும் படி கண்டித்த ரியல் எஸ்டேட்





பேரனால் பலியான தாத்தா, பாட்டி

அதிபரான அக்காள் கணவரை பாலமுருகன் என்ற இளைஞர் சுத்தியால் அடித்துக் கொன்ற சம்பவம் நடந்தது.


கர்நாடகா மாநிலம் பெலகாவியை சேர்ந்த சங்கரப்பா என்பவரது மகன் ரகுவீர் கல்லூரிக்கு போகாமல் நேரத்தை முழுக்க பப்ஜி விளையாடுவதிலேயே செலவழித்து வந்திருக்கிறான்.

இந்த நிலையில், கடந்த 8-ம் தேதி செல்போன் ரிசார்ஜ் செய்து பப்ஜி விளையாடுவதற்காக ரகுவீர் தனது தந்தையிடம் பணம் கேட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளான். சங்கரப்பா பணம் கொடுக்க மறுத்ததால் ஆத்திரமடைந்த ரகுவீர் அவரது தந்தையை வெட்டி கொலை செய்திருக்கிறான்.

மகாராஷ்டிராவின் புனே மாவட்டத்தில் கடந்த மே மாதம் 20ஆம் தேதி 13 வயது சிறுவன் தனது 40 வயது தந்தையை கூர்மையான ஆயுதத்தால் குத்திக் கொலை செய்துள்ளான்.

இதையொட்டிய சம்பவம் ஒன்று உத்தரபிரதேச லக்னோவில் நடந்துள்ளது.

அகிலேஷ் யாதவ் (45) என்பவர் மகன் அமன் யாதவ் பத்தாம் வகுப்பு



பிரகாஷ்...

**சென்னை எம்ஜிஆர் நகரை சேர்ந்த செல்வம். இவரது மகன் பிரகாஷ் (20), வேலைக்கு சென்று வந்தாலும், வீட்டு செலவுக்கு பணம் கொடுக்காமல், நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்தி வந்துள்ளார். இதை அவரது தந்தை செல்வம் பலமுறை கண்டித்துள்ளார். ஆனாலும், பிரகாஷ் திருந்தாததால், அவரை வீட்டை விட்டு வெளியே அனுப்பியுள்ளார். இதனால், பிரகாஷ் தனது நண்பர்களுடன் தனியாக வசித்து வந்துள்ளார்.**

**இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு தனது தாயாரை பார்ப்பதற்காக பிரகாஷ் மதுபோதையில் வீட்டிற்கு சென்றுள்ளார். போதையில் இருந்த மகனை வீட்டிற்குள் அனுமதிக்காமல் செல்வம் தகராறில் ஈடுபட்டு, அடித்துள்ளார். அப்போது பிரகாஷ் , 'என்னையே அடிக்கிறீயா...?' என்றபடி கையில் வைத்திருந்த கத்தியால் தந்தையை குத்தியுள்ளார். இதில் அவர் ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து உயிரிழந்தார்.**

படித்து வந்துள்ளான். கடந்த 19ஆம்தேதி காலை அப்பகுதியில் நடைப்பயணத்திற்கு சென்றுவிட்டு அகிலேஷ் யாதவ் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது அவரது வீட்டிற்கு அருகிலுள்ள ஒரு கடையில் மகன் அமன் யாதவ் அமர்ந்திருப்பதைக் கண்டார். உடனே தனது மகனை வீட்டிற்கு அழைத்து சென்று, 'பள்ளித் தேர்வில் குறைந்த மதிப்பெண் பெற்றதால் தேர்ச்சி பெறவில்லை. மீண்டும் 10ஆம் வகுப்பு மறுதேர்வு எழுதவும் தயாராகாமல் அலட்சியமாக உள்ளாய்' என்று திட்டியுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த அமன் யாதவ், வீட்டிற்குள் இருந்த இரட்டை குழல் துப்பாக்கியை எடுத்துவந்து, தனது தந்தையை நோக்கி சரமாரியாக சுட்டான். அப்போது சுதாரித்துக் கொண்ட போதும், அகிலேஷின் தொடையில் எதிர்பாராதவிதமாக குண்டு பாய்ந்தது.

**அ**ந்தக்காலத்தில் கூட்டுக் குடும்பத்தில் நடந்த குழந்தை வளர்ப்பு... அன்பு, அரவணைப்புடன் பலரது



பாலமுருகன்



பாலமுருகனின் அக்காள் கணவர்

அறிவு, ஆலோசனையுடன் நடந்தது. பாதுகாப்புணர்வுடனும், எச்சரிக்கையுடனும் குழந்தைகள் வளர்ந்தார்கள். அதனால், குடும்பத்தார் மீதே நடத்தும் இதுபோன்ற கொடுங்குற்றங்கள் பெரும்பாலும் நடந்ததில்லை.

இப்போது தனி குடும்பத்தில் சுற்றம் சூழாத சூழலில், சுய நல நோக்குடன், குறுகிய மனப்பான்மையுடன் வளர்க்கப்படும் குழந்தைகள் மனதும் குறுக்கு வழியில் செல்கிறது. சுய முன்னேற்றத்துக்காக எதையும் செய்யலாம் என்ற அறிவுரை பிஞ்சு நெஞ்சில் விதைக்கப்படுகிறது. மேலும், தேவையற்ற, அதிக செல்லத்துடன் வளர்க்கப்படுகிறது. அந்த அன்பு குறையும்போது ஆத்திரம் கொள்கிறது.

மேலும் குழந்தைகள் செய்கின்ற சின்னசின்ன தவறுகளை பெரிதாக சித்தரிப்பதும், கடுமையாக நடந்து கொள்வதும் மோசமான விளைவை தருகிறது.

குழந்தை வளர்ப்பில்

பெற்றோர், ஆசிரியர், சமூகம் யாவும் காரணிகளாக இருந்தாலும், பெற்றோரே பெரிதும் கடமைப்பட்டவர்.

ஒவ்வொரு பெற்றோருக்குமே தங்களது பிள்ளைகள் எதிர்காலத்தில் புத்திசாலிகளாக, வெற்றியாளர்களாக வர வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அதற்காக தங்கள் நிகழ்காலத்தை கூட பணயம் வைக்கின்றனர். ஆனால், எதுவரை அந்த முயற்சி இருக்க வேண்டும் என்று தெரியாமல், முழுதும் பிள்ளைகளை சார்ந்தே செயல்படுகின்றனர். அதே நேரத்தில், புத்திசாலிகளாக, வெற்றியாளர்களாக அவர்களை ஆக்கும் முயற்சியால் பிள்ளைகளும் மன அழுத்தத்து க்கு ஆளாகின்றனர்.

★ மிகவும் கண்டிப்பான பெற்றோர் சர்வாதிகார பெற்றோர் ஆகின்றனர். இவர்கள் அதிக எதிர்பார்ப்புகளை குழந்தைகள் மீது திணிப்பார்கள். பெற்றோரின் கண்டிப்பு காரணமாக குழந்தைகள் தண்டனையிலிருந்து தப்பிக்க பொய்யர்களாக மாற வாய்ப்புள்ளது. சில குழந்தைகள் முரட்டுதனமாக நடந்துகொள்ளவும் செய்கின்றனர். நாளடைவில் பெரியவர்களை மதிக்காமல்

**ஒரு குழந்தை ஆரோக்கியமான சூழலில் வளர்ந்தால் மட்டுமே அதிக புதிய அனுபவங்களை பெறும். மகிழ்ச்சி நிறைந்த குழந்தை பருவமே, அறிவு மிகுந்த இளமைப்பருவமாக மாறும்.**

**குழந்தைகளுக்கு தனிமை படுத்துதல் பெரும் அவஸ்தை. அவர்களின் அனைத்து தருணங்களிலும் அவர்களோடு அணுகி இருக்க வேண்டும்.**

**குடும்ப அமைதி மிக முக்கியம். பெற்றோர், பெரியவர்கள் சண்டை, அவதூறு போன்றவை குழந்தைகளை மிகவும் பாதிக்கும். அது நீண்ட கால மனப்பாதிப்பாகவோ, அறிவு, செயல்திறன் குறைபாடாகவோ, நடத்தை மாற்றமாகவோ, தவறான பழக்க வழக்கமாகவோ மாறும். வாழ்க்கையை பற்றிய எதிர்மறை எண்ணத்தை விதைக்கும்.**

**'உனக்கு வயசு போதாது, இதை நாங்கள் தாம் முடிவு செய்வோம்' என்று வளரிளம் பருவத்தில் நம் முடிவுகளை திணிக்கக்கூடாது. செய்யப்போவது எது, அதன் விளைவு எது என்பதை விளக்கி, அவர்கள் விருப்பத்தையும் ஆராய்ந்து, அதில் தவறு இருந்தால் சுட்டிக்காட்டி முடிவெடுக்க உதவ வேண்டும். எந்த ஒரு குழந்தையின் எண்ணம் அடிக்கடி நிராகரிக்கப்படுகிறதோ அக்குழந்தை ஒருவிதமான பாதுகாப்பற்ற உணர்வை அடைகிறது.**

**குழந்தைகள் அவர்களுக்குத் தேவையானவற்றை தேர்ந்து எடுத்துக்கொள்ளவும், தனிப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்தவும் அனுமதிக்கவேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே அவர்களுடைய விருப்பங்களை பெற்றோர்களிடம் வெளிப்படுத்த அவர்கள் விழைவார்கள்.**

போகின்றனர்.

★ இப்படி நடந்தால் அதை அடையலாம், அப்படி செய்தால் இதை பெறலாம் என இலக்கு நிர்ணயித்து அதன்படி நடத்துபவர்கள் அதிகார பெற்றோர். குழந்தைகள் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடையாவிட்டாலும் அவர்களை பெரிதும் தண்டிக்கமாட்டார்கள், கண்டிப்பார்கள்.

★ குழந்தையிடம் திறந்த மனதுடன் இருப்பவர்கள் சுதந்திரம் அளிக்கும் பெற்றோர். இவர்கள் குழந்தைகளிடம் நட்பாக பழகுவார்கள். சிக்கல்களை சுமுகமாக தீர்ப்பதற்கான வழிகளையும் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்பார்கள். கடுமையை காட்டாமல், குழந்தைகளிடம் கனிவாக நடப்பார்கள். கூடுதல் சுதந்திரத்தை கொடுப்பதோடு, அவர்களை அக்கறையுடன் அரவணைக்கவும் செய்வார்கள்.

**த**வறான வார்த்தைகளை பயன்படுத்துதல், சபித்தல் போன்ற ஒழுக்கத்துக்கு மாறான செயல்களில் இருந்து குழந்தைகளை நல்வழிப்படுத்துவது 'பேரெண்டிங்' என்னும் குழந்தை வளர்ப்பு முறையில் முக்கியம்.

தங்கள் குழந்தைகளை எதிர்காலத்தில் அதிக திறன்படைத்தவர்களாக மாற்றுவதற்காக,

பொத்திப்பொத்தி வைத்து, பண்ணைக் கோழிக்கு ஊசி மூலம் மருந்தையும் உணவையும் செலுத்துவதுபோல், அறிவையும், அன்பையும் செலுத்தி வளர்க்கும் முறை 'சிக்கன் பேரண்டிங்' எனப்படும். இதுவே இப்போதைய நம் மக்களின் குழந்தை வளர்ப்பு முறையாக இருக்கிறது.

சீனாவில் உள்ள மக்கள் இந்த சிக்கன் பேரண்டிங் முறையை மேற்கொள்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏன், அவர்கள் இந்த மனோபாவத்தை பெற அவர்களுக்கு கோழி ரத்தத்தை செலுத்துவதாக கூட பேச்சு கிளம்பியது.

அமெரிக்காவில் உள்ள பெற்றோர் வேறு முறையை கையாளுகின்றனர். அது 'ஹெலிகாப்டர் பேரண்டிங்.' அதாவது குழந்தைகளை வெவ்வேறு பயிற்சி வகுப்புகளில் சேர்த்து அவர்களை படுத்தி எடுப்பதுதான்.

இதுபோன்று பல்வேறு பேரண்டிங் முறைகள் உள்ளன. ஆனலும், அவை யாவும் அன்பு, அதிகாரம், அலட்சியம் என்ற மூன்று இயல்புகளின் வெளிப்பாட்டையே குறிக்கும்.

**மு**ந்தைய காலங்களில்... குழந்தைகள் மழலைப் பருவத்தில் சிட்டுக்குருவிகள் போல் சிறகடித்து பறந்தார்கள். விளையாட்டுக்கு பின்பே கல்வி இருந்தது. கல்வியும் விளையாட்டாக இருந்தது. விளையாட்டுக்கும் கல்விக்கும் ஊடாக குடும்ப தொழில், வாழ்க்கை முறைகளை அனுபவ அறிவாக (பிராக்டிகல்) படித்தனர். அதனால் அதிகம் பதற்றமும் பரபரப்பும் இல்லாமல் வாழ்ந்தார்கள்.

இப்போது அது இல்லை என்பதோடு, இனி இப்போதைக்கு இருக்க வாய்ப்பில்லை என்றும் தெரிகிறது. ஏனெனில், நாட்டின் பொருளாதார அமைப்பே மக்களின் தனிப்பட்ட வாழ்வியலையும் தீர்மானிக்கிறது. நுகர்வு கலாச்சாரம் மேலோங்கியுள்ள இந்த காலகட்டத்தில், தான், தனக்கு என்று வாழும் வழிமுறையையே வாழ்வியலாக கொண்டுள்ளனர்.

அதோடு அந்நிய கலாச்சார ஊடுறுவல், உள்ளங்கைக்குள் தவழும் டிஜிட்டல் பொழுது போக்கு... போன்றவை இளம் வயதினரிடம் வன்முறை மனோபாவத்தை ஊக்குவிக்கும் கருவிகளாகி போனது சாபம்தான்.

**-பரிதி பாலன்.**

# ஐயா.பா.இராமச்சந்திர ஆதித்தனார்



## நினைவு நாவல் போட்டி

## ரூ.2½ லட்சம் பரிசுடன்

- ★ என்றென்றும் வாசகர்கள், முகவர்கள் மற்றும் எழுத்தாளர்களிடம் நம்பர் 1 இடத்தைப் பிடித்து இருக்கும் கண்மணி, மீண்டும் ஒரு நாவல் போட்டியை அறிவிப்பதில் பெருமை அடைகிறது.

- ★ புதுபுது எழுத்தாளர்களை உருவாக்கும் உத்வேகத்துடன் தன் கடைசி காலம் வரை வாழ்ந்த தேவி ஆசிரியர் ஐயா.பா.இராமச்சந்திர ஆதித்தனார் நினைவாக நடத்தும் மெகா நாவல் பரிசுப் போட்டியில் கலந்து கொள்ள படைப்பாளர்களை வரவேற்கிறது கண்மணி.

- ★ நிகழ்கால சமூகச் சூழலில்... கூட்டுக்குடும்பத்தின் குதூகலம், உறவுகளின் உன்னதம், பெண்மையை போற்றும், பாரம்பரியத்தின் பெருமைகளை எடுத்துரைக்கும் விதத்தில் குடும்ப நாவல்கள், கிரைம், காதல், திகில், சரித்திரம், சஸ்பென்ஸ்... என எந்த வகை நாவல்களையும் போட்டிக்கு அனுப்பலாம்.

- ★ நாவலில் 12,000-க்கு குறையாமல் வார்த்தைகள் இடம் பெற வேண்டும். காகிதத்தின் ஒரு பக்கம் மட்டுமே எழுத்துகளை டைப் செய்ய வேண்டும்.

| முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு | ஆறுதல் பரிசு |
| --- | --- | --- | --- |
| ரூ. 1 லட்சம் | ரூ. 50 ஆயிரம் | ரூ. 25 ஆயிரம் | 5 பேருக்கு தலா ரூ. 15 ஆயிரம் |

- ★ எதிலும் வெளிவராததாகவும், வேறு எந்த பத்திரிகைக்கும் அனுப்பப்படாததாகவும், சொந்த கற்பனையாகவும், புதிய படைப்பாகவும் இருக்க வேண்டும். அதற்கான உறுதிமொழி கடிதமும் இணைத்து அனுப்ப வேண்டும்.
- ★ பரிசுக்குரிய நாவல் ஒரே தரத்தில் பல இருந்தால் பரிசுகள் பகிர்ந்து அளிக்கப்படும்.
- ★ பரிசு பெற்ற நாவல்கள் மற்றும் தேர்வு செய்யப்பட்ட நாவல்களின் விபரம் கண்மணி, பெண்மணி இதழ்களில் வெளியிடப்படுவதுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு நாவல் பிரசுரிக்கப்படும்.
- ★ தேர்வு பெறாத கதைகள் திருப்பி அனுப்பப்படாது.
- ★ குறுநாவல்கள் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படாது.
- ★ நாவல் தொடர்பான தொலைபேசி, கடித தொடர்புகளுக்கு நிச்சயம் அனுமதியில்லை.
- ★ நாவல் அனுப்ப வேண்டிய கடைசி தேதி : 11-10-2021


நாவல் அனுப்ப வேண்டிய முகவரி:

# நாவல் போட்டி

தேவியின் கண்மணி

மாலைமுரசு பில்டிங், 246, அண்ணா சாலை, சென்னை - 600 006.

## ப்ளாப் ஆனாலும் பல்க்கா 350 கோடி!



கடந்த சில ஆண்டுகளில் பாலிவுட்டில் சல்மான்கான் நடித்த படங்கள் பிளாப் ஆனாலும், அவர் தொகுத்து வழங்கும் பிக்பாஸ் நிகழ்ச்சி ஹிட் அடித்து வருகிறது.

மையமாக பேசி சொதப்பாமல் போட்டியாளர்களை லெப்ட் அன்ட் ரைட் வாங்கும் சல்மானின் அணுகுமுறை தான் இந்த நிகழ்ச்சியில் ஸ்பெஷல்.

இதற்கு முன்பு வரை பாலிவுட் பிக்பாஸ் தொகுத்து வழங்க ரூ.100 முதல் ரூ.300 கோடி வரை சம்பளம் வாங்கிய சல்மான், அக்டோபரில் தொடங்கவுள்ள 15வது சீசனை தொகுத்து வழங்க ரூ.350 கோடி சம்பளம் பேசி ஓகே செய்திருக்கிறாராம்.

## கொதித்துப் போன மகேஷ்பாபு

ஐதராபாத்தில் 6 வயது சிறுமி வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து பல பிரபலங்கள் சமூக வலைதளங்களில் கருத்து பதிவிட்டனர்.



தெலுங்கு சூப்பர் ஸ்டார் மகேஷ்பாபு தன் பதிவில், ''6 வயது சிறுமிக்கு இழைக்கப்பட்ட இந்த கொடூரமான அநீதி, ஒரு சமூகமா நாம எவ்வளவு மோசமான நிலையில் விழுந்து கிடக்கோம்'ங்கிறதை உணர்த்துது.

நம்ம குழந்தைங்க வீட்டுல பாதுகாப்பா இருக்காங்களா அப்படிங்குறதே பெரிய கேள்விக்குறியா மாறிடுச்சு. குழந்தையை பறிகொடுத்த அந்த குடும்பம் எத்தனை பெரிய வலியை அனுபவிக்கும்'னு நினைக்கும் போது மனசு வலிக்குது, அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுத்து சிறுமிக்கும், அந்த குடும்பத்துக்கும் நியாயம் கிடைக்கச் செய்யணும்'' என்று மனம் வெந்து போய் ட்வீட் செய்திருக்கிறார்.



**கொஞ்சம் மருத்துவம்... நிறைய மனிதம்–46**

ஏழ்மையான, ஆனால் நன்கு உழைக்கக்கூடிய மனிதர்கள் நிரம்பிய குடும்பமாம் அது. நினைவு தெரிந்த நாள் முதல் தாய் மஞ்சள் கயிற்றிலேயே தாலி அணிந்திருப்பதைப் பார்க்கிறான் மகன். தான் பெரியவனாகி அம்மாவுக்குத் தங்கச் சங்கிலி எடுத்துக் கொடுக்க வேண்டும் என்பது அவனுடைய நெடுநாள் விருப்பம். பெரியவனாகி வேலை பார்க்கத் துவங்கிய அவனுக்கு, திருமணம் முடிந்து நான்கு வயதில் ஒரு குழந்தையும் இருக்கிறது.

# தூங்காமல் தூங்கி...



டாக்டர். அகிலாண்ட பாரதி

சிறுகச் சிறுக பணம் சேர்த்து தனது போக்குவரத்திற்காக முதன் முதலில் ஒரு பைக் வாங்குகிறான். அதன்பின் அம்மாவுக்குச் சங்கிலியும் வாங்கிவிட்டான். அம்மா குலதெய்வம் கோவிலில் வைத்து அதை வழிபட்ட பின்புதான் அணிந்து கொள்வேன் என்று கூற, அம்மாவையும், தன் நான்கு வயது மகனையும் வைத்துக்கொண்டு கிட்டத்தட்ட 120 கிலோ மீட்டர்கள் தள்ளி உள்ள குலதெய்வக் கோயிலுக்கு புதிய பைக்கில் பயணமாகிறான் அந்த இளைஞன்.


டாக்டர்.அகிலாண்ட பாரதி

வழிபாடு முடித்து, புதிய சங்கிலியையும் அணிந்துகொண்டு திரும்பி வருகையில் அவன் சற்று கண்ணயர, ஒரு திருப்பத்தில் கவனம் தொலைந்து சுவற்றில் போய் மோதுகிறது புதிய பைக். தலைக்காயமடைந்து இளைஞனும், அவனது தாயும் அந்த இடத்திலேயே உயிரிழக்க, குழந்தை மட்டும் தூக்கி வீசப்படுகிறது. அருகில் உள்ளவர்கள் குழந்தையைக் காப்பாற்றி கொண்டு மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னாலேயே தந்தை மற்றும் பாட்டியின் உயிரற்ற உடல்களும் வந்து சேர்ந்தன.

எத்தனையோ உயிரிழப்புகளை தினமும் சந்தித்தாலும் கடந்த இரண்டு நாட்களாக என்னை மன உளைச்சலுக்குத் தள்ளி விட்டது இந்த நிகழ்வு. விபத்துக்குக் காரணம் அந்த இளைஞன் இரவில் ஒரு கட்டிடத்திற்கு செக்யூரிட்டி வேலை பார்த்துவிட்டு, பகலில் ஆட்டோ ஓட்டுவானாம். அப்படித் தூக்கமில்லாமல் உழைத்ததில் நடந்ததுதான் இந்த விபத்து என்று கூறினார்கள்.

சமீபமாக தூக்கமின்மை காரணமாக நடக்கும் பல விபத்துக்களும் உடலியல் நோய்களும் என் கண் முன் வந்து போயின. கடந்த சில ஆண்டுகளில் இந்த பிரச்சனை பன்மடங்கு அதிகரித்திருப்பதை நன்றாகவே உணர முடிகிறது.

**போது**மான ஓய்வு இல்லாமல் எந்த உயிரினத்தாலும், ஏன் உயிர் இல்லா எந்திரத்தால் கூட தொடர்ந்து இயங்க முடியாது. தொடர்ச்சியாக ஓடிக் கொண்டிருக்கும் வாகனமும், தொலைக்காட்சியும், அலைபேசியும் கூட ஓய்வை

நாடுகிறது. இரவெல்லாம் விழித்து காவல் காக்கும் நாய்கள் பகலில் தங்களுக்குத் தேவையான உறக்கத்தைத் தாமாகவே எடுத்துக் கொள்கின்றன. பறவைகள் விலங்குகள் என எதுவும் தங்கள் உடலுக்குள் இருக்கும் உயிரியல் கடிகாரத்தை மீறி செயல்படுவதில்லை.


அப்படி இருக்க மனிதன் மட்டுமே முதலில் நன்றாக வரும் தூக்கத்தை அவனாகவே தவிர்க்கிறான், அதற்குப் பின்

**உணவு, உடை, உறையுள் ஆகியவை இன்றியமையாத தேவைகள் என்பது சிறுவயது முதலே நமக்கு கற்பிக்கப்பட்டு இருக்கிறது. அதில் உறையுள் என்பது நன்றாக உறங்குவதையும் சேர்த்து தான் என்பது என்னுடைய திடமான எண்ணம். இந்தத் தலைமுறையைச் சேர்ந்த பல மனிதர்களுக்கு, கடுமையாக உழைத்து முன்னேற வேண்டும், அதற்கு ஒரே வழி முழுநேரமும் உழைப்பது, தூங்குவது கூட தவறான செயல் என்ற கருத்து மனதில் ஆழமாக விதைக்கப்பட்டிருக்கிறது.**

அவனுக்கு அந்தத் தூக்கம் வேண்டினாலும் கிடைக்காத எட்டாக்கனியாகி விடுகிறது. பத்ரகிரியார் என்ற சித்தர் ''தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது எக்காலம்?'' என்று கேட்கிறார். தொந்தரவற்ற நிம்மதியான உறக்கம் வேண்டும் என்பதை உடல்நலத்தில் முக்கியம் உணர்ந்த அனைவருமே ஒத்துக் கொள்வார்கள்.

முதியவர்கள் பலர் தூக்க மாத்திரை வேண்டும், தூக்கமே வர மாட்டேன் என்கிறது என்று கூறிக் கேட்டிருப்போம். ஆனால் 30 வயது நெருங்கிய பல இளைஞர்கள் 'தூக்கமே வரலை' என்று கூறுவதையும், அதனால் அவர்களது நாடித் துடிப்பு அதிகரித்தல், உடல் எடை அதிகரித்தல், அல்சர், முடி கொட்டுதல் போன்ற விளைவுகளை சந்திப்பதையும் இப்போது அடிக்கடி பார்க்கிறோம்.

சிறுவர்கள், இளைஞர்கள் அனைவருமே இந்த லாக்டௌன் காலகட்டத்தில் அலைபேசி, விளையாட்டு என்று நேரம் கழித்து உறங்கி அதிகாலையிலும் வெகு நேரம் கழித்தே விழிக்கிறார்கள். இதனால் குடும்பத்தில் உள்ள பெரியவர்களின் உறக்கமும் கெட்டுப் போகிறது.



குழந்தைகள் இரவு 12 மணிக்குப் படுத்து 10 மணிக்கு எழுந்து கொள்ளலாம், காலையில் எழுந்து ஆறு மணிக்கு பால்காரரை எதிர்பார்க்க வேண்டிய அம்மாவால் பத்து மணி வரைக்கும் தூங்க முடியுமா? அரைகுறை தூக்கத்தில் விழித்துக் கொள்ளும் தாய்க்கு, அன்றைய பொழுது முழுவதும் சோர்வாகவே கழிகிறது. கூடவே தலைவலியும் சேர்ந்து கொள்கிறது. ‘குழந்தைகள் வீட்டில் இருப்பதால் தங்களுக்குள் சண்டை இடுகிறார்கள் அல்லது சொல்வதைக் கேட்காமல் தொடர்ச்சியாகத் தொலைக்காட்சி பார்க்கிறார்கள் அதனால் எனக்கு மன அழுத்தம் அதிகரிக்கிறது’ என்று புகார் செய்யும் தாய்மார்களை தினமும் சந்திக்கிறேன்.

**நி**ம்மதியான உறக்கத்திற்கு நாள் முழுவதும் நாம் மேற்கொள்ளும் நல்ல பழக்கங்கள், தூங்குவதற்கு முன் மனதை அமைதியாக வைத்துக் கொள்வது, உறங்கும் இடமும் அறையும் நம் மனதிற்கு ஏற்றாற்போல் இருப்பது ஆகியவை அவசியம் என்கிறார்கள் நிபுணர்கள்.

மேலை நாடுகளில் நல்ல தூக்கத்தை வலியுறுத்துவதற்காகவும் வழிகாட்டுவதற்காகவும் அமைப்புகள் இருக்கின்றன.

ஒரு வாரத்திற்குத் தொடர்ச்சியாக அலாரம் வைத்து ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எழுந்தீர்கள் என்றால் எட்டாவது நாள் அதே நேரத்திற்கு தன்னாலேயே விழிப்பு வந்து விடுவதைக் கவனித்திருப்பீர்கள். தொடர்ச்சியாக ஒரு வேலையைக் குறிப்பிட்ட நேரத்திற்கு செய்து வந்தால் உடலே ஒரு வகையான நேரக் கட்டுப்பாட்டுக்குப் பழகிவிடும். அத்தகைய நேரக் கட்டுப்பாட்டில் உடல் இயங்கும் பழக்கத்தை பயலாஜிக்கல் கிளாக் (Biological clock)



என்பார்கள். உறக்கம் மட்டுமல்ல, உணவு நீர் அருந்துதல் எல்லாவற்றையும் நம்மால் இப்படி சீரான நேரத்திற்குப் பழக்கிவிட முடியும்.

நல்ல உறக்கம் ஒரு மனிதனின் உடல் நலம் மற்றும் மன நலத்துக்கு மட்டுமல்ல, அவனின் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் உதவக்கூடிய ஒன்று. நன்றாகத் தூங்கி எழுந்து ஒரு மணி நேரம் படிக்கும் படிப்பு விடிய விடிய தூங்காமல் அமர்ந்து எட்டு மணி நேரம் படிப்பதை விட மேலானது. வழக்கத்தை மீறி விழித்திருக்க விழையும் அந்த 8 மணிநேரமும் காஃபி, டீ, சாக்லெட் மற்றும் வேறு பல துரித உணவுகளை நம் உடல் நாடுவதை உணர்ந்திருப்பீர்கள். அந்த தேவையற்ற பொருட்கள் உடலுக்கு அதிக கலோரிகளை வழங்குகின்றன.

நீண்ட நேரம் வாகனம் ஓட்டும் வாகன ஓட்டிகள் அடிக்கடி வண்டியை நிறுத்தி தேனீர் அருந்துவதைப் பார்த்திருப்பீர்கள். இப்படி தேவையில்லாத எரிபொருளை உடலுக்கு செலுத்தி ஓய்வின்றி உழைப்பதால் வெகுகாலத்திற்கு அவர்களால் உழைக்க முடியாது. நல்ல முன்னேற்றம் கண்டுள்ள




**நன்றாக உறங்கி எழவேண்டிய வழக்கத்தை sleep hygiene என்று கூறுகிறார்கள். அதன்படி ஒரு மனிதனுக்கு 8 மணி நேர உறக்கம் அவசியம் தேவை. 8 மணி நேரமும் தொடர்ச்சியாக உறங்கி எழுவது சிறந்தது. அதற்கு வாய்ப்பு இல்லை என்றால் இரவில் ஏழு மணி நேரமும் மதியம் ஒரு மணி நேரமும் என்றோ அல்லது 6 மணி நேரம் + 2 மணி நேரமும் என்றோ கூட அதைப் பிரித்துக் கொள்ளலாம்.**


**ஆனால் சூரியனுடன் உறங்கி சூரியனுடன் எழுந்தால் தான் மெலடோனின் என்ற ஹார்மோன் சீராக சுரக்கும். மனதை, உடலை சீரிய முறையில் இயங்கச் செய்யும் எத்தனையோ ஹார்மோன்களில் அதுவும் அவசியமான ஒன்று.**

தொழில் நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களின் உடல் நலத்தில் அக்கறை கொண்டவையாகவே இருக்கின்றன.

ஒரு டிரைவரை தொடர்ச்சியாக தினமும் எட்டு மணி நேரம் இரவில் வண்டி ஓட்டச் சொல்லும் நிர்வாகத்தை விட இரண்டு டிரைவர்களைப் போட்டு ஆளுக்கு ஐந்து மணிநேரம் ஓட்டச் சொல்லும் நிர்வாகத்திடம் பணியாளர்கள் அதிக நாள் வேலை செய்வார்கள். நம்பிக்கையான பணியாளர்கள் தொடர் வாடிக்கையாளர்களுக்கு வித்திடுவார்கள். அதனால் நிறுவனத்தின் முதலாளியும் நிம்மதியாகத் தூங்க முடியும்.

எங்கள் கிராமத்தில் 100 வயதைக் கடந்து வாழ்ந்த பாட்டி ஒருவர் முன்பு கூறினார், ''கரண்ட் இல்லாத காலத்துல ஆறு மணிக்கெல்லாம் சமைச்சு சாப்பிட்டு படுத்துருவோம். வீட்ல ஒரு சண்டை சச்சரவு





இருக்காது.. இந்த கரெண்டு வந்தபிறகு தான் இந்த முழிப்பும் சண்டைகளும்'' என்று. அறிவியல் வளர்ச்சியான மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்டதால் வந்த பல பலன்களுடன் இந்த ஒரு சிறு தீமையும் ஏற்பட்டு விட்டது என்றே கூறலாம்.

அறிவியலை நல்லதற்கும் பயன்படுத்தலாம் கெட்டதற்கும் பயன்படுத்தலாம் என்று பள்ளிக் காலங்களில் விவாதங்களில் (Science is a boon or bane) பேசியிருப்போம். அறிவியல் அளித்த கொடையான தொலைக்காட்சி, இணையம் போன்றவற்றில் அதிக நேரம் செலவழித்து விழித்திருந்து உடலைக் கெடுக்காமல் அதே அறிவியல் நமது உடல் நலத்திற்காக ஆராய்ந்து கூறிவரும் நல்ல கருத்துக்களையும் கேட்டு நன்கு தூங்கி எழுவோம்.

**(நல்ல உறக்கத்திற்கு செய்ய வேண்டியது என்ன?- அடுத்த இதழில்)**



பொதுவாக காபியையும் தேநீரையும் சூடாக பருகுவது தான் இயல்பு என்று கருதப்படுகிறது. ஆனால் சமீப காலமாக கோல்ட் காபி, கோல்ட் டீ உள்ளிட்டவையும் பெரும் வரவேற்பைப் பெற்று வருகின்றன.

காபியில் பல ரகங்கள் உள்ளன. எனினும் அரேபிகா, ரொபஸ்டா ஆகிய 2 ரகங்களே பிரசித்தி பெற்றவை. இவ்விரண்டில் நுகர்வோரின் கண்ணோட்டத்தில் அரேபிகா காபி தான் முதன்மை பெற்றுள்ளது. எனினும் இன்ஸ்டண்ட் காபிக்கு உறுதுணையாக இருப்பது ரொபஸ்டா ரகம் தான் என்பதை புறந்தள்ளி விட முடியாது.

# சமவெளிப் பகுதியில் விளையும் ஸ்டெனோபில்லா காபி



ரொபஸ்டா, அரேபிகா, ஆகிய ரகங்களைக் காட்டிலும் தரத்திலும் சுவையிலும் மணத்திலும் வெகு சிறப்பானது என்று 'ஸ்டெனோபில்லா காபி 'கருதப்படுகிறது. பிரான்ஸ் நாட்டினருக்கு மிகவும் பிடித்தமானது ஸ்டெனோபில்லா காபி தான் . கினியா சியாராலியோன், ஐவரிகோஸ்ட் உள்ளிட்ட நாடுகளில் ஸ்டெனோபில்லா காபி குறிப்பிட்டு சொல்லத்தக்க அளவிற்கு உற்பத்தி செய்யப்பட்டது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக 20ம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் இந்த காபி ரகம் படிப்படியாக அருகிவிட்டது. இந்நிலையில் 2018-ம் ஆண்டு சியாராலியோனில் ஸ்டெனோபில்லா காபி ரகம் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு புத்துயிர் ஊட்டும் பணி முழு வீச்சில் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

ஸ்டெனோபில்லா காபி சாகுபடி பரப்பை அதிகரிக்க பல்வேறு நாடுகளும் முன்னெடுப்புகளை




துரிதப்படுத்தி வருகின்றன.

ரொபஸ்டா, அரேபிகா உள்ளிட்ட காபி ரகங்களை குளிர் மிகுந்த மழைப்பகுதிகளில் தான் விளைவிக்க முடியும். ஆனால் ஸ்டெனோபில்லா காபியை குளிரற்ற சமவெளிப்பகுதிகளிலும் விளைவிக்க முடியும் என்பதை அறிவியல் ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. 24.09 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை உள்ள பகுதிகளிலும் ஸ்டெனோபில்லா காபியை சாகுபடி செய்ய முடியும் என்று வேளாண் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இதை கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ள இந்திய விவசாய அமைச்சகம் முதல்கட்டமாக குறிப்பிட்ட சில மாநிலங்களில் ஸ்டெனோபில்லா காபி சாகுபடிக்கு ஊக்கமளிக்க முற்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே காபி உற்பத்தியில் கர்நாடகா தான் முதலிடத்தில் உள்ளது. அதற்கு அடுத்த இடத்தில் கேரளா உள்ளது.

**-துங்கம்புலரி**



# அரசியலை அதிரவைக்கும் போதைப் பொருள் கடத்தல்!

காலங்காலமாக போதைப்பொருள் பயன்பாடு இருந்து வந்துள்ளது. ஆனால் சமீபகாலமாக இது அளவுக்கு அதிகமாக அதிகரித்துள்ளது என்பதை சர்வதேச புள்ளிவிவரம் துல்லியமாக பிரதிபலிக்கிறது. உலகிலேயே போதைப்பொருள் உற்பத்தியிலும் விநியோகத்திலும் ஆசியா கண்டம் தான் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் போதைப்பொருள் உற்பத்தி கேந்திரங்களாக விளங்குகின்றன.

இன்னும் சொல்லப்போனால் உலகிலேயே அபின் உள்ளிட்ட போதைப்பொருள் உற்பத்தியில் ஆப்கானிஸ்தான் தான் முதலிடத்தில் உள்ளது. ஹெராயினுக்கான கச்சாப்பொருளான 'பாப்பி' செடி சாகுபடியை முற்றிலுமாக நிறுத்திவிட்டதாக தலிபான்கள் வெளி உலகத்துக்குக் கூறிக்கொண்டிருப்பினும், ஆப்கானிஸ்தானில் பாப்பி செடியைப் பயன்படுத்தி போதைப்பொருள்கள் அதிக அளவில் தயாரிக்கப்பட்டு, உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவருகின்றன.

பல்வேறு நாடுகளில் இந்தச் செடிக்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதால், ஆப்கானிஸ்தான் கள்ளச்சந்தையில் இந்த போதைப்பொருள்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவிவருகிறது.

அந்தவகையில், இந்தியாவுக்கும் ஆப்கானிஸ்தானிலிருந்தே ஹெராயின் உள்ளிட்ட போதைப்பொருள்கள் சப்ளை செய்யப்படுகின்றன.

இந்தநிலையில், ஆப்கானிஸ்தானிலிருந்து கப்பல் ஒன்றின் மூலமாக இரண்டு கண்டெய்னர்களில்



சுதாகர்

ஹெராயின் போதைப்பொருள் கடத்திவரப்படுவதாக மத்திய வருவாய் நுண்ணறிவு இயக்குநரக (டி.ஆர்.ஐ) அதிகாரிகளுக்கு அண்மையில் ரகசியத் தகவல் கிடைத்தது. அதன்பேரில் அண்மையில் ஈரானிலிருந்து குஜராத் மாநிலத்தின் முந்த்ரா (அதானி குழுமத்திற்கு சொந்தமானது) துறைமுகம் வந்தடைந்த குறிப்பிட்ட கப்பலில் அதிகாரிகள் அதிரடி சோதனை மேற்கொண்டனர்.

அதில், சுமார் ரூ.21,000 கோடி மதிப்பிலான 3000 கிலோ ஹெராயின் போதைப்பொருள் இருப்பது தெரியவந்தது. அதையடுத்து, அதிகாரிகள் போதைப்பொருள்களைக் கைப்பற்றி, அந்தக் கப்பலில் இருந்த இரண்டு ஆப்கானிஸ்தான் ஆசாமிகளை

கைதுசெய்தனர். அந்த ஹெராயின் பெட்டிகள் மீது 'ஆஷி டிரேடிங் கம்பெனி', சத்தியநாராயணபுரம், விஜயவாடா என்ற முகவரி குறிப்பிடப்பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து, அந்த முகவரியில் ஆய்வு மேற்கொள்ள, புலனாய்வு அதிகாரிகள் விஜயவாடா விரைந்தனர். உள்ளூர் போலீஸாரின் உதவியுடன் அதிகாரிகள் விசாரித்ததில், அந்தப் பெட்டிகளில் குறிப்பிடப்பட்டிருந்த வீடு பூட்டிக்கிடந்திருக்கிறது.

மேற்படி, அந்த வீட்டில் முகப்பவுடர் வியாபாரம் செய்துவரும் காக்கிநாடாவைச் சேர்ந்த சுதாகர் - வைஷாலி தம்பதியர் வசித்து வந்தனர் என்பது போலீஸாருக்குத் தெரியவந்தது. வெளியுலகுக்கு முகத்தில் பூசும் பவுடர் இறக்குமதி செய்து விற்பனை செய்துவருவதைப்போல் காட்டிக்கொண்டு, சுதாகர், தன் மனைவி வைஷாலியின் பெயரில் ஏற்றுமதி, இறக்குமதி உரிமம் பெற்று ஜி.எஸ்.டி பதிவு செய்து கடத்தல் தொழிலில் ஈடுபட்டுவந்தது தெரியவந்தது.

காக்கிநாடா பகுதியைச் சேர்ந்த இந்தத் தம்பதி சென்னையில், கொளப்பாக்கம் பகுதியில் கடந்த எட்டு

**போதை, உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் இயல்பான நிலைக்குப் புறம்பான உச்ச நிலைக்கு மனிதர்களை உந்தித் தள்ளுகிறது. பிரச்சினைகளிலிருந்து தற்காலிக நிவாரணம் கிடைக்கிறது என்று சம்பந்தப்பட்டவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இந்த தற்காலிக நிவாரணம் நிரந்தர துன்பத்தில் தள்ளிவிடும் என்பதை அவர்களால் உணர முடியவில்லை. உணர்ந்தாலும் அதிலிருந்து மீளக் கூடிய மனோதிடம் அவர்களுக்கு இல்லை.**

ஆண்டுகளாக வாடகை வீட்டில் தங்கி, ஆந்திரா முகவரியைப் பயன்படுத்தி கடத்தல் தொழில் செய்துவந்ததும் அம்பலமானது. இதைத் தொடர்ந்து சென்னைக்கு விரைந்த டி.ஆர்.ஐ அதிகாரிகள், பதுங்கியிருந்த சுதாகர் மற்றும் அவரின் மனைவி வைஷாலியை கைதுசெய்தனர். அதையடுத்து, குஜராத்துக்கு அழைத்துச் சென்று அவர்களை விசாரித்த அதிகாரிகள், இருவரையும் குஜராத்தின் புஜ்

நகரிலுள்ள போதைப்பொருள் கடத்தல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

ஏற்கெனவே, சென்னை தம்பதியைத் தவிர்த்து ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த இருவர் குஜராத் புலனாய்வு அதிகாரிகளின் பிடியில் இருக்கும் நிலையில், இந்த ஹெராயின் கடத்தல் விவகாரத்தில் டெல்லியைச் சேர்ந்த சில முக்கியப் புள்ளிகளுக்கு தொடர்பு இருப்பதாக அதிகாரிகளால் சந்தேகிக்கப்படுகிறது.



பல வருடங்களாக இந்த போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுவரும் இந்தத் தம்பதியர் அவற்றை ஆப்கானிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டுவரும் வேலையை மட்டும்தான் பார்க்கிறார்கள் என்றும், இதற்குப் பின்னால் அரசியல் செல்வாக்கு மிக்க மாபியா கும்பல் இருப்பதாகவும் அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது.

இதையடுத்து போதைப்பொருள் வேட்டை முடுக்கிவிடப்பட்டது. புதுடெல்லி, நொய்டா, சென்னை, கோயம்புத்தூர், அகமதாபாத், மாண்ட்வி, காந்திதாம் மற்றும் விஜயவாடா உள்ளிட்ட இடங்களில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. டெல்லியில் உள்ள ஒரு கிடங்கில் இருந்து 16.1 கிலோ ஹெராயினும், நொய்டாவில் உள்ள குடியிருப்பு பகுதி ஒன்றில் இருந்து 10.2 கிலோ கொகைன்



பவுடரும், 11 கிலோ ஹெராயினும் பறிமுதல் செய்யப்பட்டன.

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த 4 பேர் உஸ்பெக்கிஸ்தானைச் சேர்ந்த ஒருவர் மற்றும் 3 இந்தியர்கள் என மொத்தம் 8 பேர் இந்த வழக்கு தொடர்பாக இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

**அ**தானி குழுமத்திற்கு சொந்தமான முந்த்ரா துறைமுகத்திலிருந்து ஹெராயின் கைப்பற்றப்பட்ட விவகாரம், அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அதிர்வலைகளை உச்சப்படுத்தியுள்ளது. காரணம் முந்த்ரா துறைமுகத்தில் ஹெராயின் கைப்பற்றப்படுவது தொடர் கதையாகவே உள்ளது.

கடந்த ஜூன் மாதம் 25,000 கிலோ எடையுள்ள ஹெராயின் கண்டெய்னர்கள் முந்த்ரா துறைமுகத்திலிருந்து கைப்பற்றப்பட்டன. இந்த ஹெராயினின் தோராய மதிப்பு சுமார் ரூ.1 லட்சம் கோடியாகும். ஹெராயின் கண்டெய்னர்கள் இதே முந்த்ரா துறைமுகத்துக்கு ஆந்திராவின் ஆஷி டிரேடிங் நிறுவனத்தின் பெயரால் கொண்டுவரப்பட்டதாக திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளன.



21 ஆயிரம் கோடி மதிப்பில் கடத்தப்பட்ட போதைப்பொருள்

டெல்லியை சேர்ந்த குல்தீப் சிங் என்பவர் பெயரில் இந்த கண்டெய்னர்கள் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. குஜராத்தில் இறக்குமதி செய்யப்பட்ட ஹெராயின் கண்டெய்னர்களை ராஜஸ்தானின் ஜெயதீப் லாஜிஸ்டிக்ஸ் என்ற நிறுவனத்துக்கு சொந்தமான லாரியில் டெல்லிக்கு கொண்டு சென்றுள்ளனர்.

குஜராத்தில் இருந்து டெல்லிக்கு சுமார் 1,176 கி.மீ. சென்ற இந்த ராஜஸ்தான் லாரி எந்த ஒரு சுங்கச் சாவடியையும் கடந்து செல்லவில்லை என்பது இன்னொரு அதிர்ச்சி தகவல். குஜராத்தில் இருந்து டெல்லிக்கு கிராமப் புற சாலைகள் மார்க்கமாகவே சுமார் ரூ.1 லட்சம் கோடி மதிப்புள்ள ஹெராயின் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. தற்போதுவரை


3,500 கோடி ரூபாய் மதிப்புள்ள போதை பொருள்

டெல்லியில்தான் இந்த ஹெராயின் போதைப் பொருள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம் என்கிறார்கள் போலீஸ் அதிகாரிகள். தற்போது டெல்லி போலீசார் ஹெராயின் வேட்டையைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

பொதுமக்களுக்கு சேவை புரிய வேண்டிய பொதுத்துறை நிறுவனங்களான துறைமுகங்களும், விமான நிலையங்களும், ரெயில்நிலையங்களும் அதானி, அம்பானி உள்ளிட்ட தொழிலதிபர்களுக்கு அடுக்கடுக்காக தாரைவார்க்கப்பட்டு வருகின்றன. அந்த தவறான செயல்களால் ஏற்படும் விளைவை முந்த்ரா நிகழ்வு எடுத்துரைக்கிறது என்று பொதுநல ஆர்வலர்கள் தெரிவித்துள்ளதை புறந்தள்ளி விடமுடியாது.


விமான நிலையங்கள், துறைமுகங்கள், ரெயில்நிலையங்கள் போன்ற பொதுத்துறை நிறுவனங்கள், பொது சேவைகள் உள்ளிட்டவற்றை தனியார்வசம் ஒப்படைத்தால் இந்தியாவின் எதிர்காலம் இருண்டு விடும் என்று சொல்வதைக் காட்டிலும் இந்தியாவே இல்லாமல் போய்விடும் என்று சொல்வேதே முற்றிலும் பொருத்தமாக இருக்கும். அரசியல் மற்றும் பொருளாதார அலங்கோலங்களை முடிவுக்கு கொண்டுவரவேண்டுமானால் தேவையற்ற தனியார்மயத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டியது அவசியமானது மட்டுமல்ல அவசரமானதும் கூட.

–உன்னலோங்கல்

தேவியின் கண்மணி
மலர்–33 vol- 33
மணி–36 Issue - 36
Published by R.Kannan Adityan on behalf of Murasu Publications from No.246, Anna Salai, Thousand Light Chennai-6 and Printed by R.Kannan Adityan at Deviyin Kanmani Achagam, 246, Anna Salai, Thousand Light, Chennai-6 Editor:R.Kannan Adityan



மாலை
முரசு
செய்திகள்
மாலைமுரசு
தொலைக்காட்சியில்
திங்கள்
முதல்
சனி
வரை
காலை
8 மணிக்கு
கதிரவன்
புதிய-விடியல்
திணம் ஒரு திருக்குறள்
நலம் தரும் யோகா
தன்னம்பிக்கை தளம்
கதிர் வீச்சு
ஸ்டாக் மார்க்கெட் நிலவரம்
தங்கம் வெள்ளி நிலவரம்
வானிலை அறிக்கை
நாள் நல்ல நாள்
காணத்தவறாதீர்கள்!


தேவியின்
கண்மணி
சிறார்களிடம்
வன்முறை
மனோபாவம்
காரணம் என்ன?
மக்களை
சுரண்டும்
டோல்கேட்
பிசினஸ்!
ப்ளான் பண்ணி வேலை செய்யணும்!
–நடிகை டாப்சி